
கல்கி



5 ஜனவரி 1969


CRISP NEWS...
YOUR FAVOURITE SATHE PICNIC BISCUITS
Now available in fancy air-tight carton
SATHE BISCUIT & CHOCOLATE CO. LTD., POONA-2.

டாடாவிஷன்



டாடாவின் பெருநோக்கு. தீர்க்க தரிசனமுள்ள கருத்துக்கள் இருந்து என்ன? அவை மக்களிடையே பரவாவிட்டால் என்ன பயன்?— அவை மக்களைத் தழுவது என்று செயல்படுத்த வேண்டாமா?

ஜாம்ஷெட்பூரில் நல்ல கருத்துக்கள் செயலாகாமல் வீணாவதில்லை. ஏற்ற உதவிகளும் சூழ்நிலையும் அங்கே உள்ளன. இத்தகைய ஒன்றே குடும்ப நலத்திட்டம்.

இந்தத் திட்டம் ஜாம்ஷெட்பூரில் தொடங்கிய மூன்று ஆண்டுகளுக்குள் 'விவாத-வட்டங்களில்' கலந்து கொள்வோர் தொகை பத்து மடங்காக உயர்ந்து விட்டது. விவாதத்தின் விளைவாக எழுந்த தெளிவான உறுதி: 1965-இல் ஜாம்ஷெட்பூரில் பிறப்புவிகிதம் குறையத் தொடங்கி விட்டது.

டாடா எஃகு ஸ்தாபனத்தின் குடும்ப நலத் திட்டத்தினால் ஜாம்ஷெட்பூர் மக்களுக்கு என்ன பயன்?

இரண்டு நவீன நகரத்துக் குடும்பத் திட்ட நிலையங்களும் ஆறு பிரசவ, குழந்தை பராமரிப்பு வி[illegible]களும் இலவசமாகக் குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்களை வழங்குகின்றன; ஆலோசனை கூறுகின்றன.

இரண்டு நகர நிலையங்களிலும் டாடா மெயின் ஆஸ்பத்திரியிலும் 'வாஸக்டமி' ஆபரேஷன் செய்யப்படுகிறது. அதைச் செய்து கொள்ளும் கம்பெனி ஊழியருக்கு ஆபரேஷன் செலவு இல்லை. அதோடு ரொக்கப் பரிசாக ரூ. 200/- தரப்படுகிறது. போனவருஷம் ஆகஸ்டு டிசம்பர் காலத்தில் 1650 பேர் ஆபரேஷன் செய்து கொண்டதில் வியப்பில்லை. கம்பெனி ஊழியரின் மனைவியர் 'டியூபெக்டமி' ஆபரேஷன் செய்து கொண்டாலோ, 'லூப்' பொருத்திக் கொண்டாலோ ஊக்கப்படுத்தும் வகையில் ரொக்கம் வழங்கப்படுகிறது.

டாடா ஸ்டீல்


கல்கி

பொருளடக்கம்

கீலக, மார்கழி, 22 - ஜனவரி, 5உ.

அட்டைப்படம்: வித்யாஸ்ரதா.

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



இடைத்தேர்தல்கள் நெருங்குகின்றன!
காங்கிரஸ் பிரசாரம்
உத்தரப் பிரதேசம்
பஞ்சாப்
பீஹார்
Ralk



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மலர் 28 இதழ் 23

ஆணிவேருக்கே ஆபத்து!

‘கன்ட்ரோல்களை நீக்க முடியாது’ என்று சமீபத்தில் மொரார்ஜி தேசாய் பெங்களூரில் கூறியுள்ளார். இருபது ஆண்டுகளாக பெர்மிட் — லைசென்ஸ்— கன்ட்ரோல் முறை இருந்து வருவதால், மந்திரிகளும் மக்களும் இது இன்றி வியாபாரமும் தொழிலும் இல்லை என்று எண்ணும் நிலை ஏற்பட்டிருப்பதில் அதிசயமில்லை. ஒரு தலைமுறை முழுதும் பெர்மிட் முறையின் கீழ் வாழ நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதால், புதுக் தலைமுறைக்கு வேறு முறை பற்றித் தெரிந்திருக்கவே இல்லை. அரசாங்கத்துக்கு அடிமைப்பட்டிருப்பதன்றி வாழ்வே கிடையாது என்று எண்ணுவதற்கு ருஷிய மக்கள் பழக்கப்பட்டு விட்டது போல், இந்தியாவில் தொழில் — வர்த்தகத் துறையினர் உள்பட அனைவரும் கன்ட்ரோல் இன்றி எதுவும் முடியாது என்ற எண்ணத்துக்கு ஆட்பட்டு விட்டார்கள். முன்பு பிரிட்டிஷ் ஆட்சி இன்றி இந்தியாவுக்கு வேறு வழி கிடையாது என்று எண்ணப்பட்டதுண்டு. ஆனால் இந்த நம்பிக்கை எடுபட்டு விட்டதை இன்று காண்கிறோம். இதே போல் பெர்மிட்-லைசென்ஸ்-கன்ட்ரோல் முறையிலுள்ள நம்பிக்கையும் எடுபடத்தான் வேண்டும். சலுகை பெற்ற சிலருக்கு மட்டுமே ஏகபோக்கியம் தரும் முறை இது. உற்பத்தி, விநியோகம் ஆகிய கௌரவமான துறைகளில் ஈடுபட்டுள்ள அனைவரும் அடிமை உணர்ச்சி கொள்ளச் செய்திருக்கும் முறை இது. ஆளும் கட்சியானது தொழில் துறையினரிடமிருந்து அநாயாசமாக எவ்வளவு பணம் வேண்டுமாயினும் பெற வசதி தருகிற முறை இது. எனவே, காங்கிரஸ் மந்திரிகள் என்ன சொன்னாலும் சரி, இம்முறை முடிந்தேயாக வேண்டும்.

‘கன்ட்ரோலின் காரியக்கிரமத்தை வேண்டுமானால் எளிதாக்கலாம். ஆனால் கன்ட்ரோலே கூடாது என்பது சரியல்ல. கன்ட்ரோல் இருந்தேயாக வேண்டும்’ என்கிறார் துணைப் பிரதமர். காரியக்கிரமத்தில் மட்டும்தான் தீமை இருப்பது போல் பேசுகிறார். உண்மையில் கன்ட்ரோல் முறையின் அடி ஆழத்திலேயே தீமை உள்ளது. இத்தீமை, சுதந்திரத்துடனும் செயலூக்கத்துடனும் தொழிலில் போட்டியிட வேண்டிய நம் நாட்டை அடிமைப் படுத்தி வைத்திருக்கிறது.

நிர்ப்பந்தத்துக்குப் பழக்கப்பட்டு விட்டால் எந்தக் கட்டுப்பாட்டையும் இயல்பாக ஏற்கத் தொடங்கி விடுவோம். இந்தப் போக்கை அனுமதித்துக் கொண்டே போனால் சாலைகளில் நடமாடுவதற்கும், கறிகாய் வாங்குவதற்கும் கூடக் கன்ட்ரோல் ஏற்படலாம். எல்லாவற்றிலுமே பற்றாக்குறை உண்டாயிருப்பது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்திச் சர்க்கார் கட்டுப்படுத்தினால்தான் குழப்பமின்றி வாழலாம் என்ற பிரமையை இன்றைய அரசாங்கம் வளர்த்திருக்கிறது.

தன் ஆட்சியையே நீடித்துக்கொள்ள விரும்புகிற ஒரு கட்சி இன்றைய ஆளும் கட்சி போல்தான் நடக்கும். இதன் விளைவாகப் பலவிதத் தவறுகள் செய்யும். எனவே, தன் ஆட்சியையே நீடித்துக்கொள்கிற ஆசையிலிருந்து பெருமளவுக்கு அப்பாற்பட்டுள்ள ஒரு சர்க்காரின் ஆட்சியே நமக்கு வேண்டும். பிரதமர் அக்கிராசனம் வகிக்க, நிதி மந்திராலயமும், திட்டக் கமிஷனும் ‘ராஜி’ செய்துகொண்டு நாலாம் திட்ட விஷயமாக முடிவுக்கு வந்துவிட்டன. மிகப் பெரிதாகத் திட்டம் போடுவதே இம்முடிவு. இல்லாவிடில் இடைத் தேர்தல்களில் வெற்றி கிட்டாது. ஐந்தாண்டுக் காலத்தில் வருஷாந்தர வரவு செலவு எப்படி இருக்குமோ அதையொட்டியே திட்டத்தின் வாஸ்தவமான உருவம் அமையும். என்றாலும் இப்போதைக்குப் பல ராஜ்யங்களில் இடைத் தேர்தல்கள் நடக்கவிருப்பதால் வாக்காளர்களுக்கு ஒரு பெரிய



மகாத்மாவின் மணிமொழி

தவறு செய்வது மனித இயல்பு. அதைப் பச்சாதாபத்துடன் வெளியிடுவதால் தவற்றையே முன்னேற்றத்துக்கு வழி கோலும் படிகளாக்கிக்கொள்கிறோம். மாறாக, தவற்றை மறைக்க முயல்பவன் போலியாகிறான்; அடிமட்டத்துக்கு மூழ்கிவிடுகிறான். மனிதன் மிருகமுமல்ல, தெய்வமுமல்ல. தெய்வத்தால் சிருஷ்டிக்கப்பட்ட அவன், தன் தெய்விகத்தை உணருவதற்கு முயல வேண்டியவன். பச்சாதாபமும், ஆத்மசுத்தியுமே இதற்குச் சாதனங்கள். கழிவிரக்கம் கொண்டு, ஆண்டவனை மன்னிப்புக் கோரும் கணத்திலேயே நம் பாபம் விலகி, நமக்குப் புது வாழ்வு தொடங்குகிறது. உண்மையான பச்சாத்தாபம் பிரார்த்தனையின் ஓர் அவசியமான அங்கம்.

திட்டத்தைக் காட்ட வேண்டும் என்பதே ஆட்சியாளரின் எண்ணமாகத் தெரிகிறது. இதனால்தான் மத்திய-மாநில சர்க்கார் துறைகளுக்காக 15,000 கோடி ரூபாய்க்குத் திட்டத்தில் இடம் தரப்பட்டிருக்கிறது. எந்த நிமிஷமும் பதவியிலிருந்து அகற்றப் படக்கூடிய ஒரு சர்க்கார் (1972 தேர்தலுக்குப்பின் நிச்சயமாக விலக வேண்டிய சர்க்கார்) இப்போதுள்ள மகத்தான கடன் சுமையையும் பொருட்படுத்தாமல் 1969-லிருந்து 1974க்குள் சர்க்கார் துறைக்காக 15,000 கோடி ரூபாய்க்குத் திட்டம் போடுவது, எந்த ஜனநாயகமும் சாதித்திராத அற்புத சாதனைதான். இன்னின்ன செய்கிறோம் என்று சர்க்கார் வாக்குத் தந்து, பெரிய திட்டம் போட்டிருப்பதால், வாக்காளர்கள் மயங்கி இடைத் தேர்தல்களில் ஆள்கிற கட்சியை ஆதரிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் பெரிய திட்டத்துக்குப் பணம் எங்கிருந்து வரப் போகிறது என்பதைச் சொல்லக் காணோம்.

சர்க்காரின் பேராசை பிடித்த கண்கள் கிராம மக்களுடைய வருமானத்தின் மீது பதிந்துள்ளது. தேச வாழ்வின் ஆணிவேரிலிருந்தே ஈரத்தை உறிஞ்சி வற்றடிக்கப் பார்க்கிறார்கள்! சர்க்காரிடமிருந்து கிராம மக்களைக் காப்பாற்றியாக வேண்டும். எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவில் இந்த அரசாங்கத்தை அகற்ற வேண்டும். விவேகமும், பிரத்தியட்ச உணர்வும், தேசப் பற்றும் கொண்டவர்களிடம் — கல்வியறிவு பெறாத வாக்காளரின் அப்பாவித்தனத்தை ஆதாயமாக்கிக் கொள்ளாதவர்களிடம் — ஆட்சியை ஒப்படைக்க வேண்டும்.

(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது)

நெஞ்சில் வைத்த நெருப்பு!

நினைக்கவும் பார்க்கவொண்ணாத கோரம் தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினத்தை அடுத்த கீழ்வெண்மணிக் கிராமத்தில் நடந்திருக்கிறது. பஞ்சபாண்டவர்களை அரக்கு மாளிகையில் கொளுத்த எண்ணிய பாதகத்தைப் படித்துப் பதைத்திருக்கிறோம்; ஜாலியன்வாலாபாக் தோட்டத்தில் நாற்புறமும் சுவர் சூழ்ந்த சிறிய இடத்தில் மக்கள் வெளியேறாமல் தடுத்து அறுநூறு பேரைச் சுட்டுக் கொன்ற பயங்கரத்தைக் கேட்டுப் பதறியிருக்கிறோம். இப்போது நம் கண் முன்னே, செந்தமிழ் நாட்டில் ஒரு குடிசைக்குள்ளே 19 பெண்களும், 20 குழந்தைகளும், 3 ஆடவர்களும் தீக்கிரையாக்கப்பட்டிருப்பதை நினைக்கும்போது குருதியே சில்லிட்டுப் போகிறது.

தமிழக அரசு விசாரணையில் முழு மூச்சுடன் இறங்கியிருக்கிறது. குற்றவாளிகளைக் கண்டிப்புடன் தண்டிக்க முடிவு செய்துள்ளார் முதன் மந்திரி. யார் காரணம் என்ற விசாரணை இருக்கட்டும். யார் காரணமாயினும் இப்படிப்பட்ட கோரத்தைச் செய்யக் கூடிய ஈரமற்றவர்கள் நம்மிடை இருப்பது நமக்கு மகத்தான அவமானம். இன்னுயிர்கள் பல போகலாயின. நாட்டில் பரவி வருகிற பாவக் கறை போகவழி எங்கே?

அரசியல் காரணங்களுக்காகப் பேதங்களை வளர்ப்பது எங்கு முடியும் என்பதற்கு நாட்டில் ஆங்காங்கு பயங்கர அறிகுறிகளைக் கண்டு வருகிறோம். தடை செய்ய வேண்டியவர்களைச் சுதந்திரமாக விட்டிருப்பதன் விபரீத விளைவுகளைப் பல இடங்களில் பார்த்து வருகிறோம். இதற்கெல்லாம் பரிகாரம் காண ஓர் அதிர்ச்சித் தூண்டுதலாகவே பல உயிர்கள் பலி ஆயினவோ?

அன்னமளிக்கும் புண்ணியப் பணியில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர், தொழிலாளரிடையே வேற்றுமையை வளர விடாமல், இசைவுக்கு வழி காண வேண்டும். நாசகர எண்ணங்கள் மனத்திலிருந்து ஓடப் பாடுபட வேண்டும். இதற்கான அன்புச் சக்தியை அற்பமான நமக்கு ஆண்டவன் அருளவேண்டும் என நெஞ்சுருகிப் பிரார்த்திப்போம்.

ராஜாஜியின் கருத்துக்கள்

விண்வெளிக் கலம் சந்திரனை மூன்றும் முறை சுற்றி முடிக்கும் தறுவாயில், கிறிஸ்துமஸ் முன் மாலையை முன்னிட்டு, விண்வெளி யாத்ரிகர் பார்மன் இறைவனுக்கு பவ்வியமாகப் பிரார்த்தனை செலுத்தினர். ''ஆண்டவனே, உன்னுடைய அன்பைப் பார்க்கக் கூடிய திருஷ்டியை எங்களுக்கு அருள்வாய்! எங்கள் அறியாமையையும், பலவீனத்தையும் கருத்தில் கொள்ளாமல் நீ அருளும் நன்மைகளை நாங்கள் நம்புமாறு செய்வாய்! உலகெங்கும் சாந்தி நிலவும் நாளைத் தோற்றுவிப்பதற்காக நாங்கள் ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டுமோ அதை அறியும் ஞானத்தை அளிப்பாய்!''—இவ்வாறு பிரார்த்தித்தார் பார்மன். வெற்றி கொண்டோம் என்று உணர்ச்சி வசப்படாமலும், அகந்தை உறாமலும், பரம்பொருளின் முன்பு எளிமையை வெளிப்படுத்தி அமெரிக்க விண்வெளி யாத்திரிகர் சந்திரனுக்குச் சமீபத்திலிருந்து பூவுலகில் உள்ள மக்களுக்குச் செய்தி அனுப்பியிருக்கிறார். இது பெரிய விஷயம்.

ஃஃஃ

அபல்லோ என்ற விண்வெளிக் கலத்தில் சந்திரனைச் சுற்றி வந்தவர்கள், ஸயன்ஸ் துறையில் புதிதாக ஏதும் கண்டுபிடிக்கவில்லை என்று இங்கிலாந்தில் உள்ள ஜோர்டெல் வான ஆராய்ச்சி நிலைய டைரக்டர் ஸர் பெர்னார்ட் லவல் கூறியுள்ளார். இது உண்மையே. எனினும் சந்திர மண்டலப் பிரயாணத்துக்குத் தயார்ப்படுத்திக் கொள்வதற்காகச் செய்துள்ள ஏற்பாடு அப்பழுக்கின்றி நிறைவு பெற்றிருப்பது ஓர் அற்புத சாதனையாகும். அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் இது குறித்து நிச்சயம் பெருமைப்படலாம்.

ஃஃஃ

காந்திஜி கொலையுண்ட ஸ்தலத்தில் நினைவுச் சின்னம் எழுப்புகிற திட்டம் ஒரு விசித்திரமான திருப்பத்தை அடைந்திருக்கிறது. மருத்துவ சாஸ்திரப்படி காந்திஜி எந்த இடத்தில் உயிர் நீத்தார் என்ற விஷயம் விசாரணைக்குரியதாக ஆக்கப்பட்டிருக்கிறது. பிர்லாக்கள் புதுதில்லியில் உள்ள தம்முடைய இல்லத்தை இழக்குமாறு செய்ய வேண்டும் என்று விரும்புபவர்கள் காந்திஜி சுடப்பட்ட இடத்திலிருந்து, பிர்லாவின் இல்லத்துக்குள் அவர் உபயோகித்த அறைக்குக் கொண்டு வரப்பட்ட பின், அந்த அறையிலேயே உயிர் நீத்தார் என்றும், எனவே இங்குதான் நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும் என்றும், இதற்காக இல்லத்தை பிர்லாக்கள் விட்டுக் கொடுத்துவிட வேண்டும் என்றும் சொல்கிறார்கள்.

காந்திஜியை அந்த அறைக்குக் கொண்டு வராமல், ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றிருந்தார்கள் என்று வைத்துக் கொள்வோம். ஆஸ்பத்திரியிலோ, போகிற வழியிலோ காந்திஜி உயிர் நீத்திருந்தால், ஆஸ்பத்திரியில் நினைவுச் சின்னம் எழுப்புவார்களா? அல்லது சாலையில் எழுப்புவார்களா? இப்படியெல்லாம் செய்தால் கேலிக்கூத்தாக அல்லவா இருக்கும்? எந்த ஸ்தலத்தில் காந்திஜியின் மார்புக்குள் துப்பாக்கி ரவைகள் செலுத்தப்பட்டனவோ அதுவே அவர் கொலையுண்ட இடம். அங்குதான் ஞாபகார்த்தம் எழுப்ப வேண்டும்; ஸயன்ஸ் பிரகாரம் அவர் உயிர் நீத்ததாக நிர்ணயிக்கப்படும் இடத்தில் அல்ல. கோட்ஸே துப்பாக்கிப் பிரயோகம் செய்ய, காந்திஜி விழுந்த ஸ்தலத்தில்தான், ''இங்கு தேச ரட்சகர் — தேச பிதா 1948 ஜனவரி 30ந் தேதி கொலை செய்யப்பட்டார்'' என்ற வாசகம் பொறிக்கப்பட வேண்டும்.

காந்திஜி கொலையுண்ட இடம் என்றவுடன் அனைவருமே கோட்ஸே துப்பாக்கி வெடித்த ஸ்தலத்தைத்தான் நினைக்கிறோம். அங்குதான் நினைவுச் சின்னம் அமைய வேண்டும்.

நாகர்கோயில் தொகுதியில் எல்லாப் பெரியோர்களுக்கு என் வேண்டுகோள். தேர்தல் அன்று தயவுசெய்து தவறாமல் உங்கள் வாக்குகளைப் பதிவு செய்து வாக்குப் பெட்டியில் போட வேண்டும். யார் வென்றால் நமக்கென்னவென்று வாக்குரிமையைப் பயன்படுத்தாமல் உதாசீனமாக இருக்க வேண்டாம். மத்திய ஆட்சியின் போக்கை எதிர்த்து யோசனை சொல்லும் கட்சியில் உட்காரும் ஓர் அங்கத்தினரைக் குமரி ஜில்லா மக்கள் தேர்ந்து அனுப்ப வேண்டும்.

நாகர்கோயில் தொகுதி நாடார் பெரியோர்களுக்கு ஒரு வார்த்தை. நம்முடைய குலத்தைச் சேர்ந்தவருக்கு நாம் உதவியாக நடந்து கொள்ளுவது நம் நாட்டின் பண்பாடு. அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆயினும் உங்கள் வாக்குரிமையைத் தற்போது தில்லி சர்க்காருக்கு எதிராக யோசனை கூறும் ஓர் அங்கத்தினரை அனுப்புவதற்குப் பயன்படுத்த வேண்டியது அவசியம்; தமிழ்நாட்டு அரசாட்சிக்கு விரோதமாக வேலை செய்யக்கூடிய அங்கத்தினரை அனுப்புவது உசிதமல்லவென்று வணக்கமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்னை-31
28-12-68

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

பாலைவனப் பிரபஞ்சத்தில் பூமியெனும் பூஞ்சோலை!





படங்கள்: விண்வெளிக் கப்பலினுள் இடமிருந்து வலமாக ஆண்டர்ஸ், லோவெல், போர்மேன் □ விண்வெளிக் கலத்தை விட்டு வெளியேறிய நிலையில் வீரர்களின் உடைகளைத் தெளிவாகக் காண முடிகிறது.


வலப்பக்கம்: பயணம் முடிந்து திரும்பியவர்களைக் கடலிலிருந்து மீட்கிறது ஹெலிகாப்டர் □ விண்வெளிக் கலத்தினுள்ளே இன்னொரு தோற்றம் □ கேப் கென்னடியில் விண்வெளிப் பயணத்தைத் தொடங்கத் தயாராக இருக்கும் ஸாட்டர்ன்-5 ராக்கெட்டும் அதன்மேலே அப்போல்லோ-8 விண்வெளிக் கப்பலும்.

நூறாண்டுகளுக்கு முன்னால் கதாசிரியர் ஜூலெஸ் வார்ன் கண்ட கனவு நினைவாகும் வண்ணம் சந்திரனைச் சுற்றிவிட்டுத் திரும்பியிருக்கின்றனர் அமெரிக்க விண்வெளி வீரர்கள் மூவர். உலகம் இது வரை கண்டறியாத அதிசயத்தை நிகழ்த்திக் காட்டியவர்களின் கவிதா உள்ளம் பூமியை வர்ணிக்கிறது: ''விண்வெளி ஒரு பாலைவனம் என்றால் அதில் பூமி ஒரு பசுஞ் சோலை!''


கவிதா உள்ளம் மட்டுமா? அதில் இறையுணர்ச்சியும் அதன் விளைவான அடக்கமும் கலந்திருக்கிறது. விண்வெளி வீரர் லோவெல் பூமியிலிருந்து விடைபெறு முன்னர் கூறினார்: ''சந்திரனை நாங்கள் சுற்றி வருகையில் பூமி சந்திரனுக்குப் பின்னால் மறையும் நிகழ்ச்சி முதன் முதலாக ஏற்படும். பூமியின் ஆதிக்கத்திலிருந்து நாங்கள் பரிபூரணமாக விடுபட்ட நிலையில் இருப்போம். சந்திரனே முழுக்க முழுக்க எங்களை ஆட்கொண்டதாகும். பூமியை எங்களுக்குச் சம்பந்தமில்லாத ஏதோ ஒரு பொருளாகக் கருதக்கூடிய நிலையை எண்ணும்போது, எல்லை காணவொண்ணாத பிரபஞ்சத்தில் நாம் எப்படித் தூசுக்குச் சமானமாகச் சிறுத்திருக்கிறோம் என்பதையும் நன்கு உணராது இருக்க முடியவில்லை!''

இந்த அப்போல்லோ-8 பயணத்தை மேற்கொண்ட மூவரில் தலைவர் போர்மேனுக்கு வயது நாற்பது. விண்வெளிப் பயணங்களுள் மிக அதிக நேரம் நீடித்த பயணம் ஜெமினி–7ன் பதினாலு நாள் பயணமே. அப்போது ஜெமினி 7ன் தலைவராகப் பணியாற்றியவரும் போர்மேன்தான். எடையற்ற நிலையில் நீண்ட நாட்கள் இருக்க நேரிடினும் மனிதன் அலுப்புச் சலிப்பு இன்றி வாழ்ந்து உழைக்க முடியும் என்று நிரூபித்தார்.

போர்மேன் நகைச்சுவை மிக்கவர். இரண்டு வாரம் முக க்ஷவரமும் செய்து கொள்ளாமல் குளிக்கவும் இல்லாமல் பூமிக்குத் திரும்பியவரை, உயர் அதிகாரிகள் கைகுலுக்க நெருங்கினார்கள். அவர்களை நோக்கி







நீள வேண்டிய தமது வலக்கரத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்தபடியே, ''சகிக்க முடியாத அளவுக்கு என் உடலில் அழுக்கேறியிருக்கிறது'' என்றார் போர்மேன்.

''ஆமாம், கொஞ்சம் அழுக்கடைந்துதான் காணப்படுகிறீர்கள்'' என்று அதிகாரிகள் அநுதாபத்துடன் சொல்லி வைத்தார்கள்.

''ஆனால் இந்த அழுக்கெல்லாம் உண்மையான உழைப்பின் விளைவாக எழுந்த பரிசுத்தமான அழுக்காகும்! அதை மறந்துவிடாதீர்கள்!'' என்றார் போர்மேன்.

போர்மேனைப் பொறுத்தவரையில் இந்த அப்போல்லோ–8 பயணம் தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 1951ல் இவர் ஜெட் விமானம் ஓட்டிக் கொண்டிருந்தபோது ஒரு முறை செங்குத்தாக விரைந்து கீழே இறங்கினார். சூழ்நிலையில் காற்றின் அழுத்தம் திடுதிப்பென்று அதிகமாகவே இவரது இடது காது ஜவ்வில் ஓட்டை விழுந்து விட்டது. இதைத் தொடர்ந்து டாக்டர்கள் இவரை 'லிப்ட்'டில் கூட ஏறக் கூடாது என்று தடை விதித்திருந்தனர். போர்மேன் விமானியாகத் தாம் இனி விளங்க முடியாது போகுமோ என்று பெரிதும் கவலையுற்றார். ஆனால் ஏழு மாதங்களுக்குப் பிறகு ஜவ்வு சீராகிவிட்டது. போர்மேன் மீண்டும் விமானம் ஓட்ட ஆரம்பித்தார்.

அப்போல்லோ–8 பயணம் போர்மேனுக்கு இரண்டாவது விண்வெளிப் பயணமாகும். விண்வெளியில் ஒரு தடவைக்கும் அதிகமாகச் சஞ்சரித்துத் திரும்பியுள்ளவர்கள் இதுவரையில் எட்டுப் பேர்களே. (அமெரிக்கர் ஏழு; ருஷ்யர் ஒன்று) போர்மேன் ஒன்பதாவது நபராவார்.

விண்வெளியில் மூன்று முறை சென்று திரும்பியவர் இதுவரை ஒரே ஒரு நபர்தான். அவர் அமெரிக்கர் வால்டர் ஷிரா ஆவார். இப்போது அப்போல்லோ-8ல் பயணம் செய்து திரும்பியுள்ள லோவெலும் இந்தப் பெருமையை அடைகிறார். அப்போல்லோ–8 பயணத்தை மேற்கொள்ளும் முன்பாகவே கூட லோவெல் விண்வெளியில் கழித்துள்ள நேரம் மற்ற எல்லோரையும் விட மிக அதிகமாக இருந்தது! (18 நாள்) உலக சரித்திரத்தில் வேறு எந்த மனிதனும் பிரயாணம் செய்திராத அளவுக்கு இவர் 73 லட்சம் மைல்கள் பிரயாணம் செய்திருக்கிறார். அப்போல்லோ-8 பயணத்தையும் கணக்கில் சேர்த்தால் இந்த எண்ணிக்கைகள் மேலும் அதிகமாகும்!

அப்போல்லோ–8ல் பயணம் செய்த மூன்றாவது நபர் ஆண்டர்ஸ். 1963ல் இவர் விண்வெளி வீரராகும் தகுதியை அடைந்தபோதிலும் இவர் மேற்கொண்ட முதல் விண்வெளிப் பயணம் இதுவே. ஏற்கனவே விண்வெளி அநுபவம் பெற்ற முப்பத்தி மூவருடன் (அமெரிக்கா 21; ருஷ்யர் 12) இவர் முப்பத்தி நாலாவது நபராகச் சேர்ந்து கொள்வார்.

அப்போல்லோ–8 பயணத்தின்போது இவ்வீரர்கள் மொத்தம் ஐந்து லட்சம் மைல்கள் பிரயாணம் செய்து சந்திரனைச் சுற்றி வந்ததுடன் அதற்கு மிக அருகே — எழுபது மைல் தொலைவில் — இருந்தார்கள்.

சந்திரனின் பல பாகங்களையும் புகைப்படம் எடுத்தார்கள். டெலிவிஷன் காமிரா

வையும் இயக்கினார்கள். இந்த டெலிவிஷன் காட்சிகளை உடனுக்குடன் பூமியில் உள்ளோர் தங்கள் இல்லங்களில் கண்டார்கள்.

எதிர்காலத்தில் சந்திரனில் மனிதன் இறங்கும்போது அவன் எந்த மாதிரியான ராக்கெட்டினால் விண்வெளிக்கு உந்தப்பட்டு எத்தகைய விண்வெளிக் கப்பலில் பயணம் செய்வானோ அதே போன்ற ராக்கெட்டும் விண்வெளிக்கப்பலுமேதான் இந்த அப்போல்லோ 8 பயணத்தின்போதும் பயன்படுத்தப்பட்டன. ஆனல் ''லூனர் மாட்யூல்'' என்ற ஒரு பகுதி மட்டும் இதில் பொருத்தப்படவில்லை. இந்த ''லூனர் மாட்யூல்''தான் சந்திரனைச் சுற்றி வரும் மனிதனைச் சந்திரனுக்கு இட்டுச் செல்லும்.

அப்போல்லோ—8 விண்வெளிக் கப்பல் ஒன்றன் மீது ஒன்றாக அமைந்த மூன்று ராக்கெட்டுகளின் உச்சியில் பொருத்தப்பட்டிருந்தது. ஸாட்டர்ன்—5 எனப்பட்ட இந்த மூன்று ராக்கெட்டுகளுள் அடியில் உள்ள இரண்டும் கலத்தை, பூமிச் சூழ்நிலைக்கு அப்பால் விண்வெளிக்குக் கொண்டு சென்றன. இவ்விரண்டும் தங்கள் கடமை முடிந்ததும் கழன்று கொண்டன. மூன்றாவது ராக்கெட் விண்வெளிக் கப்பலுடன் பூமியைச் சுற்றி வந்தது. இங்கிருந்து 118 மைல் உயரத்தில். ஒரு முறை சுற்றத் தொண்ணூறு நிமிஷங்கள் ஆயின. அப்படி இருமுறை பூமியைச் சுற்றி வருவதற்குள் விண்வெளி வீரர்கள் எல்லாச் சாதனங்களும் சரியாக இயங்குகின்றனவா என்று பார்த்துக் கொண்டார்கள். பிறகு மூன்றாவது ராக்கெட்டை இயக்கினார்கள். இது சந்திரனை நோக்கி இவர்களை இட்டுச் சென்றது. கொஞ்ச தூரம் சென்றபிறகு ராக்கெட்டின் சக்தி தீர்ந்து விட்டது. ராக்கெட் தனியே கழன்று கொண்டாலும் விண்வெளிக் கப்பலின் வேகம் தணியவில்லை. வந்த வேகத்திலேயே அது மேலும் இரண்டு லட்சம் மைல்களைக் கடந்து சந்திரனை நெருங்கியது!


பிறகு இயற்கை வேகங்களால் உந்தப்பட்டுச் சந்திரனைச் சுற்றி வரத் தொடங்கியது. ஒரு தடவை சந்திரனைச் சுற்றச் சுமார் இரண்டு மணி நேரம் ஆயிற்று. இப்படிப் பல தடவை சந்திரனைச் சுற்றிவிட்டு மற்றொரு விசையை இயக்கி, சந்திரனின் ஆகர்ஷணத்திலிருந்து விடுபட்டுப் பூமியை நோக்கி விரைந்தார்கள் விண்வெளி வீரர்கள். சுமார் ஐம்பத்தேழு மணி நேரத்துக்குப் பிறகு பஸிபிக் மகா சமுத்திரத்தில் இறங்கினார்கள்.

ஸாட்டர்ன்—5 ராக்கெட்டும் அதன் மீது அப்போல்லோ விண்வெளிக் கலமும் கேப் கென்னடி தளத்தில் நின்றபோது அவற்றின் உயரம் 36 மாடிக் கட்டிடத்துக்குச் சமானமானதாக இருந்தது! இரண்டாயிரம் பெரிய கார்களின் எடை! 543 ஜெட் போர் விமானங்கள் பறக்கும்போது உருவாக்கக் கூடிய சக்தியை இந்த ஸாட்டர்ன் ராக்கெட் பெற்றிருந்தது. பன்னிரண்டு வருஷங்கள் பாடுபட்டு இந்தப் பயணத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். இதற்காக உழைத்த விஞ்ஞானிகள், பொறி இயல் நிபுணர்கள் முதலானோரின் எண்ணிக்கை மூன்று லட்சத்து ஐம்பதாயிரம்! இருபதாயிரம் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்பு இருந்திருக்கிறது. இதிலுள்ள பாகங்கள், உபகரணங்கள், எலெக்ட்ரானிக் சாதனங்கள் முதலியன மொத்தம் முப்பது லட்சம்!

ஸாட்டர்ன்—5 ராக்கெட்டின் (முதல்) அடிவாரப் பகுதிக்கு மட்டும் 1,600 டன் திரவ ஆக்ஸிஜனும் 650 டன் கெரோஸினும் எரிபொருளாகப் பயன்பட்டன. இது தவிர ராக்கெட்டின் இரண்டாவது பகுதிக்குத் தனியே வேறு எரிபொருள்கள். முதல் பகுதி இயங்க ஆரம்பித்தபோது ஒரு செகண்டுக்கு 15 டன் எரிபொருளைக் கபளீகரம் செய்தது! மணிக்கு ஆறாயிரம் மைல் வேகத்தில் பிரயாணம் செய்து 38 மைல்களுக்கு விண்வெளி கப்பலை உயர்த்தியது. அங்கு ராக்கெட்டின் இரண்டாவது பகுதி இயங்க ஆரம்பித்து முன் சொன்னது போல் 118 மைல் உயரத்துக்கு இட்டுச் சென்றது.

இத்தனை ஏற்பாடுகளிலும் மிக முக்கியமான ஒன்று ஆபத்தைச் சமாளிக்க எடுத்துக் கொள்ளப்பட்ட அக்கறைதான். எந்த ஓர் ஏற்பாடு தவறாகப் போனாலும் அதற்குப் பதில் இன்னொரு ஏற்பாடு உண்டு. 1967ல் கேப் கென்னடி தளத்தில் தீவிபத்து ஏற்பட்டு மூன்று விண்வெளி வீரர்கள் மரணமடைந்த பிறகு இப்போது விண்வெளிக் கப்பல்களின் உட்புறச் சாதனங்களும் எளிதில் தீப்பிடிக்காத பொருள்களால் உருவாக்கப்படுகின்றன. எந்த





சென்னை மியூஸிக் அகாடமியின் ஆதரவில் 24ந் தேதி காலை விசேஷ நிகழ்ச்சியில் ஸ்ரீ கே. எஸ். நாராயணசுவாமியும் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியும் வீணை வாசித்துச் சபையோரை மெய்மறக்கச் செய்தார்கள்.

மியூஸிக் அகாடமியின் சங்கீத மண்டபம் எழுப்புவதற்கான நிதி திரட்டுவதில் பெருதவி செய்த தொழிலதிபர் காலஞ்சென்ற ஸ்ரீ டி. எஸ். நாராயணஸ்வாமியின் திருவுருவப் படத்தைச் சென்னை மியூஸிக் அகாடமியில் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் திறந்து வைத்தார்.



மியூஸிக் அகாடமியின் 24ந் தேதி காலை நிகழ்ச்சியில், ஸ்ரீ டி. எல். வேங்கடராமய்யர் ஆங்கிலத்தில் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரைப் பற்றி எழுதிய நூலைத் தமிழகப் பிரதம நீதிபதி திரு. அனந்தநாராயணன் வெளியிட்டார்.

நெருக்கடியிலும் பூமிக்குத் திரும்பிவிட அமைப்புகள் உண்டு. பிரச்னை என்று சொல்ல வேண்டுமானால், சந்திர மண்டலத்திலிருந்து பூமிக்குத் திரும்ப ஏற்படும் கால தாமதத்தைத்தான் குறிப்பிடலாம். இரண்டு லட்சம் மைல்களுக்கு மேலல்லவா கடந்து திரும்பி வர வேண்டும் பூமிக்கு?

பூமியைச் சுற்றி விண்வெளிக் கப்பலில் பயணம் செய்தபோது அதிகபட்சம் மூன்று மணி நேரத்தில் ஓர் ஆபத்து என்றால் திரும்பி விட முடியும். ஆனால் சந்திரனைச் சுற்றி வரும் விண்வெளிக் கலம் பூமிக்குத் திரும்ப இரண்டு நாட்களுக்குமேலாகும்.

இத்தனை ஆபத்துக்களுக்கும் உட்பட்டுப் பல்லாயிரம் கோடி டாலர்களைச் செலவழித்துச் சந்திரனை எட்டிப் பிடிக்க நினைக்கும் நோக்கம் என்ன? அமெரிக்க மக்களின் சார்பில் லிண்டன் பி. ஜான்ஸன் விளக்கம் தருகிறார்:

''விண் வெளியை வெற்றி கொள்வதில் தான் நவீன கால மனிதன் பெருமிதத்துடனும் பயனுள்ள வகையிலும் ஈடுபட முடியும்; நாடுகளை வெற்றி கொள்வதில் அல்ல. இந்தப் போராட்டத்தில் மனித குலம் முழுவதுமே நேச நாடுகளைச் சேர்ந்தவர்களாகின்றனர். அவர்களின் ஒரே எதிரி பகைமை பாராட்டும் விண்வெளிச் சூழலே. இந்த எதிரியை வென்றால் அந்த வெற்றி உலகம் முழுவதற்கும் சொந்தமாகும்!''


இசை விழாக்கள்


1. சென்னை வாணி மஹாலில் நடைபெற்ற இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியின் இசை விழாவுக்கு இந்த வருஷம் கோட்டுவாத்தியம் வித்வான் பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் தலைமை வகித்துச் சிறப்பித்தார்.

2. பூதலூர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் தம் இசை விழாத் தலைமைப் பேருரையை வழங்குகிறார். நீதிபதி வீராசாமி இசை விழாவைத் தொடங்கி வைத்தார்.

3. அண்ணாமலை மன்றத்தில் நடைபெறும் தமிழிசை விழாவுக்குத் தலைமை தாங்கும் பாலக்காடு ஸ்ரீ மணி அய்யர் அவர்களுக்குத் தமிழக பொதுத் துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி 'இசைப் பேரறிஞர்' விருதை வழங்குகிறார்.









4. கோபால கிருஷ்ண பாரதி பாடல் போட்டியில் தம்புராப் பரிசைத் தமிழிசை விழாத் தலைவர் பாலக்காடு மணி அய்யர் வழங்குகிறார்.

5. தமிழிசை விழாவில் அமைச்சர் கருணாநிதி தம் தொடக்க விழாப் பிரசங்கத்தை நிகழ்த்துகிறார்.



தமிழிசையில் பாலக்காடு ஸ்ரீ மணி அய்யர் அவர்களும் பைன் ஆர்ட்ஸில் பூதலூர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளும் உதிர்த்த கருத்துக்களில் இரண்டு மணிகள் இதோ:

''தரம் குறைந்த இசை ஏன் பெருகி வருகிறது? நாத வித்தையைப் பணத்துக்காகப் பயன்படுத்துவதுதான் இதற்குக் காரணம்... இசை இன்று வியாபாரமாகி விட்டது.''

''எல்லா ராகங்களும் ஏழு ஸ்வரங்களுக்குள் அடங்கியவை என்றாலும் ஒவ்வொரு ராகமும் தனித் தனி... உழைப்பினாலும், மனக் கண் முன் ராகங்களின் சொருபத்தை நன்றாகத் தெரிந்து கொண்டபடியாலும் பெரிய வித்வான்கள் மேன்மையான சங்கீதத்தைப் பாடினார்கள். இத்தகைய உழைப்பு இக்காலத்தில் இல்லை. திறமை மட்டும் போதாது. சிரத்தையும் உபாசனையும் வேண்டும்.''

நாற்றங்காலின் அழகும் தோப்பளித்த நிழலும்



— சுப்புடு —

“கர்நாடக சங்கீதத்துக்கே ஆபத்து! போச்சு கர்நாடக சங்கீதம். மெல்லிசையும் மேற்கத்திய இசையும் உள் புகுந்து நமது புராதனச் சொத்தாகிய கர்நாடக சங்கீதத்தையே விழுங்க ஆரம்பித்து விட்டது. இனி விமோசனமில்லை” என்றெல்லாம் எங்கு பார்த்தாலும் கூக்குரல் எழுகிறது.

ஆனால் சென்ற ஒரு வாரமாகச் சங்கீத வித்வத் சபையில் சங்கீத ரசிகர்கள், ஸ்திரீகள் முக்கியமாகத் திரள் திரளாக வந்திருந்து சாஸ்திரீய சங்கீதத்தை ரசித்ததைப் பார்க்கும்போது நமது சங்கீதத்துக்கு ஒரு ஆபத்தும் ஏற்படவில்லை, இனியும் ஏற்படாது என்று திண்ணமாய்த் தெரிந்தது.

தமது தலைமை உரையில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி கூறியதுபோல் பண்பாடுகளைப் பொக்கிஷமாக வைத்துக் காப்பாற்றுபவர்கள் ஸ்திரீகள்தான். ஆகையினால்தான் அவர்கள் நிறைய வருவதைக் குறிப்பாகச் சொன்னேன்.

அகாடமிக் கச்சேரிகளில் மென் காற்றிலே இலேசாக அசைந்தாடும் நாற்றங்காலின் அழகைக் காண முடிந்தது. பெரிய விருக்ஷங்கள் நிறைந்த தோப்பின் நிழலிலே அமர்ந்து சுகிக்கவும் முடிந்தது. ஒரு பக்கம் இளம் வித்வான்கள் மேலும் மேலும் முன்னுக்கு வர வேண்டும் என்ற ஆர்வத் துடிப்புடன் தங்கள் திறமையைக் காட்டினார்கள். இன்னொரு பக்கம் முதிர்ந்த ஞானத்துடன் செய்யப்பட்ட கச்சேரிகளைக் கேட்டு ஆனந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. இளம் வித்வான்களுக்கு அளிக்கப்பட்ட ஆதரவைப் பார்க்கும்போது வருங்கால சந்ததிகளைப் பற்றிக் கொஞ்சம் நம்பிக்கை உண்டாகிறது. உச்சி வேளைக் கச்சேரியின்போதுகூட நல்ல கூட்டம்; ஆபீஸ் நாட்களிலும் கூட. தலைமை உரையில் கூறப்பட்ட மற்றொரு காரியத்தையும் சபாக்காரர்கள் செய்துவிட்டால் ரொம்பவும் உசிதமாயிருக்கும்; அதாவது பிரவேசக்கட்டணங்களை ஒரு ரூபாய், அரை ரூபாய் என்று நிர்ணயிப்பது. உண்மையில் மத்தியதர வகுப்பினர்தான் அதிகமாகக் கச்சேரிகளுக்கு வருகிறார்கள். அவர்களுக்குச் சலுகை காட்டினால் சங்கீத ரசனை பரவும்.

இளம் வித்வான்களின் கச்சேரிகளில் முதல் நாள் பாடிய டி. வி. ரத்தினத்தின் பாட்டு கவர்ச்சியா யிருந்தது. இவருக்கு நல்ல குரல் இருக்கிறது. தாளக் கட்டும் இருக்கிறது. ஓரளவு ஜிலுஜிலுப்பும் இருக்கிறது. பாடாந்தரமும் தேவலை. பந்துவராளியில் ‘சாரசாக்ஷ’ சிறப்பாக இருந்தது. தீக்ஷிதர் கிருதிகளைக் கொஞ்சம் நின்று நிதானித்துப் பாடப் பழகிக் கொள்ள வேண்டும். இவருக்கு மிருதங்கம் வாசித்த மதுரை டி. சீனிவாசனுக்கு நல்ல சுநாதமான கை.

ஞாயிறு 1-30 மணி நேரக் கச்சேரியில் மிருதங்கம் சிறந்தோங்கி நின்றது. இளம் டி. கே. இராமகிருஷ்ணன், மூர்த்தி சிறியதாயிருந்தாலும் கீர்த்தி பெரிதாயுள்ளவர். பரன் வரிசைகளும் எதிர் நடைகளும் உசத்தி. வாய்ப்பாட்டு பாடிய திரு பி. கிருஷ்ணமூர்த்தி இன்னும் கொஞ்சம் சாரீரத்தை வல்லின மெல்லினமாய் அமைத்துக் கொள்ள வேண்டும். இது கச்சேரி பாணிக்கு உதவியாயிருக்கும்.

ஃ ஃ ஃ


ஞாயிறன்று பாடிய எஸ். கல்யாணராமன் அப்படியே ஜி. என். பி.யை உரித்து வைத்திருக்கிறார். ஒரே ‘ப்ருகா’ மயம். ஊர்த்தும், ஓடியும், சாடியும் ஈடு கொடுக்கும் உதவுபடி. சாரீரம். ஷண்முகப்பிரியா ராக ஆலாபனை அபரிமிதமாக அமைந்திருந்தது. நாதஸ்வரம் கெட்டது போங்கள்! ஆனால் ப்ருகா சங்கீதம் நீடித்து நிற்காது. நாளடைவில் ஆதார சுருதிக்கே ஆபத்து வந்துவிடும். தீர்க்கமான பிரயோகங்களில் ஈடுபாடு கொண்டு நின்று நிதானித்துக் கார்வையுடன் பாடப் பழகிக் கொள்ள வேண்டும். செல்லச் செல்லத் தனக்கென்று ஒரு ‘பாணி’ வகுத்துக்கொள்ள முயல வேண்டும். இவருக்குப் பிடில் வாசித்த பரூர் அனந்தராமன் நிறைய ‘சாரங்கிப்’ பிடிகள் பிடித்தார். ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் அவ்வளவு மோகமா?

நெல்லை கிருஷ்ணமூர்த்திக்கு நல்ல ‘கனமான’ சாரீரம். ஆனால் சூடு பிடிக்க நாழியாகிறது. கச்சேரிக்கு வருவதற்கு முன்னால் ஒரு மணி நேரம் வீட்டிலேயே பாடிவிட்டு வரலாமே! கேதார கௌளையில் ‘வேணுகான லோல’ குறிப்பிடத்தக்கதா யிருந்தது. பிடில் டி. டி. சங்கரய்யர் அவருக்கு வலது பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

திருவனந்தபுரம் ஆர். எஸ். மணியிடம் எனக்கு எப்போதுமே ஓர் அலாதிப் பிரியம் உண்டு. நல்ல வழி, நல்ல பாடாந்தரம். பிலஹரி ராக ஆலாபனை நல்ல ருசியாயிருந்தது. ‘பரிதான மிச்சிதே’ நல்ல ஓர் உருவம் பெற்றது. அப்ளாஸும் கிடைத்தது. அதன் பயனாகவோ என்னவோ கீர்வாணியை ரொம்பவும் சோதனை செய்து விட்டார். பிடில் வாசித்த சேதுராமனும், மிருதங்கம் வாசித்த ஈசுவரனும் தமது கடமையை நன்கு உணர்ந்து கொண்டு கச்சேரியைப் பரிணமிக்கச் செய்தார்கள்.

ஃ ஃ ஃ

அரியக்குடியின் பிரதான சிஷ்யராகிய மதுரை கிருஷ்ணன் உயர்தரமாகப் பாடினார்.



ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாளும், ஸ்ரீ ஜெயராமனும்

மான ஆலாபனைக்கு அது லாயக்கா என்பது சர்ச்சைக்கு உரிய அம்சம். அக்கம் பக்கத்திலெல்லாம் ஏகப்பட்ட 'தாயாதிகள்'. 'மணிரங்கு', 'மத்யமாவதி', 'ஸ்ரீ'யின் சாயல் எல்லாம் ஆஸ்தியில் பங்கு கேட்டுக் கொண்டிருக்கும்.


சுபபந்துவராளியில் ஸ்ரீ சத்ய நாராயணம் ரம்மியமாக இருந்தது. முத்துசாமி தீக்ஷிதருக்கு நல்லதோர் அஞ்சலி. டி. என். கிருஷ்ணன் சக்கைப் போடு போட்டு விட்டார். தொட்ட இடமெல்லாம் சுநாதம் போங்கள்! வேறென்ன வேண்டும்!

எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் கச்சேரியில் எனக்கு இரண்டு பரீக்ஷை தரும் அம்சங்கள் பைரவி ஆலாபனை விஸ்தாரமாக இருந்தது. ஆமாம், ச்யாமா சாஸ்திரியின் 'ஸரி எவ்வரம்மா' ஏன் 'ஸாரி எவ்வரம்மா'வாக ஆய்விட்டது? அம்மனுக்கு ஸாரிதான் பொருத்தம் என்பதற்காகவா? 'ஆழி மழைக்கண்ணா' சிட்டையாகவும் நன்றாகவும் இருந்தது. பக்க வாத்தியம் வாசித்த சேதுராமையாவின் 'மிச்ர' பிடியில் எட்டி நின்று கேட்பவர்களுக்கு ஏழு தந்தியினால் விளையும் கிகிகி சத்தங்கள் கேட்டிருக்காது. மிருதங்கம் எம். என். கந்தசாமியின் லயத் தேர்ச்சி நங்கூரம் போலமைந்தது.

நல்ல உழைப்புக்குச் சான்றாக விளங்குபவர் செம்பை வைத்தியநாத பாகவதர் அவர்கள். வயது 73. சாரீரத்தில் துளிப் பிசிறு அடிக்க வேண்டுமே! ஒரு கலப்புமில்லாத அப்பட்ட நெய். ஆல விருக்ஷம் போன்று அவர் காட்சி யளிக்கிறார். ஸுஸ்வரம் சுநாதம். கால விரயமே செய்யாமல் அவருக்கு அளிக்கப்பட்ட இரண்டரை மணி, நேரமும் பாடினார். பிராசீனமான கல்யாணி அவருடைய பாணியில்தான். 'நிதி சால சுகமா' சுகமாயிருந்தது. நல்ல கட்டுக் கோப்பான ஸ்வரப் பிரஸ்தாரங்கள். ஐந்து நிமிஷத்தில் ராகம், தானம், பல்லவி பாடி திஸ்ரம் பண்ணி, நிரவலில் விளையாடி நாலு ஆவர்த்தன ஸ்வரமும் பாடிவிட்டார். 'எலெஸ்'ஸான பல்லவிதான். மிருதங்கம் வாசித்த டி. வி. கோபாலகிருஷ்ணனுக்கு நல்ல தொப்பி சாதகம். ஓர் இடத்தில் வலந்தலை இலேசாகச் சதி செய்தபோது இரண்டு ஆவர்த்தனம் தொப்பியிலேயே வாசித்து ஜமாய்த்து விட்டார்.


டி. கே. ரங்காச்சாரியின் பாட்டில் என்றுமே எனக்குப் பிரேமை உண்டு. நல்ல சன்னமான சாரீரம். நல்ல பிரயோகங்கள். விற்பனையாகும் கற்பனைகள். நல்ல வித்வத் அம்சம்.

புஷ்பலதிகா நல்ல ருசியான ராகம். கீர்த்தனைக்கு எடுப்பானது. ஆனால் விஸ்தார



இரு கிருஷ்ணமூர்த்திகளின் கச்சேரிகள்





நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனின் நாதஸ்வரம், வலையபட்டி சுப்பிரமணியம் தவில் முழங்க நடைபெறுகிறது.



செங்கல்பட்டு ரங்கநாதனும் - ஜே. வேங்கடராமனும்

தென்பட்டன. ஒன்று மகாவைத்யநாத சிவனின் மேளராக மாலிகை. இது ஒரு பயிற்சிக் கீர்த்தனை. விவாதி ஸ்வரங்கள் நிரம்பிய ஒரு கூடை. பிசகில்லாமல் பாடினார்கள். இரண்டாவது அந்த சங்கராபரணம். எத்தனை தரம் கேட்டாலும் சற்றும் தெவிட்டாத நவரசமும் பொருந்திய ஆலாபனை. மந்தர ஸ்தாயிலிருந்து அந்தர காந்தாரம்வரை அளவுடன், அழகுடன், அமைப்புடன், அடுக்கடுக்காகச் செதுக்கியும், வளைத்தும், குழைத்தும் வழங்கினார்கள். 'சதாசிவ முபாஸ்மஹே' ஓர் அற்புதமான கீர்த்தனம். அதை அதி அற்புதமாக எம். எஸ். சமர்ப்பித்தார்கள்.

நிரவல் ஸ்வரப் பிரஸ்தாரங்களில் ராதா விசுவநாதனும் வருகை தந்து ஒரு கை பார்த்தார். கச்சிதமாக இருந்தது. நன்றாகத் தன்னம்பிக்கையுடன் பாடலாம். எம். எஸ். ராதா, வயலின் சுப்ரமண்யம் இம்மூவரும் நடத்திய ஸ்வரப் போட்டி மிக உத்சாகமாக இருந்தது. வழக்கம் போல் புரந்தரதாஸரின் 'ஜகதோத்தாரண'வில் அப்படியே சொக்கிப் போனேன்.

ஃ ஃ ஃ

மத்தியானக் கச்சேரிகளில் ஒன்றாக அமைந்திருந்தது செங்கல்பட்டு ரங்கநாதனும், ஜே.




ஜி. என். பி. பாணியில் எஸ். கல்யாணராமன்

வேங்கடராமனும் பாடியது. இவர்கள் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தினார்கள். அதாவது இவர்கள் இருவரும் சேர்ந்து பாடக் கூடாது என்பது. விசாரித்துப் பார்த்ததில் அகாடமிக்காரர்கள் நெருக்கடி காரணமாக இவர்கள் இருவரும் சேர்ந்து தான் பாடவேண்டும் என்று தீர்மானித்து விட்டார்கள் எனத் தெரிய வந்தது. ஸ்வரப்பிரஸ்தாரங்கள் ஆலத்தூர் பாணி. நல்ல பிட்சையும் பாடாந்தரமும் காணப்பட்டன.

ரமணியின் புல்லாங்குழல் கச்சேரி கடற்கரையில் காற்று வாங்குவதுபோல் ஒரு நல்ல குளுமை உணர்ச்சி. எல்லா ஸ்தாயிகளிலும் நல்ல பிடிப்பு. நல்ல பேஷான கச்சேரி. பைரவி ராக ஆலாபனையும், ச்யாமா சாஸ்திரியின் 'அம்ப காமாக்ஷி'யும் 'ஏ—ஒன்'. வயலின் வாசித்த சிறுவன் எல். சுப்ரமண்யன் நமது வருங்கால பொக்கிஷம். எதைக் கொடுத்தாலும் மெருகு பிடித்துத் திருப்பித் தந்து விடுகிறார். 'இந்தா பிடி' வகையறுவைச் சேர்ந்தவர். அறுவசியங்களைத் தவிர்க்க வேண்டும். பாடாந்தரம் தேவை.

டி. கே. பட்டம்மாளின் கச்சேரி ஒரு சிறந்த சங்கீத அனுபவம். ராகங்களோ, கீர்த்தனைகளோ அப்படியே அப்பட்டமாக வடித்து வார்த்து விடுவார். நல்ல மரியாதையான பாட்டு. அறுவசியங்களுக்கு இடமே கிடையாது. அந்தப் 'பிருந்தாவன சாரங்க' கீர்த்தனை தான் எவ்வளவு அழகு! 'ஸௌந்தரராஜம்' அப்படியே உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டது. அரியக்குடி சும்மாவா சொன்னார் 'பாடு பட்டம்மாள்' என்று?



"என்னமோ சார்! கொஞ்ச நாளா ஆபீஸிலேயும் வேலை ஓட மாட்டேனென்கிறது. வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போனாலும் ஓட மாட்டேனென்கிறது!"

"சரிதான்! வேலை மட்டும் உங்க வீட்டுக்கும் ஆபீசுக்குமா ஓடிக் கொண்டிருக்காப்பலே இருக்கு!"

பாலக்காடு மணி அய்யர் ஏன் மண்டபத்தில் வாசிக்கவில்லை என்பது பற்றி நமக்கு அக்கறையில்லை. ஆனால் 'பந்தலில்' வாசித்துப் 'பந்தல்' கட்டிவிட்டார். ஆலத்தூர் சீனுவாசய்யர் அவர்களுக்கு அவர் கொடுத்த 'பக்க பலம்' நல்ல 'பக்கா பலம்'. சீனுவாசய்யருக்கு உயர்ந்த பாடாந்தரம். நல்ல லக்ஷண சங்கீதம். இத்துடன் அன்று காலை சாரீரமும் ஒத்துழைத்தது. கேட்பானேன்? பிலஹரியில் 'பரிதான மிச்சிதே'யும் தோடியில் 'எந்துகு தயராதுரா'வும் சிறப்பாக அமைந்தன. மணி அய்யருக்காகவே மிச்ர சாபுவை எண்ணிப் போட்டுப் பின்னவரை எண்ணி நடந்தார். ஜதிக் கோவைகளை உதிர்க்கச் செய்தார். சீனுவாசய்யரவர்களுக்கு ஒரு வேண்டுகோள். அவர் குருநாதரின் வழியைப் பின்பற்றி நிறைய வித்வார்த்திகளை உண்டுபண்ண வேண்டும். சங்கீதத்துக்கு இதைவிடச் சிறந்த சேவை இருக்க முடியாது.



தயாரிப்பு:
வாண்டுமாமா

23

நீதி வழங்கிய மணி

சுப்புவும் குப்புவும் சகோதரர்கள். அவர்களுக்கு அப்பா கிடையாது. அம்மாதான் இருந்தாள். ஏழைக் குடும்பம். தன் இரு குழந்தைகளையும் அன்போடு வளர்ந்து வந்தாள். அவர்களால் தான் தன் வறுமை விடிய வேண்டும் என்பது அவள் கனவு. அன்று இரவு மழை பெய்திருந்தது. காலையில் சுப்புவும் குப்புவும் பூஜைக்குப் பூப்பறிக்கக் கிளம்பினார்கள். மலர்ந்தமான பூக்களைப் பறித்துக் கொண்டே அரண்மனை மதில் சுவர்ப் பக்கம் வந்துவிட்டார்கள். அப்போது அவர்களை ஓர் உறுதியான இரும்புக் கரம் கெட்டியாகப் பற்றி நிறுத்தியது.

"பயல்களா! அகப்பட்டீர்களா?" என்று கர்ஜித்தது குரல். குழந்தைகளுக்கு ஒன்றுமே புரியவில்லை. குழப்பத்துடன் விழித்தார்கள். விஷயம் இதுதான்: சில நாளாக அரண்மனையின் தானியக் கிடங்கிலிருந்து திருட்டுப் போய்க் கொண்டிருக்கிறது. திருடர்கள் யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே சந்தேகப்படும் நிலையில் உள்ள எல்லோரையும் கைது செய்யும்படி உத்தரவிட்டிருந்தார் அதிகாரி. அதன்படி பலர் கைது செய்யப்பட்டு வந்தார்கள். அந்தப் பட்டியலில் இப்போது இந்தக் குழந்தைகளும் இடம் பெற்று விட்டனர்.

தாங்கள் திருடர்கள் அல்ல என்று எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. இவர்கள் நின்றிருந்த இடத்துக்கருகே மதில் சுவரில் ஒரு துவாரம் இருந்தது. சின்னப் பையன்களைக் கொண்டு பெரிய திருட்டைத் திட்டமிட்டு நடத்துவதாகக் கற்பனை செய்துவிட்டார் அதிகாரி. பாவம், சுப்புவுக்கும் குப்புவுக்கும் அழுகை அழுகையாக வந்தது. தங்களைக் காணாமல் அம்மா எப்படித் தவிப்பாள் என்பதை எண்ணியபோது நெஞ்சம் பதைத்தது.

நீதிபதியின் முன்னால் குப்பு சுப்புவோடு இன்னும் பதினைந்து பேர் நிறுத்தப்பட்டிருந்தனர். அவர்களெல்லாம் வயதானவர்கள். பலவித தோற்றம், உருவம், உடைகளோடு கூடியவர்கள். நீதிபதி எல்லோரையும் ஒருமுறை பார்த்தார். பிறகு "குற்றவாளிகளைக் கண்டு நீதி வழங்கும் பொறுப்பை ஆண்டவன் கோவில் கண்டாமணியிடம் ஒப்படைத்திருக்கிறேன். நீங்களெல்லாம் அங்கே வாருங்கள்" என்றார். கோவில் மணி ரொம்பச் சக்தி வாய்ந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். அதன் ஒலி அவ்வூர் முழுவதற்கும் கேட்கும். அத்தனை பெரிய மணி அது.

எல்லோரும் கோவிலுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தார்கள். கண்டாமணி நந்தி மண்டபத்தின் முன்னால் இருந்தது. அதைச் சுற்றிப் பட்டுச் சேலை கட்டி மறைக்கப்பட்டிருந்தது. சென்று திரும்ப இரு பக்கங்களில் வழியும் விடப்பட்டிருந்தது. அங்கு தயாராக இருந்த நீதிபதி கூறினார்: "நீங்கள் ஒவ்வொருவரும் கிழக்கு வாயில் வழியாக உள்ளே நுழைந்து மணியின் அருகில் சென்று உங்கள் உள்ளங்கை அதில் பதியும்படி அதைத் தொட வேண்டும். திருடர்களானால் மணி ஒலி எழுப்பி அதிரும். குற்றமற்றவர்களானால் எவ்வித ஓசையும் இருக்காது."

கூட்டத்தில் கசமுசவென்று பேச்சு எழுந்தது. மணியின் அற்புத சக்தியில் யாருக்கும் சந்தேகம் கிடையாது. நீதிபதியின் நிபந்தனையை ஒப்புக்கொள்ளுவதைத் தவிர வேறு வழியுமில்லை.

ஒவ்வொருவராக உள்ளே போனார்கள். வெளியில் உள்ளவர்களின் நெஞ்சம் தடக் தடக்கென்று அடித்துக் கொண்டது, மணி ஓசையை எதிர்பார்த்து. குப்புவின் முறை வந்தது. உள்ளே போனான். சுப்பு தவிப்போடு காத்திருந்தான். மணியோசை எழவில்லை. அடுத்து சுப்பு. ம்ஹூம்! ஓசையில்லை. எல்லோரும் உள்ளே போய் வந்து விட்டார்கள். மணி ஒலிக்கவே இல்லை. அப்படியானால் யாருமே திருடர்கள் இல்லையா?

நீதிபதி குப்புவையும் சுப்புவையும் அருகே அழைத்தார். உள்ளங் கையை விரித்துக் காட்டச் சொன்னார். ஐயையோ! இருகைகளிலும் ஒரே கருப்பு! கீச்சட்டென்று தன் சட்டையில் துடைத்துக் கொள்ளப் போனார்கள் இருவரும். பிறகு அம்மா கோபிப்பாளோ என்று அப்படிச் செய்யவில்லை. "அதைக் கழுவினால்தான் போகும். அப்படி ஓரமாக இருங்கள்" என்ற நீதிபதி மற்றவர்களின் கைகளையும் பரிசோதித்தார். பதினாறு பேர்களின் கைகளிலும் கரி. கடைசி நபர் கையை நீட்டினான். பளிச் சென்று இருந்தது. எல்லோரும் வியந்தார்கள். நீதிபதியின் கண்களில் கோபம் பொங்கியது. "இவன் தான் திருடன். கைது செய்யுங்கள் இவனை!" என்றார். அவன் மிரண்டான். "மணிதான் ஒலிக்கவில்லையே!" என்று குமுறினான். நீதிபதி கூறினார்: "குற்றம் புரிந்ததனால் நீ மணியைத் தொடவே இல்லை. தொட்டால் மணி ஒலித்து நம்மைக் காட்டிக் கொடுத்து விடுமோ என்று பயம் உனக்கு. மணியைத் தொட்டவர்களின் கைகளில் எல்லாம் அதில் பூசப்பட்டிருந்த விளக்குக் கரி படிந்திருக்கிறது. திட்டமிட்டே மணியின் மேல்புறத்தில் கரியைப் பூசச் செய்தேன், உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடிக்க" என்றபோது திருடன் நீதிபதியின் கால்களில் விழுந்து தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

குப்புவும் சுப்புவும் நீதிபதியின் மதியூகத்தை வியந்தபடி வீடு நோக்கி ஓடினார்கள்.





கன்றுக் குட்டி


அர்கதமங்கலம் பாப்பா

கன்று நல்ல கன்று
  கருமை நிறக் கன்று
அன்று போட்ட கன்று
  அருமை யான கன்று!
வெள்ளி நிலா கண்டு
  விரும்பி அன்பு கொண்டு
துள்ளி துள்ளி ஆடும்
  தலை தெறிக்க ஓடும்!
மரத்து நிழல் கண்டு
  மறைந்து அங்கே நிற்கும்
உரத்த குரலைக் கொண்டு
  உடனே அன்னை கத்தும்!
தானே வந்து ஊட்டும்
  தாயின் அன்பு காட்டும்!
வானம் உயர்வு என்போம்
  வாழ்வில் அன்னை என்போம்!



தப்பு...தப்பு...தப்பு!

'வயர்லெஸ் டெலிகிராபியைக் கண்டுபிடித்தது யார்' என்று கேட்டால் பத்துப் பேரில் ஒன்பது பேர் மார்கோனி என்றுதான் பதில் கூறுவார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. இந்த நவீன அற்புதத்துக்கு அடி கோலியவர்கள் மாக்ஸ்வெல், ஹெர்ட்ஸ் என்ற இருவர்தான். எலெக்ட்ரோ மாக்னடிக் அலைகளைப் பற்றிய தம் ஆராய்ச்சியை ஹெர்ட்ஸ் வெளியிட்டபோது விஞ்ஞான உலகம் இதன் முக்கியத்துவத்தைப் பற்றி உணர்ந்து கொண்டது. அரை மைலுக்கு அப்பால் உள்ள இடத்துக்கு மின்சார அலைகளைக் கொண்டு சமிக்ஞைகளை அனுப்பலாம் என்பதை 1894ல் விளக்கிக் காட்டினார்கள். இதைக் கண்ணுற்ற மார்கோனி இதை டெலிகிராபியின் இணைத்துப் பரிசோதித்தால் என்ன என்று சிந்திக்கலானார். அவரது ஆராய்ச்சித் திறன், நம்பிக்கை, உழைப்பு, தைரியம் இவைகள் 'வயர்லெஸ் டெலிகிராபி'யைச் சாத்தியமாக்கின. ஹெர்ட்ஸின் கண்டுபிடிப்பு வயர்லெஸ் டெலிகிராபியை மார்கோனி அமைப்பதற்குக் காரணமாக இருந்தது. இப்போது சொல்லுங்கள்...?



இந்தப் படங்களின் வரிசையில் ஒவ்வொன்று ஏதோ ஓர் அமைப்பில் மாறுபட்டிருக்கிறது. மாறுபட்ட அமைப்புடைய அது எது என்பதை உங்களால் ஊகித்து உணர முடிகிறதா பாருங்கள்.

விடை: 1-D, 2-C, 3-D, 4-D, 5-C, 6-E, 7-B.


நீங்கள் எப்போது
கடைகளுக்கு சென்றாலும்
ஒரு பாக்கட் A-1 தேயிலையை
வாங்கி வரவும். ருசியும்
மணமும் ஒருங்கே அமைந்தது.
உங்கள் பணத்தையும்
மீதப்படுத்துகிறது.
Brooke Bond Tea
Brooke Bond
A-1 Dust Tea
ப்ரூக் பாண்ட் A-1 தேயிலைத்தூள்
அதிக கோப்பைகள் சிறந்த
தேநீர் தருவது



பொன்னியின்

நாற்பத்தெட்டாம் அத்தியாயம்

நீர்ச் சுழலும் விழிச் சுழலும்

கடவுள் படைத்த ஆதி மனிதன் ஒரு மலையின் சாரலில் வசித்தான். மழைக்கும் காற்றுக்கும் அவனுக்கு மலைக் குகை அடைக்கலம் தந்தது. வன விருட்சங்கள் அவனுக்குக் தேவையான கனி வர்க்கங்களை உணவாக அளித்தன. காட்டு மிருகங்கள் அவனைக் கண்டு நடுநடுங்கின. வானத்துப் பறவைகளைப் போல் அவன் சுயேச்சையாக ஒரு குறைவும் இல்லாமல் வாழ்ந்து வந்தான். ஆயினும் அவனுடைய உள்ளத்தின் உள்ளே ஏதோ ஒரு குறை,—இனந் தெரியாத ஒரு வகைத் தாபம், — இடைவிடாமல் குடி கொண்டிருந்தது. ஏதோ ஒரு காந்த சக்தி அவனைக் கவர்ந்து இழுத்துக் கொண்டிருந்தது. ஏதோ ஓர் அரிய பொருளை,—இதுவரை பார்த்தும் அநுபவித்தும் அறியாத இன்பத்தை,— அவனுடைய இதயம் தேடிக் கொண்டிருந்தது. பகலில் அதைப் பற்றிக் கற்பனை செய்தான்; இரவில் அதைப் பற்றிக் கனவு கண்டான். ''எனக்காகவே படைக்கப்பட்ட அந்த அற்புதப் பொருளை,—கற்பகக் கனியை,— என்னைக் கவர்ந்திழுக்கும் காந்தத்தை, எங்கே காண்பேன் ? எப்போது காண்பேன்?'' என்று அவன் இதயம் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தது. ஆதி மனிதனைப் படைத்த அதே சமயத்தில் இறைவன் ஆதி ஸ்திரீயையும் படைத்தார். மலையின் மற்றொரு



செல்வன்

அமரர் கல்கி

பக்கத்துச் சாரலில் அவன் வசித்து வந்தான். பசிக்கு உணவும், தாகத்துக்குச் சுனை நீரும், தங்கியிருக்க மலைக் குகையும் அவனுக்கு இருந்தன. வெளிப் படையாகப் பார்த்தால் ஒரு குறைவும் இல்லை. ஆனால் உள்ளத்தினுள்ளே ஒரு தீப்பிழம்பு ஜுவாலை விட்டு அவனை எரித்துக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு சக்தி அவனைக் கவர்ந்து இழுத்துக் கொண்டிருந்தது. அச்சக்தி எங்கிருந்து அவனை இழுக்கிறது, எந்தத் திசையை நோக்கி இழுக்கிறது என்பது ஒன்றும் தெரியவில்லை.

ஆதி மனிதனுக்கும் ஆதி ஸ்திரீக்கும் இடையில் ஒரு பெரிய மலை ஓங்கி நின்று ஒருவரை யொருவர் சந்திக்க முடியாமல் தடுத்துக் கொண்டிருந்தது.

வெயிற் காலத்தில் ஒரு நாள் இயற்கை நியதி காரணமாகக் காட்டில் தீ மூண்டு நாலாபுறமும் பரவத் தொடங்கியது. மலையைச் சுற்றி நெருப்பு அதி வேகமாகப் பரவி வந்தது. மனிதனும் ஸ்திரீயும் காட்டுக்குள் போனால் ஆபத்துக்குள்ளாவோம் என்று உணர்ந்து மலை மேல் ஏறினார்கள். மலையின் உச்சியில் அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்தார்கள். பார்த்த கண்கள் பார்த்தபடி கண் கொட்டாமல் நின்றார்கள். காட்டுத் தீயை மறந்தார்கள். எதற்காக மலை உச்சியில் ஏறினோம் என்பதையும் மறந்தார்கள். பசிதாகங்களை அடியோடு மறந்தார்கள். இத்தனை காலமும் தாங்கள் உயிர் வாழ்ந்ததெல்லாம் இந்த ஒரு சந்திப்புக்காகவே என்பதை உள்ளுணர்வினால் அறிந்தார்கள். தங்களைக் கவர்ந்திழுத்த இனந் தெரியாத சக்தி இதுதான் என்பதையும் தெரிந்து கொண்டார்கள்.

தங்களில் ஒருவரிடம் உள்ள குறையை இன்னொருவரால் இட்டு நிரப்பிப் பூர்த்தி செய்ய முடியும் என்பதையும் அறிந்தார்கள். இவ்விதம் ஒன்று சேர்ந்து விட்டவர்களை இனிப் பிரிக்கக் கூடிய சக்தி உலகில் வேறொன்றும் கிடையாது என்பதையும் உறுதியாக உணர்ந்தார்கள்.

இந்த அற்புதக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த படைப்புக் கடவுளான பிரம்மதேவர் தாம் ஆரம்பித்த வேலை நல்ல முறையில் தொடங்கி விட்டது என்பதை அறிந்து பரிபூரணத் திருப்தி அடைந்தார்!

மேற்கூறிய ஆதி மனிதனையும் ஆதி ஸ்திரீயையும் ஒத்திருந்தார்கள் அந்த நேரத்தில் நம் வல்லவரையனும் குந்தவை தேவியும். இப் பூவுலகில் தாங்கள் பிறந்து வளர்ந்ததெல்லாம் இந்த நிமிஷத்துக்காகவே, — இந்தச் சந்திப்புக்காகவே, — என்பதை அவர்களுடைய உள்ளுணர்ச்சி உணர்த்தியது. ஆனால் ஆதி மனிதனையும் ஆதி ஸ்திரீயையும் போலின்றி இவர்கள் நாகரிக வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் அல்லவா? ஆகையால் தங்களுடைய பரஸ்பர அந்தஸ்தில் இருந்த வேற்றுமையை அவர்கள் மறக்க முடியவில்லை. முழுதும் உணர்ச்சி வசப்பட்டு மனத்தைக் கட்டுக் கடங்காமல் அவர்கள் விட்டுவிடவில்லை. ஒரு கணம் ஒருவரை யொருவர் பார்த்துக் கண்ணோடு கண் சேர்வதும், அடுத்த கணத்தில் தங்கள் கண்களைத் திருப்பி அக்கம் பக்கத்திலிருந்த பூ, மரம், பட்டுப் பூச்சி, ஓடை முதலியவற்றைப் பார்ப்பதுமா யிருந்தார்கள்.

ஈசான சிவபட்டர் தொண்டையைக் கனைத்த பிறகுதான் இருவரும் ஏதோ ஒரு முக்கியமான காரியம் பற்றி இங்கே சந்தித்திருக்கிறோம் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டார்கள்.

''நீர் என்னைத் தனிமையில் பார்க்க வேண்டுமென்று ஈசான பட்டரிடம் தெரிவித்தது உண்மையா?'' என்று குரலைக் கடுமைப்படுத்திக் கொண்டு இளைய பிராட்டி வினவினாள்.

அந்தக் குரலின் கடுமையும் அதிகார தோரணையும் வந்தியத்தேவனை நிமிர்ந்து நிற்கச் செய்தன.

'' தாங்கள் யார் என்று தெரிந்தால் அல்லவா தங்களது கேள்விக்கு விடை சொல்லலாம்? ஈசான பட்டர் என்னைத் தவறான இடத்துக்கு அழைத்து வந்து விட்டாரோ என்று ஐயுறுகிறேன்!'' என்றான் அந்த வீர வாலிபன்.

''எனக்கும் அவ்வித சந்தேகம் உண்டாகிறது. நீர் யாரைப் பார்க்க விரும்பினீர்?''

''சோழர் தொல்குலத்தின் மங்கா மணிவிளக்கை, சுந்தர சோழ மன்னரின் செல்வத் திருமகளை, ஆதித்த கரிகாலருக்குப் பின் பிறந்த சகோதரியை, அருள்மொழிவர்மரின் அருமைத் தமக்கையை, இளையபிராட்டி குந்தவை தேவியைப் பார்க்க வேண்டுமென்று ஈசான சிவ பட்டரிடம் சொன்னேன்....''

குந்தவைப் பிராட்டி புன்னகை பூத்து, ''அவ்வளவு பெருமையையும் தாங்க முடியாமல் தாங்கிக் கொண்டிருப்பவள் நான்தான்!'' என்றாள்.

''அப்படியானால் குடந்தை ஜோதிடர் வீட்டிலும் அரிசிலாற்றங்கரையிலும் நான் பார்த்த நாரீமணி தாங்கள் இல்லைதானே?'' என்றான் வல்லவரையன்.

''ஆமாம், ஆமாம்! அந்த இரண்டு இடத்திலும் அவ்வளவு மரியாதைக் குறைவாகத் தங்களிடம் நடந்துகொண்டவளும் நானேதான். அந்த நாகரிகமில்லா மங்கையை மறுபடியும் இவ்வளவு சீக்கிரத்தில் சந்திப்போம் என்று எதிர்பார்த்திருக்க மாட்டீர்!''

''மறுபடியும் சந்திப்பதாகச் சொல்வது பொருத்தமில்லை, தேவி!''

'' ஏன்?''

''விட்டுப் பிரிந்திருந்தால் அல்லவா மறுபடியும் சந்திப்பதாகச் சொல்லலாம்? தாங்கள் என் மனத்தை விட்டு ஒரு கணமும் அகலவில்லை....''

''தொண்டை மண்டலத்தார் இவ்வளவு சமத்காரமாகப் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை.''

''எல்லாப் பெருமையையும் சோழ நாட்டுக்கேதான் கொடுப்பீர்களாக்கும். வேறு நாடுகளுக்கு ஒரு பெருமையும் தர மாட்டீர்கள் போலிருக்கிறது.''

''ஆம்; என்னிடம் அந்தக் குற்றம் இருப்பது உண்மைதான். உமக்கு எங்கள் சோழ நாட்டைப் பிடிக்கவில்லையாக்கும்!''

''பிடிக்காமல் என்ன? நன்றாய்ப் பிடித்திருக்கிறது. ஆனால் இச்சோழ நாட்டில் இரண்டு பெரும் அபாயங்கள் இருக்கின்றன. அவற்றை எண்ணினாலே எனக்குப் பயமாயிருக்கிறது...!''

''சோழ நாட்டு வீரர்களின் வாளும் வேலும் அபாயகரமான ஆயுதங்கள்தான்! அயல் நாட்டவர்கள் இங்கே ஜாக்கிரதையாகவே வர வேண்டும். முக்கியமாக, ஒற்றர் வேலை செய்வதற்கென்று வருவோர்....''

''இளவரசி! அந்த இரு அபாயங்களை நான் குறிப்பிடவில்லை. வாளும் வேலும் என்னிடமும் இருக்கின்றன. அவற்றை உபயோகிப்பதற்கும் நான் நன்கு அறிவேன்....''

''உமது வேலின் வன்மையைத்தான் அரிசிலாற்றங் கரையில் அன்று பார்த்தேனே? செத்துப் போன முதலையை உமது வேல் எத்தனை வேகமாய்த் தாக்கியது? ஒரே தாக்குதலில் உள்ளே அடைத்திருந்த பஞ்சையெல்லாம் வெளிக் கொண்டு வந்துவிட்டதே?''

''அம்மணி! சோழ நாட்டு மாதரசிகள் செத்த முதலையைக் கண்டு பயந்து சாகும் வீர நாரீமணிகள் என்பதை நான் அறியேன். சோழ நாட்டு வீரர்கள் செத்த முதலையைத் தாக்கும் சுத்த வீரர்கள் என்றும் எனக்குத் தெரியாது. உயிருள்ள முதலையாக்கும் என்று எண்ணி வேலை எறிந்தேன். அது என் தவறும் அன்று; என் வேலின் தவறும் அன்று!....''

''அந்த அசட்டு முதலையின் தவறுதான்! வாணர் குலத்தில் பிறந்த வீர வந்தியத்தேவர் வேலோடு வரும் வரையில் காத்துக் கொண்டிராமல் முன்னதாகவே செத்துப் போய்விட்டதல்லவா? அதற்கு நன்ருய் வேணும் இந்த அவமானம்!.... வேறு எந்த இரு அபாயங்களைப் பற்றிச் சொன்னீர்?''

''இந்தச் சோழ நாட்டு நதிகளில் புதுவெள்ளம் வரும்போது உண்டாகும் சுழல்கள் அபாயமானவை; அவற்றை ஒரு போதும் நம்பவே கூடாது. என்னைத் திண்டாடித் திணறும்படி செய்து விட்டன!''

''வெள்ளச் சுழலில் நீர் எப்படி அகப்பட்டுக் கொண்டீர்? தண்ணீரில் காலையே வைக்க மாட்டீர் என்றல்லவா உம்மைப் பார்த்தால் தோன்றுகிறது?''

''வேதாளத்துக்கு வாழ்க்கைப்பட்டு முருங்கை மரத்தில் ஏறமாட்டேன் என்ருல், முடிகிற காரியமா? சோழ நாட்டுக்கு வந்த காரணத்தினுல், நதி வெள்ளத்தில் முழுகிச் சுழலிலும் சிக்கும்படியாகி விட்டது! என்னோடு துணைக்கு வந்த ஓர் அசட்டுப் பிள்ளையின் பிடிவாதத்தினுல் அப்படி நேர்ந்தது! கேளுங்கள், தேவி! அந்தப் பிள்ளை ஒரு சின்னஞ் சிறிய பொய் சொல்ல முடியாது என்ருன். அதனுல் வந்த வினை....''

''நீர் சொல்லுவது புதிராக இருக்கிறது. இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னுல் நல்லது.''

''சொல்கிறேன். தங்களுடைய அருமைச் சகோதரரின் ஓலையுடன் தூதனுக வந்த என்னைத் தஞ்சைக் கோட்டைத் தலைவர் சிறிய பழுவேட்டரையர் 'ஒற்றன்' என்று குற்றஞ் சாட்டிப் பிடித்து வர ஆட்களை ஏவினர். வந்த காரியம் பூர்த்தியாவதற்குள் சிறைப்பட நான் விரும்பவில்லை. ஆகையால் நான் தஞ்சையில் தங்கியிருந்த வீட்டுச் சிறுவனை வழிகாட்ட அழைத்துக் கொண்டு கிளம்பினேன்....''

''தஞ்சை நகரில் யாருடைய வீட்டில் தங்கினீர்?''

''கோட்டைக்கு வெளியிலே பூக்காரப் பெண்மணி ஒருத்தியின் வீட்டில் தங்கினேன். அந்த அம்மாள் ஊமை.''

''ஓகோ! அவளுடைய பெயர்?..''

''அந்த அம்மாளின் பெயர் தெரியாது; ஆனுல் அவளுடைய பிள்ளையின் பெயர் மட்டும் எனக்குத் தெரியும். அவன் பெயர் சேந்தன் அமுதன்.....''

''நான் நினைத்தது சரிதான்; மேலே சொல்லுங்கள்!''

''என் குதிரை மேல் அச்சிறுவனையும் ஏற்றிக் கொண்டு இந்தப் பழையாறை நகரை நோக்கி வந்து கொண்டிருந்தேன். அதற்குள் பழுவேட்டரையரின் ஆட்கள் சிலர் எங்களை நெருங்கி வந்து விட்டார்கள். நான் வந்த காரியம் முடிவதற்குள் அவர்களிடம் பிடிபட விரும்பவில்லை. குடமுருட்டி ஆறு வந்ததும் அச் சிறுவனிடம், 'நான் இங்கே இறங்கிக் கொள்கிறேன், தம்பி! நீபாட்டுக்குக் குதிரையை விட்டுக் கொண்டு போ! உன்னை நான் தான் என்று அவர்கள் தொடர்ந்து துரத்தி வருவார்கள். உன்னைப் பிடித்த பிறகு ஏமாறுவார்கள்! நான் எங்கே என்று அவர்கள் கேட்டால் ஆற்றில் விழுந்து முழுகிப் போய் விட்டதாகச் சொல்!' என்றேன். அந்தப் பையனே அரிச்சந்திரனுடைய சந்ததியில் வந்தவன் போலிருக்கிறது. 'நீங்கள் முழுகாதபோது எப்படி முழுகி விட்டதாகப் பொய் சொல்லுவேன்?' என்ருன். அந்தப் பிள்ளை பொய் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படாமலிருக்கும் பொருட்டு, அவனைக் குதிரையில் சேர்த்துக் கட்டி விட்டு, நான் நதியில் குதித்து முழுகி விட்டேன். அம்மம்மா! இந்தச் சோழ நாட்டு நதிகளில், அதுவும் கரை ஓரங்களில், எப்பேர்ப்பட்ட நீர்ச் சுழல்கள்! அவற்றில் அகப்பட்டுக் கொண்டு நான் பெரிதும் திண்டாடிப் போனேன். கடைசியில், கரை ஓரத்தில் இருந்த மரத்தின் வேர் ஒன்றைப் பிடித்துக் கொண்டு கரையேறி உயிர் பிழைத்து வந்தேன். தேவி! நீர்ச் சுழலில்

ான் அகப்பட்டுக் கொண்டு சுழன்று சுழன்று சுழன்று மதிமயங்கி மூச்சுத் திணறிக் கஷ்டப்பட்டபோது என்ன கண்டேன், எதை நினைத்துக் கொண்டேன் என்று எண்ணுகிறீர்கள்?''

''நான் எவ்விதம் அறிவேன்? ஒருவேளை கஜேந்திர மோட்சத்தை நினைத்துக் கொண்டிருக்கலாம்....''

''இல்லை, இல்லை; என்னைப் போலவே அந்த நீர்ச் சுழலில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடிய சில கயல் மீன்களைக் கண்டேன். அந்தக் கயல் மீன்கள் இந்தச் சோழ நாட்டுப் பெண்களின் கண்களை நினைவூட்டின. நதியின் நீர்ச் சுழலில் அகப்பட்டுக் கொண்டவனாவது எப்படியோ தப்பிப் பிழைக்கலாம்; ஆனால் இந்தச் சோழ நாட்டுப் பெண்களின் விழிச் சுழலில் அகப்பட்டுக் கொண்டவன் ஒருகாலும் தப்பிப் பிழைக்க முடியாது என்று எண்ணிக் கொண்டேன்!....''

''இம்மாதிரி பெண்களைக் குற்றம் கூறிப் பழி சொல்வதில் சிலருக்கு ஒரு பெருமை; தாங்கள் செய்யும் தவறுக்குப் பெண்களின் மீது குற்றம் சொல்வது ஆண் பிள்ளைகளின் வழக்கம்.....''

''அந்த வழக்கத்தைத்தான் நானும் கைப்பற்றினேன். அதில் என்ன தவறு?'' என்றான் வந்தியத்தேவன்.

அச்சமயம் அரண்மனைக்குள்ளேயிருந்து இனிய குழலோசை கேட்டது. அதைத் தொடர்ந்து தண்டைச் சிலம்புகளின் கிண்கிணி ஒலியும் மத்தளத்தின் முழக்கமும் கலந்து வந்தன. பின்னர், இளம் பெண்களின் இனிய குரல்கள் பல சேர்ந்து ஒலித்தன. சிலப்பதிகாரக் காவியத்தில் உள்ள பின்வரும் ஆய்ச்சியர் குரவைப் பாடலைப் பாடினார்கள்:—

''கன்று குணிலாக் கனி உதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள்வருமேல் அவன் வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ!
கொல்லையஞ்சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் ஆனுள் வருமேல் அவன் வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ!''

பாடல் முடியும் வரையில் குந்தவையும் வந்தியத்தேவனும் அதன் இனிமையில் ஈடுபட்டுத் தம் வசமிழந்து நின்றார்கள். மறுபடியும் வாத்திய முழக்கத்துடன் ஆடல் தொடங்கியதற்கு அறிகுறியாகத் தண்டைச் சதங்கைகளின் ஒலி எழுந்தது.

''அரண்மனையில் குரவைக் கூத்து நடக்கிறது போலும்! கடம்பூர் மாளிகையில் குரவைக் கூத்து ஒன்று பார்த்தேன். அது முற்றும் வேறுவிதமாயிருந்தது!'' என்றான் வல்லவரையன்.

''ஆம்; என் தோழிகள் குரவைக் கூத்துப் பயில்கிறார்கள். சீக்கிரத்தில் என்னைக் காணாமல் தேடத் தொடங்கி விடுவார்கள். தாங்கள் வந்த காரியம் என்ன?'' என்று இளைய பிராட்டி குந்தவை தேவி கேட்டாள்.

''இதோ நான் வந்த காரியம்; தங்கள் தமையனாரின் ஓலை; எத்தனையோ அபாயங்களுக்குத் தப்பி, நீர்ச்சுழல்கள்—விழிச் சுழல்களிலிருந்து காப்பாற்றி, இதைக் கொண்டு வந்தேன்!'' என்று வல்லவரையன் கூறி ஓலையை எடுத்து நீட்டினான்.

நாற்பத்தொன்பதாம் அத்தியாயம்

விந்தையிலும் விந்தை!

குந்தவைப் பிராட்டி வந்தியத்தேவன் நீட்டிய ஓலையைப் பெற்றுக் கொண்டு படித்தாள். அது வரையில் நெரித்த புருவங்களுடன் சுருங்கியிருந்த அவள் முகம் இப்போது மலர்ந்து பிரகாசித்தது.

வல்லவரையனை நிமிர்ந்து நோக்கி, ''ஓலையைக் கொடுத்து விட்டீர். இனி என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று கேட்டாள் குந்தவை தேவி.

''தங்களிடம் ஓலையைக் கொடுத்ததுடன் என் வேலையும் முடிந்து விட்டது. இனி, நான் ஊருக்குத் திரும்ப வேண்டியதுதான்.''

''உமது வேலை முடியவில்லை; இப்போதுதான் ஆரம்பமாகியிருக்கிறது.''

''தாங்கள் சொல்லுவது ஒன்றும் விளங்கவில்லை, தேவி!''

''உம்மிடம் அந்தரங்கமான வேலை எதையும் நம்பி ஒப்புவிக்கலாம் என்று இதில் இளவரசர் எழுதியிருக்கிறாரே? அதன்படி நீர் நடந்து கொள்ளப் போவதில்லையா?''

''இளவரசரிடம் அவ்விதம் ஒப்புக் கொண்டுதான் வந்தேன். ஆனால் என்னை நம்பி முக்கியமான வேலை எதுவும் ஒப்புவிக்க வேண்டாம். தங்களை ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன்.''



'அந்த அதிகரித்த வெண்மை எங்கிருந்து வருகிறது?'
Tinopal

அமிர்தாஞ்சனம்



இதமாகவும்
துரிதமாகவும்
தலைவலியைப் போக்கி
நிம்மதியளிக்கிறது



- அமிர்தாஞ்சனம் எந்த விதத்திலும் தீங்கு செய்யாது. வலியுள்ள இடத்தில் சிறிதளவே தடவினால் போதும்.
- அமிர்தாஞ்சனம் வலியைத் துரிதமாகப் போக்குகிறது. ஏனெனில் இதில் சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் உள்ளன.
- அமிர்தாஞ்சனம் தடவிக் கொண்டால் இதமான நிம்மதியளிக்கிறது. ஏனெனில் இதில் மெந்தால், கற்பூரம் ஆகியவை கலந்துள்ளன.
- அமிர்தாஞ்சனம் சிக்கனமானது. ஏனெனில் ஒரு பாட்டில் மருந்தை வெகுநாட்களுக்கு உபயோகிக்கலாம்.

அமிர்தாஞ்சனம் லிமிடெட்

மதராஸ் . பம்பாய் . கல்கத்தா
புது டில்லி . ஹைதராபாத்



75
வருடங்களுக்கும்
மேலாக
புகழ்வாய்ந்தது.

AMR - 13 Tam

"உமது கோரிக்கை எனக்கு விளங்கவில்லை. ஒன்றை ஒப்புக் கொண்ட பிறகு பின்வாங்குவதுதான் வாணர் குலத்தின் மரபா ?"

"பழம் பெருமை பேசுவது வாணர் குலத்தின் மரபு அன்று ; ஒப்புக் கொண்டு பின்வாங்குவதும் வாணர் குலத்து மரபு அன்று."

"பின்னர், ஏன் தயக்கம்? பெண் குலத்தின் பேரில் கொண்ட வெறுப்பா? அல்லது என்னைக் கண்டால் பிடிக்கவில்லையா ?" என்று இளவரசி கூறி இளநகை புரிந்தாள்.

ஆகா ! இது என்ன கேள்வி ? கடலுக்குச் சந்திரனைப் பிடிக்காமல் போகுமா ? பிடிக்கவில்லையென்றால் ஆயிரம் அலைக் கைகளையும் நீட்டிப் பூரண சந்திரனை ஏன் தாவிப் பிடிக்க முயல்கிறது ? நீல வானத்துக்குப் பூமாதேவியைப் பிடிக்கவில்லை யென்று யார் சொல்லுவார்கள்? பிடிக்காது போனால், இரவெல்லாம் ஆயிரமாயிரம் நட்சத்திரக் கண்களினால் இந்தப் பூமியை உற்று உற்றுப் பார்த்து ஏன் பூரித்துக் கொண்டிருக்கிறது ? மேகத்துக்கு மின்னலைப் பிடிக்காதிருக்குமா ? பிடிக்கவில்லை யென்றால், தன்னைப் பிளந்து கொண்டு பாய்ந்தோடும் மின்னலை அப்படி ஏன் இறுகத் தழுவி மார்போடு அணைத்துக் கொள்கிறது? வண்டுக்கு மலர் பிடிப்பதில்லையென்பது உண்டா? அங்ஙனமானால் ஏன் ஓயாமல் மலரைச் சுற்றி வட்டமிட்டு மதி மயங்கி விழுகிறது? விட்டில் பூச்சிக்கு விளக்கைப் பிடிக்கவில்லையென்றால் யாரேனும் நம்புவார்களா ? அவ்வாறெனில், ஏன் அந்த விளக்கின் ஒளியில் விழுந்து உயிரை விடுகிறது? தேவி ! நல்ல கேள்வி கேட்டீர் ! தங்களை எனக்குப் பிடிக்கவில்லை யென்றால், தங்களது கடைக் கண் பார்வை என்னை ஏன் இப்படித் திகைக்க வைக்கிறது ? தங்களது இதழ்களின் ஓரத்தில் விளையாடும் இளநகை என்னை ஏன் இவ்விதம் சித்தப் பிரமை கொள்ளச் செய்கிறது?.... இவ்வளவு எண்ணங்களும் வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் தோன்றின. ஆனால், நாவினால் சொல்லக்கூடவில்லை.

"ஐயா ! என்னுடைய கேள்விக்கு மறுமொழி சொல்லவில்லையே? வாணர் குலத்தில் பிறந்த வீர புருஷன் கேவலம் ஒரு பெண்ணின் ஏவலைச் செய்வதா என்று தயக்கமா? இளவரசர் உங்களிடம் இந்த ஓலையைக் கொடுத்த போது இதில் எழுதியிருப்பதைப் பற்றிச் சொல்லவில்லையா?" என்று இளவரசி மீண்டும் வினவினாள்.

"தேவி! இளவரசர் விருப்பத்தை நன்கு தெரிந்து கொண்டுதான் புறப்பட்டு வந்தேன். ஆனால் நல்லவேளையில் என் யாத்திரையைத் தொடங்கவில்லையெனத் தோன்றுகிறது. ஆகையால் வழியெல்லாம் விரோதிகளைச் சம்பாதித்துக் கொண்டு வந்தேன். உற்ற நண்பனையும் பகைவன் ஆக்கிக் கொண்டேன். நாலா புறத்திலும் பகைவர்கள் என்னைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் தாங்கள் இடும்பணியை நான் நிறைவேற்றுவதாக எப்படி உறுதி சொல்ல முடியும் ? இதனால்தான் தயங்குகிறேன். என்னால் தங்கள் காரியம் கெட்டுப் போகக் கூடாதல்லவா ?" என்று சொன்னான் வல்லவரையன்.

"யார் யார் அந்தப் பகைவர்கள் ? எனக்குத் தெரிவிக்கலாமா ?" என்று குந்தவை கவலை தொனித்த குரலில் கேட்டாள்.

"பழுவேட்டரையர்கள் என்னை வேட்டையாடிப் பிடிக்க நாலாபுறமும் ஆட்களை ஏவியிருக்கிறார்கள். என் உயிர் நண்பனாயிருந்த கந்தமாறன் நான் அவனை முதுகில் குத்திக் கொல்ல முயன்றதாக எண்ணிக் கொண்டிருக்கிறான். ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவ வேஷதாரி ஒருவன் என்னைத் தொடர்ந்து கொண்டிருக்கிறான். பழுவூர் இளையராணி நந்தினி தேவி என் மீது ஒரு மந்திரவாதியை ஏவி விட்டிருக்கிறாள். எந்த நிமிஷத்தில் யாரிடம் நான் அகப்பட்டுக் கொள்வேனோ, தெரியாது...."


வெள்ளத்திலிருந்து கரையேறித் தப்பிய அன்றிரவு மந்திரவாதியுடன் நேர்ந்த அநுபவம் வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தது. பகலில் பிரயாணம் செய்வதின் அபாயத்தை எண்ணி மூங்கில் காடுகளிலும் வாழைத் தோப்புக்களிலும் அவன் பொழுது போக்கினான். இரவில் நதிக் கரையோடு நடந்து சென்றான். வெகு தூரம் நடந்து களைத்து இரவு மூன்றாம் ஜாமத்தில் ஒரு பாழடைந்த பழைய மண்டபத்தை அடைந்தான். வெளியில் நிலா மதியம் பட்டப் பகல் போலப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மண்டபத்துக்குள்ளேயும் சிறிது தூரம் நிலா வெளிச்சம் புகுந்து பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தது. வெளிச்சமாயிருந்த பகுதியைக் கடந்து இருளடைந்த பகுதிக்குச் சென்று வந்தியத்தேவன்

படுத்துக் கொண்டான். கண்ணைச் சுற்றிக் கொண்டு தூக்கம் வந்த சமயத்தில் வெகு சமீபத்திலிருந்து ஆந்தையின் அகோரமான குரல் வந்தது. பழுவூர் இளைய ராணியுடன் லதா மண்டபத்தில் பேசிக் கொண்டிருந்தபோது அதே மாதிரி ஆந்தைக் குரல் கேட்டது அவனுக்கு நினைவு வந்து திடுக்கிட்டு எழுந்தான். உள்ளே இருட்டின பகுதியிலிருந்து இரு சிறிய ஒளிப் பொட்டுக்கள் அவனை உற்று நோக்கின. வெளியிலே போய்விடலாம் என்று எண்ணி இரண்டு அடி நடந்தான். வெளியிலிருந்து யாரோ உள்ளே வரும் காலடிச் சத்தம் கேட்டது. இடிந்து விழுந்து கரடு முரடாயிருந்த தூண் ஒன்றைப் பிடித்துக் கொண்டு அதன் மறைவில் நின்றான். வெளியிலிருந்து வந்தவன் முகம் நிலா வெளிச்சத்தில் கொஞ்சம் தெரிந்தது. பழுவூர் ராணியைப் பார்க்க வந்த மந்திரவாதிதான் அவன் என்பதைத் தெரிந்து கொண்டான். மந்திரவாதி அந்தத் தூணை நோக்கியே வந்தான். தான் அவ்விடம் மறைந்திருப்பது அவனுக்குத் தெரியாது என்றும், தன்னைக் கவனியாமல் மண்டபத்துக்குள்ளே போய் விடுவான் என்றும் வந்தியத்தேவன் நினைத்தான். ஆனால் தூணின் அருகில் வரும் வரையில் மெள்ள மெள்ளப் பூனைபோல் நடந்து வந்த மந்திரவாதி திடீரென்று கோரமான குரலில் ஒரு கூச்சல் போட்டுக் கொண்டு வந்தியத்தேவனுடைய கழுத்தை ஒரு கையினால் பிடித்து நெரித்தான். ''எடு! அந்தப் பனை இலச்சினை மோதிரத்தைக் கொடு! கொடுக்கா விட்டால் உன் கழுத்தை நெரித்துக் கொன்று விடுவேன்!'' என்று கத்தினான்.

வந்தியத் தேவனுடைய கழுத்து முறிந்து விடும்போலிருந்தது; அவனுடைய விழிகள் பிதுங்கி வெளிவந்து விடும்போலிருந்தன. மூச்சுத் திணறியது. எனினும், மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான். அந்தப் பழைய தூணை ஒரு கையினால் அழுத்திக் கொண்டு ஒரு காலைத் தூக்கிப் பூரண பலத்தையும் பிரயோகித்து ஓர் உதை விட்டான். மந்திரவாதி ஓலமிட்டுக் கொண்டு கீழே விழுந்தான். அதே சமயத்தில் அந்தப் பழைய தூண் சரிந்து விழுந்தது. மேலே கூரையிலிருந்து பொல பொல வென்று கற்கள் விழுந்தன. வௌவால் ஒன்று பட பட வென்று சிறகை அடித்துக் கொண்டு



வெளியே சென்றது. அதைத் தொடர்ந்து வந்தியத் தேவனும் வெளியேறினான். ஓட்டம் பிடித்தவன் சிறிது தூரம் வரையில் திரும்பிப் பார்க்கவேயில்லை. பின்னால் யாரும் தொடர்ந்து வரவில்லையென்று நிச்சயமான பிறகுதான் நின்றான். அந்த இரவு அனுபவத்தை நினைத்ததும் வந்தியத் தேவனுடைய உடம்பெல்லாம் இப்போதுகூட கிடுகிடு வென்று நடுங்கியது.



அந்தப் பயங்கர நினைவுகளுக்கிடையில், "ஐயா! காஞ்சியிலிருந்து தாங்கள் புறப்பட்டு எத்தனை காலமாயிற்று ?" என்று குந்தவை கேட்டது அவனுடைய காதில் விழுந்து அவனுக்கு மனத் தெளிவை அளித்தது.

"ஒரு வாரமும் ஒரு நாளும் ஆயிற்று. தேவி !" என்றான்.

"இதற்குள் இவ்வளவு பகைவர்களை நீர் சம்பாதித்துக் கொண்டது விந்தையிலும் விந்தைதான். இவ்வளவு அதிசயமான காரியத்தை எப்படிச் சாதித்தீர் ?"

"அது பெரிய கதை, தேவி !"

"இருந்தால் பாதகமில்லை. சொல்லலாம். அந்த விவரங்களைத் தெரிந்து கொண்டபிறகுதான் உமக்கு நான் இடவேண்டிய பணியை இடக்கூடும்."

இவ்வாறு இளவரசி கூறிவிட்டு, ஈசான சிவ பட்டரை அருகில் அழைத்து, "படகோட்டி எப்படிப் பட்டவன்?" என்று கேட்டாள்.

"இரண்டு காதும் நல்ல செவிடு ; இடி இடித்தாலும் கேளாது, தாயே !"

"ரொம்ப நல்லது. படகிலேறிக் கொஞ்ச தூரம் ஓடையில் போய்விட்டு வரலாம், வாருங்கள் ! இவருடைய கதையை முழுதும் நான் கேட்க வேண்டும் !" என்றாள்.

வல்லவரையன் புளகாங்கிதம் அடைந்தான். சோழர் குலத் திரு மகளோடு ஒரு படகில் செல்லும் பாக்கியம் எளிதில் கிட்டுவதா ? அதைப் பெறுவதற்கு ஏழு ஜன்மங்களில் தான் தவம் செய்திருக்க வேண்டாமா? படகில் ஏறிய பிறகு எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் கதையை நீட்டி வளர்த்திச் சொல்ல வேண்டும்! சுருக்கமாக முடித்து விடக் கூடாது ! அவசரம் என்ன? அரிதில் பெற்ற பாக்கியத்தை எளிதில் கை நழுவ விட்டுவிடலாமா?

வந்தியத்தேவனுக்கு அவசரமில்லை தான். ஆனால் படகு ஓடையில் நகர்ந்து அவன் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் நடந்ததைச் சொல்லத் தொடங்கியது முதல் குந்தவைக்கு நிமிஷத்துக்கு நிமிஷம் அவசரமும் பரபரப்பும் அதிகமாகி வந்தன. "மேலே என்ன?" "அப்புறம் என்ன?" என்று கேட்டுத் துரிதப்படுத்தி வந்தாள். வந்தியத்தேவன் அவனுடைய தீர்மானத்தின் படி கூடியவரையில் கதையை வளர்த்தினான். எவ்வளவு நீண்ட கதையாயினும் முடிவு ஒன்று வந்துதானே ஆகவேண்டும்? கதை முடிந்த போது படகும் திரும்ப ஓடைப் படித் துறைக்கு வந்து சேர்ந்தது.

படகிலிருந்து அவர்கள் இறங்கிப் பூங்காவுக்குள் வந்த போது, அரண்மனையில் இன்னும் குரவைக் கூத்து நடந்து கொண்டிருந்ததற்கு அறிகுறியாக இசைக் கருவிகளும் தண்டைச் சிலம்புகளும் ஒலித்தன. பின்வரும் சிலப்பதிகார வரிப் பாடலும் கேட்டது :—

"பெரியவனை மாயவனைப் பேருலகமெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக்கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார் தம்
கண்ணென்ன கண்ணே !

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும்
போற்றப்
படர்ந்தாரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே!
நாராயணா வென்னா நாவென்ன நாவே!"

இதைக் கேட்ட வல்லவரையன், "கஞ்சனார் மிக்க வஞ்சனாரா யிருக்கலாம் ! ஆனால் எனக்கு நேற்றுப் பேருதவி செய்தார் !" என்றான்.

"அது என்ன? கம்ஸன் உமக்கு என்ன உதவி செய்திருக்க முடியும் ?" என்று இளைய பிராட்டி கேட்டாள்.

"நான் இந்த நகரத்துக்குள் புகுவதற்குக் கம்ஸன்தான் உதவி செய்தான்!" என்றான் வந்தியத்தேவன். பிறகு, அந்த உதவியின் வரலாற்றையும் கூறினான்.

பழையாறைக்குத் தான் வந்து சேர்வதற்குள்ளாகவே பழுவேட்டரையரின் ஆட்கள் வந்திருப்பார்கள் என்று வந்தியத்தேவன் ஊகித்திருந்தான். நகரத்தின் நுழை வாசல்கள்தோறும் அவர்கள் காத்திருப்பார்கள். சந்தேகம் ஏதேனும் தோன்றினால் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள். அவர்களிடம் சிக்காமல் பழையாறை நகருக்குள் பிரவேசிப்பது எப்படி? — இந்தக் கவலையுடன் அந்த மாநகரின் பிரதான வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் அரிசிலாற்றங் கரையில் வந்தியத்தேவன் நின்றிருந்த போது நாடகக் கோஷ்டி ஒன்று வந்தது. கண்ணன், பலதேவன், கம்ஸன் முதலிய வேஷக்காரர்கள் வந்தார்கள். அவர்களில் கம்ஸன்

மட்டும் மரத்தினுலான முகத்தைத் தரித்திருந்தான். வந்தியத்தேவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. நாடகக் கோஷ்டியுடன் பேச்சுக் கொடுத்தான். கம்ஸன் வேஷம் போட்டவனுக்கு ஆட்டத் திறமை அவ்வளவு போதாது என்ருன். கம்ஸ வேஷக்காரன் இவனுடன் சண்டைக்கு வந்தான். வந்த சண்டையை இலகுவில் வல்லவரையன் விடுவானு? "உன்னைவிட நான் நன்ருக ஆடுவேன். பார்க்கிருயா?" என்று சொல்லி முகமூடியைப் பலவந்தமாகப் பிடுங்கி வைத்துக் கொண்டு ஆடினுன். அச்சமயம் அவனுடைய ஆரவாரத் தடபுடலைப் பார்த்தவர்கள் அவனை மெச்சினுர்கள். அவன் ஆடியது தான் அதிகப் பொருத்தமாக இருந்தது என்றும் சொன்னுர்கள். கம்ஸ வேஷக்காரன் கோபித்துக் கொண்டு போய் விட்டான். "அவன் போனுல் போகட்டும்; நானே உங்களுடன் நகரத்துக்குள் வந்து ஆடுகிறேன்" என்று வந்தியத்தேவன் ஒப்புக் கொண்டான். நாடகக் கோஷ்டியார் மகிழ்ச்சியுடன் அவனைத் தங்களுடன் சேர்த்துக் கொண்டு சென்ருர்கள்.

பழையாறை வீதிகளில் ஆட்டம் பாட்டமெல்லாம் முடிந்த பிறகு வந்தியத் தேவன் ஆதித்த கரிகாலர் சொல்லியனுப்பியபடி வடமேற்றளி ஆலயத்துக்குச் சென்று ஈசான பட்டரைச் சந்தித்துப் பேசினுன். அவர் அவனைக் கோயிலைச் சுற்றியிருந்த சமணர் முழையில் இருக்கச் செய்து, இளவரசி குந்தவைப் பிராட்டியிடம் முன்னுல் தெரிவித்துவிட்டு ஓடை வழியாக அழைத்து வந்தார்.

இந்த விவரங்களைக் கேட்ட இளவரசி வந்தியத்தேவனை வியப்பினுல் மலர்ந்த கண்களைக் கொண்டு பார்த்து, "வெற்றித் தெய்வமாகிய கொற்றவையின் கருணை இந்தச் சோழர் குலத்துக்குப் பரிபூரணமாக இருக்கிறது. ஆகையினுலேதான் இந்தச் சங்கடமான நிலைமையில் தங்களை எனக்கு உதவியாகத் தேவி அனுப்பி வைத்திருக்கிருள்!" என்ருள்.


"அரசி! இன்னும் தாங்கள் எந்தவிதப் பணியும் எனக்கு இடவில்லையே! என் பூரண ஆற்றலைக் காட்டக் கூடிய சமயம் இன்னும் கிட்டவில்லையே!" என்ருன் வல்லவரையன்.

"அதைப் பற்றிக் கவலை வேண்டாம். இதுகாறும் உங்களுக்கு நேர்ந்திருக்கும் அபாயங்கள் எல்லாம் ஒன்றும் இல்லை என்று சொல்லக் கூடிய அளவு அபாயம் நிறைந்த வேலையைத் தரப் போகிறேன்!" என்ருள்.

வந்தியத்தேவன் உள்ளம் பொங்கி உடல் பூரித்து நின்ருன். அந்தப் பெண்ணரசி இடும் பணியை நிறைவேற்றுவதற்காக ஏழு கடல்களைக் கடந்து செல்லவும், ஆயிரம் சிங்கங்களுடன் ஆயுதம் இன்றிப் போர் செய்யவும், மேரு பர்வதத்தின் உச்சியில் ஏறி விண் மீன்களைக் கையினுல் பறித்து எடுத்துக் கொண்டு வரவும் அவன் சித்தமானுன்.

அரண்மனை நந்தவனத்தின் மத்தியில் பளிங்கினுல் ஆன வஸந்த மண்டபம் ஒன்று இருந்தது. அதை நோக்கிக் குந்தவை நடந்தாள். பட்டரும் வந்தியத் தேவனும் இளவரசியைத் தொடர்ந்து சென்ருர்கள்.

மண்டபத்துக் குள்ளிருந்த மணி மாடம் ஒன்றிலிருந்து குந்தவை ஒரு



சிறிய பனை ஓலைத் துணுக்கையும் தங்கப் பிடி அமைத்த எழுத்தாணியையும் எடுத்தாள். ஓலைத் துணுக்கில் பின் வருமாறு எழுதினுள்:

"பொன்னியின் செல்வ! இந்த ஓலை கண்டதும் உடனே புறப்பட்டு வரவும். விவரங்கள் இது கொண்டு வருகிறவர் சொல்லுவார். இவரைப் பூரணமாக நம்பலாம்."

இவ்விதம் எழுதி அடியில் ஆத்தி இலை போன்ற சிறிய சித்திரம் ஒன்று வரைந்தாள். ஓலையை வந்தியத்தேவன் கையில் கொடுப்பதற்காக நீட்டியவாறு, "சிறிதும் தாமதியாமல் இந்த ஓலையை எடுத்துக் கொண்டு ஈழ நாட்டுக்குச் செல்ல வேண்டும். இளவரசர் அருள்மொழி வர்மரிடம் கொடுத்து அவரைக் கையோடு அழைத்து வர வேண்டும்!" என்ருள்.



வந்தியத்தேவன் ஆனந்தத்தின் அலை களினால் மோதப்பட்டுத் தத்தளித்தான். நெடுநாளாக அவன் கொண்டிருந்த மனோரதங்கள் இரண்டில் ஒன்று நிறை வேறிவிட்டது. சோழர் குல விளக் கான இளைய பிராட்டியைச் சந்தித் தாகி விட்டது. அவர் மூலமாகவே இரண்டாவது மனோரதமும் நிறை வேறப் போகிறது. இளவரசர் அருள் மொழி வர்மரைச் சந்திக்கும் பேறும் கிடைக்கப் போகிறது.

''தேவி! என் மனத்துக்குகந்த பணி யையே தருகிறீர்கள். ஓலையை எடுத் துக் கொண்டு இப்போதே புறப்படு கிறேன்!'' என்று சொல்லி ஓலையைப் பெற்றுக் கொள்வதற்காக வலக் கரத்தை நீட்டினான்.

குந்தவை ஓலையை அவனிடம் கொடுத்த போது காந்தள் மலரை யொத்த அவளுடைய விரல்கள் வந் தியத் தேவனுடைய அதிர்ஷ்டக் கையைத் தொட்டன. அவனுடைய மெய் சிலிர்த்தது; நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது. ஆயிரம் பதினா யிரம் பட்டுப் பூச்சிகள் அவன் முன் னால் இறகுகளை அடித்துக் கொண்டு பறந்தன. ஆயிரம் பதினாயிரம் குயில்கள் ஒன்று சேர்ந்து இன்னிசை பாடின. மலை மலையான வண்ண மலர்க் குவியல்கள் அவன் மீது விழுந்து நாலா பக்கமும் சிதறின.

இந்த நிலையில் வந்தியத் தேவன் தலை நிமிர்ந்து குந்தவை தேவியைப் பார்த் தான். என்னவெல்லாமோ சொல்ல வேணும் என்று அவனுடைய உள்ளம் பொங்கியது. ஆனால் அதைச் சொல் லும் சக்தி உயிரற்ற வெறும் வார்த்தை களுக்கு ஏது?

சொல்ல வேண்டியதை யெல்லாம் அவனுடைய கண்களே சொல்லின. அச்சமயம் வந்தியத் தேவனுடைய கண்கள் புனைந்துரைத்த கவிதைகளுக் கிணையான காதற் கவிதைகளைக் காளி தாஸனும் புனைந்ததில்லை. 'முத்தொள் ளாயிரம்' இயற்றிய பழந் தமிழ்க் கவி ஞர்களும் இயற்றியதில்லை யென்றால் வேறு என்ன சொல்ல வேண்டும்?

வஸந்த மண்டபத்துக்கு வெளியில் எங்கேயோ சற்றுத் தூரத்தில் காய்ந்த இலைச் சருகுகள் சலசலவென்று சப்தித் தன. ஈசான சிவ பட்டர் தம் குரலைக் கனைத்துக் கொண்டார்.

வந்தியத் தேவன் இந்த உலகத்துக்கு வந்து சேர்ந்தான்! (தொடரும்)


சிறுவன் ராஜுவுக்கு கண்ணுக்கினிய குளுமையான வெளிச்சம் தேவை


எங்கள் ராஜு கண்ணும் கருத்துமாய் உழைத்துப் படிக்கிறான். அப்படிப் படிப்பதனால் அவனது கண்கள் சோர்வடைந்து, கெட்டுப் போகாமல் இருக்க, நாங்கள் கவனித்துக் கொள்கிறோம். எனவே நாங்கள், பிலிப்ஸ் ஆர்ஜண்டா பல்புகளை உபயோகிக்கின்றோம். பிலிப்ஸ் ஆர்ஜண்டா பல்புகளில் ஒரு விசேஷமான வெள்ளைப் பூச்சு பூசப்பட்டிருக்கிறது. அதன் நன்மைகள் :

☐ கண் கூசாது ☐ இருண்ட நிழல் படியாது ☐ ஒரே சீரான வெளிச்சம் பரவும்

சிறுவன் ராஜுவுக்கு மட்டுமே அல்லாமல், எங்கள் குடும்பத்திலுள்ள அனைவருக்குமே பிலிப்ஸ் ஆர்ஜண்டா பல்புகள் குளுமையான வெளிச்சம் தந்து கண்களுக்கு இதமளிக்கின்றன. பிலிப்ஸ் ஆர்ஜண்டா பல்புகள் 40, 60 மற்றும் 100 வாட்களில் கிடைக்கின்றன.

பிலிப்ஸ் கம்பெனியார், ஆர்ஜண்டாவைத் தவிர, பூச்சு தடவாத சாதாரண மாதிரி பல்புகள், பல்வேறு உபயோகத்துக்கான நானாவித பல்புகள், ப்ளூரஸன்ட் ட்யூப்கள் மற்றும் மெர்குரி வேபர் லாம்ப்கள் தயாரிக்கிறார்கள்.





பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

பிலிப்ஸ் ஆர்ஜண்டா

இதமான ஒளி தருவதில் இணையற்றது

HTA.PHL.7447 E

பழைய சென்னைக்குப் புதிய ஷெரீப்!

ஏதாகிலும் ஒரு காரியம் செய்தால், அதனின்று நாம் எதிர்பார்க்கும் பயன் தவிர சில சமயம் எதிர்பாராப் பயனும் விளைவதுண்டு. அப்படிப்பட்ட ஒரு பயன் தமிழக அரசாங்கம் திரு சுந்தர்லால் நஹ்தா அவர்களைச் சென்னை ஷெரீப்பாக நியமித்ததிலும் விளைந்துள்ளது.

அதாவது, சென்னை அரசாங்கம் தமிழகத்தைத் தாயகமாகக் கொண்ட ஹிந்தி பேசும் மக்களைப் பாராட்டிக் கௌரவிக்க வேண்டிய இடத்தில் பாராட்டிக் கௌரவிக்கத் தயாராக இருக்கிறது என்பதை இவரது நியமனம் நிரூபித்து விட்டது.

தமிழக ஆட்சிக்கு ஹிந்தி ஆட்சிமொழியாகத் திணிக்கப்படுவதில்தான் கோபமேயொழிய ஹிந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களிடமோ பாஷையினிடமோ ஒருவித விரோதமுமில்லை என்பதை இது தெளிவாக்கிவிட்டது.

பொதுவாக வர்த்தகத் துறையிலும், தொழில் துறையிலும் முன்னணியில் இருப்பவர்களையே அந்தஸ்தும், கௌரவமும் வாய்ந்த ஷெரீப் என்ற பதவிக்கு நியமிப்பது சம்பிரதாயம். இப்பொழுது சென்னை ஷெரீப்பாக நியமனம் பெற்றுள்ள திரு சுந்தர்லால் நஹ்தா இப்பதவிக்குரிய எல்லாத் தகுதிகளையும் பெற்றுள்ளவர். அவர் சினிமாப் பட விநியோகஸ்தர். படம் எடுக்க உதவுபவர். அவரே நல்ல கருத்தாழம் கொண்டதும் ஜன ரஞ்சகமானதுமான சிறந்த படங்களை எடுத்திருக்கிறார். இத்துறைதவிர வேறு இரண்டொரு தொழில் துறைகளிலும் ஈடுபட்டவர். ராஜஸ்தானத்தைச் சேர்ந்த இவர் கல்கத்தாவில் கல்வி பயின்று பட்டதாரியானார். பிறகு சென்னையிலேயே வாழ்ந்து இங்குதான் தொழில் புரியத் தொடங்கினார்.



ஷெரீப் சுந்தர்லாலும் முதன்மந்திரியும்

ஷெரீப் பதவி வகிப்பவருக்குச் சில முக்கியமான பொதுநலப் பணிகள் உண்டு. அத்துறைகளில் திரு சுந்தர்லால் நஹ்தா தீவிரமாக ஈடுபட ஆவலுள்ளவராக இருக்கிறார்.

சென்னையில் நகரசபைக் கட்டிடத்துக்கு அடுத்தாற் போலிருக்கும் விக்டோரியா பப்ளிக் (வி. பி.) ஹால் பல்லாண்டுகளாகச் சரியானபடி உபயோகப்படுத்தப்படாமல் பொதுஜன கவனத்தினின்றே மறைந்து விட்டது. அது ஒரு காலத்தில் சென்னை பொதுமக்களின் நிதி உதவி கொண்டு, பொதுஜன உபயோகத்துக்காக எழுப்பப்பட்டது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்ச்சிகளுக்கு நிலைக்களனாக இருந்தது வி. பி. ஹால். இன்று அதனை ஹோட்டல் நடத்தவோ அல்லது கடை வைக்கவோ வாடகைக்கு விடலாமா என்று யோசித்து வருகிறார்கள். இதற்குத் தர்மகர்த்தாக்களாக இருப்பவர்களில் முக்கியமானவர் சென்னை ஷெரீப் என்று விதி இருப்பதால், இப்பொழுது புதிதாக வந்துள்ள சுந்தர்லால் அந்த மண்டபத்தைப் பழைய புகழுக்குக் கொண்டுவர ஆர்வம் கொண்டிருக்கிறார்.

ஏற்றுமதி வர்த்தகம் செய்வதில் முதன்மையாக விளங்குபவருக்குக் கேடயம் வழங்குவது, சென்னை ஷெரீப்பைத் தலைவராகக் கொண்ட ஏற்றுமதிக் குழுவின் வழக்கம். இவ்வைபவம் இரண்டொரு ஆண்டுகளாக விடுபட்டுப் போயிருந்தது. அதனை வழக்குக்குக் கொண்டுவந்து ஏற்றுமதி வர்த்தகத்துக்குப் புது ஊக்கம் அளிக்க விரும்புகிறார்.

சென்னை நகரில் அவ்வப்போது பெரு வெள்ளத்தாலோ, தீயாலோ பெருவாரியான மக்கள் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு உதவ கணிசமான நிதி திரட்டி வைக்க வேண்டும் என விரும்புகிறார்.

கடைசியாக, சென்னை நகரைப் பிச்சைக்காரர்களின் தொல்லையினின்றும் விடுவிக்க ஆசைப்படுகிறார். அதற்குரிய திட்டங்கள் வகுத்தால் தமிழக அரசாங்கமும் உதவ முன்வரும் என்று தெரிவித்தார்.

தமிழகத்தில் பிச்சை எடுப்பது சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது. எனினும் எங்கு திரும்பினாலும் பிச்சைக்காரர்களைக் காண்கிறோம். தமிழ்கத்துக்கு வரும் வெளிநாட்டு யாத்திரிகர்கள் இவர்களிடம் அகப்பட்டுக் கொண்டு படும் அவதி சொல்லும் தரமன்று. அதிலும் குஷ்ட நோய் பிடித்தவர்கள் தாம்பரத்திலிருந்து பீச்சு வரையில் உள்ள ரயில் நிலையப் பிளாட்பாரங்களைத் தங்கள் குடியிருப்பாகச் செய்து கொண்டு, பிரயாணிகளிடம் பிச்சை வாங்கி அங்கிருக்கும் சிற்றுண்டிச்சாலையில் சாப்பிட்டு விட்டுக் காலங்கழிக்கிறார்கள். பரிதாபத்துக்கு உள்ளாகிறவர்கள் பிரயாணிகள்தான்.

இவர்களை யெல்லாம் அப்புறப்படுத்திப் பிழைப்புத் தேடித் தரவேண்டும்.

இவ்விஷயங்களில் புதிய ஷெரீப் தீவிர கவனம் செலுத்தினால், பழைமையான சென்னை மாநகருக்குப் புதிய மெருகு ஏறும் என்பதில் ஐயமென்ன?

— எஸ். வி. எஸ்.

மகாபாரதம்

ராஜாஜி


அச்சமயம் தூரத்தில் சம்சப்தகர்களோடு யுத்தம் செய்து கொண்டிருந்த அருச்சுனன் பாண்டவ சேனையிருந்த இடத்தில் எழும்பிய புழுதியைக் கண்டும், யானையினுடைய சப்தத்தைக் கேட்டும் ஏதோ அனர்த்தம் நேரிட்டது என்று ஊகித்தான். "மதுசூதனா, இது பகதத்தனுடைய போர் யானை சுப்ரதீகத்தின் தொனி. போர் யானையை நடத்தி யுத்தம் செய்யும் வீரர்களில் பகதத்தனைப் போல் உலகத்தில் யாரும் கிடையாது. அவன் நம்மவர்களை முறியடித்து விடுவான். விரைவில் அவ்விடம் நாம் போய்ச் சேர வேண்டும். சம்சப்தகர்களை நசித்தது போதும். அவர்களை விட்டுத் துரோணர் யுதிஷ்டிரனை எதிர்த்துக் கொண்டிருக்கும் இடத்துக்குத் தேரை வேகமாகச் செலுத்த வேண்டும்" என்றான்.

கிருஷ்ணனும் அவ்வாறே தேரைச் செலுத்தினான். சுசர்மாவும் அவன் சகோதரர்களும் அருச்சுனனுடைய தேரைப் பின் தொடர்ந்து, "நில், நில்" என்று சொல்லித் தாக்கினார்கள்.

அருச்சுனன் இரண்டு எண்ணங்களால் இழுக்கப்பட்டு ஒரு கணம் மனத்தில் வேதனைப்பட்டான். 'இங்கே சுசர்மா என்னைப் போருக்கு அழைக்கிறான். நான் புறங்காட்டி ஓடுபவனைப்போல் போவதா? வடபுறத்தில் நம்முடைய சேனை பிளக்கப்பட்டு அபாய நிலையில் இருக்கிறது. அவ்விடம் உடனே நான் சென்று உதவாமற் போனால் காரியம் கெட்டுப் போகும்' என்று கவலைப்பட்டான்.

அச் சமயம் சுசர்மா ஒரு சக்தி ஆயுதத்தை அருச்சுனன் மேலும் ஒரு தோமரத்தை ஜனார்த்தனன் மேலும் வீசினான். கோபம் கொண்ட அருச்சுனன் மூன்று பாணங்களை எய்து சுசர்மனைத் திரும்பும்படி செய்து விட்டு வேகமாகப் பகதத்தன் இருந்த இடம் நோக்கித் தேரைச் செலுத்தச் சொன்னான்.

அருச்சுனன் வந்து சேர்ந்ததுமே பாண்டவ சேனை மேலும் தைரியம் கொண்டது. ஒழுங்காக நின்றார்கள். நாணற் காட்டை அழிக்கும் யானையைப் போல அருச்சுனன் கௌரவ சேனையை அழித்துப் பகதத்தனை நெருங்கினான். அருச்சுனன் வரக் கண்டதும் அவனை நோக்கிப் பகதத்தன் தன் யானையைச் செலுத்தினான். யானை அருச்சுனன் தேரின் மேல் காலனைப் போல் பாய்ந்தது. அப்போது வாசு



தேவன் யானையின் பாதையினின்று மிகவும் சாமர்த்தியமாக ரதத்தை விலக்கிக் காப்பாற்றினன்.

பகதத்தன் யானையின் மேலிருந்து கொண்டு அருச்சுனன் கண்ணன் இருவர் பேரிலும் அம்புகள் எய்தான். அருச்சுனன் யானையின் கவசத்தைப் பாணங்களால் முதலில் உடைத்து விட்டான். அதன் மேல் யானை பாணங்களால் பீடிக்கப்பட ஆரம்பித்தது. இதைக் கண்டு பகதத்தன் சக்தியாயுதமொன்றை வாசுதேவன் மீது பிரயோகித்தான். அருச்சுனன் அதைத் தன் பாணத்தால் இரண்டாக வெட்டினன். பிறகு பகதத்தன் ஒரு தோமரத்தை அருச்சுனன் மேல் செலுத்தினன். அது தனஞ்சயனுடைய கிரீடத்தைத் தாக்கிற்று.

அருச்சுனன் கிரீடத்தைச் சரியாக மறுபடியும் வைத்துக் கொண்டு, "பகதத்தனே! கடைசித் தடவையாக உலகத்தை நன்றாகப் பார்த்துவிடு" என்று சொல்லிக் காண்டீபத்தை வளைத்தான்.

பகதத்தன் பழுத்த கிழவன். நரைத்த மயிரும் சதை மடிப்புக்களும் கொண்ட அவன் முகம் சிம்மத்தின் முகம்போல் விளங்கிற்று. வயதினால் தொங்கிக் கண்களை மூடும் சதையை அவன் ஒரு பட்டு வஸ்திரத்தால் தூக்கிக் கட்டியிருப்பான். ஒப்புயர்வற்ற சூரன். அவன் சீலமும் குணமும் பிரதாபமும் க்ஷத்திரிய உலகத்தில் பிரசித்தமாக இருந்தன. இந்திரனுக்கு நண்பன் என்று அவனைப் பற்றிச் சொல்லுவார்கள். "கடைசித் தடவையாக உலகத்தைப் பார்" என்று சொல்லி அருச்சுனன் அவன்மேல் பாணங்களை விட்டு அவனுடைய வில்லையும் அம்புப் பெட்டியையும் உடைத்து மர்மஸ்தானங்களைப் பிளந்தான். அந்தக் காலத்தில் வீரர்கள் அனைவரும் கவசம் பூண்டிருப்பார்கள். கவசத்தில் எந்த இடத்தில் பட்டால் அம்பு உள்ளே நுழைந்து ஆளைத் தாக்கும் என்கிற ரகசியங்கள் யுத்தப் பயிற்சியில் அடங்கும்.

கிழவனான பகதத்தன் தன்னுடைய ஆயுதங்களை இழந்தபடியால் யானையைக் குத்தி ஓட்டும் அங்குசத்தை மந்திரம் பிரயோகித்து அருச்சுனன் மேல் வீசினன். அது அருச்சுனனை மாய்த்திருக்கும். கண்ணன் அதைத் தடுத்துத் தன் மார்பில் ஏற்றுக் கொண்டான். அது வைஷ்ணவாஸ்திர மந்திரத்துடன் செலுத்தப்பட்டிருந்தபடியால் மாதவன் கழுத்தில் வன மாலையாக மாறி ஆபரணமாகத் தொங்கிற்று.

"ஜனார்த்தனா! பகைவன் எறிந்த அஸ்திரத்தை நீ ஏன் ஏற்றுக் கொண்டாய்? 'ரதத்தை ஓட்டுவேன். யுத்தம் செய்ய மாட்டேன்' என்று சொல்லியவன் வில்லும் கையுமாக நான் இருக்கும்போது ஏன் இவ்விதம் செய்தாய்?" என்று அருச்சுனன் ஆட்சேபித்தான்.



"அப்பனே! உனக்குத் தெரியாது. இந்த அஸ்திரம் உன்னைக் கொன்றிருக்கும். அது என்னுடைய பொருள். என்னிடம் திரும்பியது" என்று சொல்லிச் சிரித்தான்.

பிறகு பார்த்தன் ஒரு பாணத்தைச் செலுத்தினன். அது சுப்ரதீகத்தின் கும்பஸ்தலங்களுக்கிடையில் புற்றில் பாம்பு செல்வது போல் நுழைந்து மறைந்தது.

பகதத்தன் யானையைத் தூண்டிப் பார்த்தான். பொருளிழந்த புருஷனுடைய வார்த்தையை மனைவி கேட்காததைப் போல் அந்த யானை அப்போது பகதத்தனுடைய கட்டளைச் சொற்களை அசட்டை செய்தது. மலை போன்று நின்ற அந்த யானை அங்கங்களை ஸ்தம்பனம்செய்துகொண்டும், தந்தங்களை நிலத்தில் முட்டிக்கொண்டும் ஒரு தீனஸ்வரம் இட்டுவிட்டுப் பிராணனை விட்டது.

யானையைக் கொல்லாமல் பகதத்தனை மட்டும் வீழ்த்தப் பார்த்த தனஞ்சயன் அவ்வாறு செய்ய முடியாத

தைப் பற்றிக் கொஞ்சம் வருந்தினன். அருச்சுனனுடைய அம்புகளால் கண்களைத் தூக்கிக் கட்டியிருந்த பட்டு அறுந்து பகதத்த ராஜன் இருளில் மூழ்கினன். அதன்மேல் கூரிய பிறை வடிவமான பாணம் ஒன்று அவன் மார்பைப் பிளந்தது.

மலையுச்சியிலிருந்து காற்றடித்து நன்ருகப் பூத்த மரம் விழுவதைப்போல் பொன் மாலை அணிந்த பகதத்தன் போர் யானையின் மீதிருந்து கீழே விழுந்தான். அந்தப் பகுதியிலிருந்த கௌரவப் படை கலைந்து ஓடிற்று.

சகுனியின் சகோதரர்களான விருஷனும், அசலனும் அப்போதும் தயங்காமல் அருச்சுனனை எதிர்த்தார்கள். முன் புறமும் பின் புறமுமாகத் தனஞ்சயனை மிகவும் துன்புறுத்தினர்கள். அருச்சுனன் அவர்களுடைய ரதங்களைப் பொடியாகச் செய்து அவர்களுடைய படையையும் அம்புகளால் தாக்கினன். ஒரே முகச்சாயலைக் கொண்ட இளஞ் சிங்கங்களுக்கொப்பான அவ்விரு சகோதரர்களும் இறந்து கீழே விழுந்தார்கள்.

யுத்தத்தை விட்டு ஓடாதவர்களான அவ்விரு சகோதரர்களுடைய சரீரங்கள் பரிசுத்தமான கீர்த்தியொளியைப் பத்து திக்குகளிலும் வீசின என்கிருர் வியாசர்.

தன்னுடைய ஒப்பற்ற வீர சகோதரர்கள் மாண்டதைக் கண்ட சகுனி மிகவும் கோபம் கொண்டு தனக்குத் தெரிந்த மாயப் போர் முறைகளைத் தொடங்கினன். அருச்சுனன் அவற்றுக்கெல்லாம் பிரதியஸ்திரம் பிரயோகித்து மாயைகளை விலக்கினன். வேகமான குதிரைகள் பூட்டிய தேரில் நின்ற சகுனி அருச்சுனனுடைய பாணங்களால் அடிபட்டு யுத்த களம் விட்டு விலகினன்.

அதன் பிறகு பாண்டவ சேனை துரோணருடைய படையைப் பலமாகத் தாக்கிற்று. எண்ணற்ற வீரர்கள் மாண்டார்கள். ரத்த நதிகள் ஓடின. அச்சமயம் சூரியன் அஸ்தமித்தான். தம்முடைய சேனை பெருந் தோல்வி அடைந்து, கவசங்கள் உடைந்து காயங்கள் பட்டுத் தைரியம் இழந்து புத்திகூட ஸ்திரமில்லாத நிலைமையை அடைந்து விட்டதைப் பார்த்துத் துரோணர் பன்னிரண்டாவது நாள் யுத்தத்தை நிறுத்தினர். இரண்டு சேனைகளும் ஒன்றை மற்றென்று பார்த்துக் கொண்டே களத்தை விட்டு விலகின.

80. அபிமன்யு

பன்னிரண்டாவது நாள் இரவு பாண்டவ சேனையில் எல்லா வீரர்களும் பல்குனனைப் புகழ்ந்து கொண்டு உற்சாகமாகத் தங்களுடைய தங்குமிடம் சென்ருர்கள். கௌரவ வீரர்கள் கவலையும் வெட்கமும் கொண்டு மௌனமாகக் கலைந்தார்கள்.

மறுநாள் விடிந்ததும் துரியோதனன் மிகுந்த கோபத்துடன் துரோணரிடம் சென்று நமஸ்கரித்துப் பல வீரர்களுக்கிடையில் அடியில் கண்டவாறு பேச ஆரம்பித்தான்:

"பிராமணேத்தமரே! அருகில் நின்ற யுதிஷ்டிரனை நேற்றுப் பிடிக்காமல் விட்டு விட்டீர். எங்களைக் காப்பாற்றும் கவலை உமக்கு இருந்திருந்தால் நேற்று நடந்த நிகழ்ச்சிகள் நடைபெற இடமிருந்திருக்காது. உண்மையில் யுதிஷ்டிரனைப் பிடிக்கும் எண்ணம் உமக்கு உறுதியாக இருப்பின், உம்மை எவரால் தடுக்க முடியும்? நீர் எனக்குத் தந்த வரம் நடைபெருமல் இருப்பதற்குக் காரணம் எனக்குத் தெரியவில்லை. பெரியோர்களுடைய காரியங்கள் விசித்திரமாகவே இருக்கின்றன" என்று குற்றம் சாட்டிப் பேசினன்.

இதைக் கேட்ட துரோணர் மிகவும் வருத்தப் பட்டார். "துரியோதன! உனக்காக நான் என் முழு பலத்தையும் பிரயோகித்தே வருகிறேன். நீ எண்ணும் எண்ணங்கள் அரசனுகிய உனக்குத் தகுதியானவை யல்ல. யுதிஷ்டிரன் பக்கத்தில் அருச்சுனன் இருக்கும்வரையில் நம்முடைய எண்ணம் நிறைவேருது என்று உனக்கு ஏற்கனவே நான் சொன்னேன். அவனை எப்படியாவது யுத்தகளத்திலிருந்து அப்புறப்படுத்தினலல்லாது உன் எண்ணம் நிறைவேருது. இன்னும் அதற்காக முயற்சி செய்வேன்" என்று கோபத்தை அடக்கித் துரியோதனனைச் சமாதானப்படுத்தினர்.

ஃ ஃ ஃ

பதின்மூன்ருவது நாளிலும் சம்சப்தகர்கள் அருச்சுனனைப் போருக்கு அழைத்தார்கள். அவனும் அவர்களை எதிர்த்துத் தெற்கே சென்ருன். அவ்விடம் அவனுக்கும் அந்தப் பெருங் கூட்டத்துக்கும் மிகப் பெரும் போர் நடந்தது. அதைப் போன்ற யுத்தமானது ஓரிடத்திலும் கேட்கப்பட்டதுமில்லை; பார்க்கப் பட்டதுமில்லை என்கிருர் வியாசர்.

தனஞ்சயன் தெற்கே சென்றுவிட்டதும் துரோணர் தம்முடைய படையைப் பத்ம வியூகமாக வகுத்து யுதிஷ்டிரனைத் தாக்கினர். பீமன், சாத்யகி, சேகிதானன், திருஷ்டத்யும்னன், குந்திபோஜன், துருபதன், கடோத்கஜன், யுதாமன்யு, சிகண்டி, உத்தமௌஜஸ்,

விராடன், கேகயர்கள், சிருஞ்சயர்கள், இன்னும் பல மகா வீரர்களும் துரோணருடைய படையை எதிர்த்துப் பயன் பெறவில்லை. துரோணருடைய தாக்குதலின் வேகத்தைக் கண்டு பிரமித்து நின்றார்கள்.

சுபத்திரா புத்திரனை அபிமன்யு வாலிபனானாலும் கிருஷ்ணார்ச்சுனர்களுக்குச் சமமான சூரன் என்று பெயர் பெற்றுவிட்டான். அவனை யுதிஷ்டிரன் கூப்பிட்டு, ''அப்பா! துரோணர் நம்மை வாட்டுகிறார். நாம் தோல்வி அடைந்தால் அருச்சுனன் நம்மை மிகவும் நிந்திப்பான். துரோணருடைய சேனையை உடைக்க மற்ற வீரர்களால் முடியவில்லை. நீ ஒருவன்தான் அதைச் செய்ய முடியும். துரோணருடைய சேனையைத் தாக்குவாயாக!'' என்றான்.

''நான் சென்று இந்த வியூகத்தில் பிரவேசிப்பேன். சந்தேகமில்லை. ஆனால் பிரவேசித்த பின் ஏதேனும் ஆபத்து நேரிட்டால் வெளியே வருவதற்கு நான் சக்தியற்றவன்'' என்றான் அபிமன்யு.

''வீரனே! வியூகத்தை உடைத்து நீ பிரவேசி. நீ நுழைந்து செல்லும் வழியில் நாங்கள் உன்னைத் தொடர்ந்து செல்வோம். நீ வியூகத்தைப் பிளந்து உள்ளே தைரியமாகச் செல். பின்னால் நாங்கள் அனைவரும் உனக்குத் துணையாக இருப்போம்'' என்று இவ்வாறு தருமபுத்திரன் சொல்லியதை ஒட்டி பீமசேனனும் ''உன்னைப் பின்தொடர்ந்து நான் வருவேன். திருஷ்டத்யும்னனும் சாத்யகியும், பாஞ்சாலர்களும் கேகயர்களும் மச்ச தேசத்துப் படையும் உன்னைப் பின்தொடர்ந்தே பிரவேசிப்பார்கள். வியூகத்தை ஒருமுறை நீ உடைத்து விட்டால் நாம் கௌரவ சேனையைத் துவம்சம் செய்து விடுவோம்'' என்றான்.

''என் பராக்கிரமத்தைக் காட்டி மாமனுக்கும் பிதாவுக்கும் பிரீதியை உண்டு பண்ணுவேன்'' என்று அபிமன்யு கண்ணனையும் தனஞ்சயனையும் நினைத்துக் கொண்டு உற்சாகத்தோடு சொன்னான்.

''உன் பலம் வளர்க'' என்று யுதிஷ்டிரனும் ஆசீர்வதித்தான்.

''சுமித்திரனே! அதோ சீக்கிரமாகக் குதிரைகளைத் துரோணருடைய தேர்க் கொடி காணப்படும் இடத்துக்குச் செலுத்து'' என்றான் அபிமன்யு தன் சாரதியைப் பார்த்து. அவனும் ஓட்டினான்.

''போ! போ!'' என்று மேலும் மேலும் தூண்டினான். சாரதி வணக்கமாக, ''ஆயுஷ்மன்! யுதிஷ்டிரர் உன் பேரில் வைத்திருப்பது மிகவும் பெரிய பாரம். ஒரு கணம் யோசித்தபிறகு வியூகத்தில் பிரவேசிப்பாயாக! துரோணர் சிறந்த அஸ்திரப் பயிற்சி பெற்ற சமர்த்தர். பலசாலி; நீயோ அனுபவம் பெறாத பாலன்'' என்றான்.

அபிமன்யு சிரித்தான். ''கிருஷ்ணனை மாமனாகவும் அருச்சுனனைத் தந்தையாகவும் பெற்ற என்னிடம் பயம் என்கிற பேய் அணுகி வராது. இந்தச் சத்துருக்கள் என்னுடைய பலத்தில் பதினாறிலொன்று இருக்க மாட்டார்கள். வேகமாகத் துரோணருடைய சேனையைக் குறித்து ரதத்தைச் செலுத்து. தயக்கம் வேண்டாம்'' என்று கட்டளையிட்டான். சாரதியும் அப்படியே ஓட்டினான்.

மூன்று வயதுள்ள இளங் குதிரைகள் பூட்டிய பொன் மயமான தேர் மிக்க வேகமாகச் சென்றது. கௌரவ சேனை, ''அபிமன்யு வந்தான், வந்தான்!'' என்று ஆரவாரித்தது. பாண்டவர்களும் அபிமன்யு சென்ற வழியைப் பின்தொடர்ந்து சென்றார்கள். கொங்கு மரத் துவஜத்தைக் கொண்ட அபிமன்யுவின் தேர் தங்களை நோக்கி மிக வேகமாக வரும்போது கௌரவப் படையில் உள்ள வீரர்கள் ''இவன் அருச்சுனனைக் காட்டிலும் மேலான சூரன்'' என்று எண்ணி மனம் பதைத்தார்கள். யானைகளை எதிர்க்கச் சிம்மக் குட்டி செல்வது போல் அபிமன்யு சென்றான். சமுத்திரத்தில் கங்கா பிரவாகம் சேர்ந்து உண்டாகும் சுழல் போல் கௌரவப் படையில் ஒரு முகூர்த்த காலம் உண்டாயிற்று. துரோணர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே வியூகம் உடைந்தது. அபிமன்யு உள்ளே பிரவேசித்து விட்டான்.

கௌரவ வீரர்கள் நெருப்பில் விட்டில் பூச்சிகள் விழ்வது போல் அபிமன்யுவை எதிர்த்து ஒருவர்பின் ஒருவராக வீழ்ந்து மாண்டார்கள். எதிர்த்து நின்ற வீரர்களையெல்லாம் தாக்கிப் பால வீரன் அஸ்திரப் பிரயோகம் செய்து கவசங்களில் உள்ள மர்ம ஸ்தானங்களை நன்றாக அறிந்து பிளந்தான். யாக பூமியில் தருப்பைப் புல் பரப்புவதைப் போல் அபிமன்யுவானவன் வீழ்த்தப்பட்ட வீரர்களால் யுத்த களத்தைப் பரப்பி மூடினான். எங்கு கண்டாலும் விற்கள், அம்புகள், கத்திகள், கேடயங்கள், அங்குசங்கள், கடிவாளங்கள், தேர் மரங்கள், கோடாலிகள், கதைகள் ஈட்டிகள், சாட்டைகள், சங்கங்கள் சிதறிக் கிடந்தன. கைகளும் தலைகளும் சரீரத் துண்டங்களும் அறுபட்டுக் கிடந்து பூமியை மண் தெரியாமல் மூடின.

(தொடரும்)



007 பாலு
12
சந்திரனின் பெட்டியில் திணியத் திணிய அடுக்கி வைக்கப்பட்டிருந்த நூறு ரூபாய் நோட்டுக் கட்டுக்கள் சிலவற்றை எடுத்து ஆராய்ந்து பார்த்தான் பாலு.
எந்தப் பாங்கிலோ எப்போது அடித்த கொள்ளையோ? பல லட்சங்கள் இருக்கும் போலிருக்கிறதே!
பாலு பெட்டியை முன்பிருந்தது போலவே மூடினான். அதிக-மாகச் சேதப்படுத்தப் படாததால் அது மீண்டும் பூட்டிக் கொண்டது.
விமானம் பம்பாயை அடையும் வரை தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் பாலு.
விமான நிலையத்தை அடைந்ததும் எப்படித் தப்புவது? சந்திரனை எவ்வாறு கண்காணிப்பது? என்ன நேர்ந்தாலும் அவனை நம் கண் பார்வையிலிருந்து விலக விடக்கூடாது!
இந்த இடையில்... பம்பாயிக்கு டெலிபோன் போட்டுப் பேசலாம் என்று நினைத்த பார்த்தனின் எண்ணம் எளிதில் நிறைவேற வில்லை.
ஹல்லோ! கம்ப்ளெயின்ட்ஸ்? பம்பாய் கால் ரூ. 47 என்ன ஆச்சு?.....
என்ன? ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆகுமா? இது 'டாப் பிரியாரிட்டி கால்' மறந்து விடாதீங்க! உடனே பேசணும் எனக்கு அவசரம்!
வெரி வெரி ஸாரி! லைன் அவுட் ஆஃப் ஆர்டர்! அது சீரானதும் உங்கள் 'கால்' உடனே கிடைக்கும்.
நாசமாய்ப் போச்சு!




தொடரும்....

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டம். அயல் நாட்டிலிருந்து ஒரு பெண், தன் விடுமுறையைக் கழிக்க வேலூருக்கு வந்தாள். அப்போது அவளது பெற்றோர் வே ரில் இருந்தார்கள். சமூக சேவை, மதப்பிரசாரம் இவைகளில் ஈடுபட்டுள்ள மிஷனரி அமைப்பில் அவர்கள் அங்கத்தினர். விடுமுறையைக் கழிக்க வந்த குழந்தைக்கு வேதனை தரும் காட்சி ஒன்று காத்திருந்தது. மூன்று பெண்கள் தாய்மைப் பேற்றை அடையும் தருணத்தில் தங்கள் உயிரை இழந்தார்கள். எழுத்தறிவில்லாத மருத்துவச்சிகளின் உதவியைத் தவிர அந்தக் காலத்தில் கடினமான பிரசவங்களைக் கவனிக்க வேறு மார்க்கம் ஏதும் கிடையாது. பின்னைப் பேறு மருத்துவத்துக்கும் ஆண் டாக்டர்களைத்தான் நம்ப வேண்டும். பெண் டாக்டர்கள் கிடையாது. விடுமுறை முடிந்து திரும்பிய அந்தப் பெண் ஓர் உறுதியோடுதான் சென்றாள்: தானே வைத்தியத்தில் பட்டம் பெறப்







படித்து இந்தியாவுக்குத் திரும்பிப் பணியாற்றுவது என்று தீர்மானித்தாள்.

1900ம் ஆண்டில் அந்தப் பெண் டாக்டர் திரும்பியபோது வரவேற்க அவளது தந்தை இல்லை. தாய் மட்டும்தான் இருந்தாள். மனந் தளராமல் அவள் மிஷனரி பங்களாவில் ஒற்றை அறை வைத்தியசாலையை உருவாக்கி உழைக்கலானாள். மக்களின் அறியாமை, மூட நம்பிக்கைகள் அத்தனையையும் தன்து சேவை மனப்பான்மையினால் தாங்கிக் கொண்டாள், அந்தப் பெண்மணி. தளராத உழைப்பும், உபதேசமும், ஒற்றை அறை 'க்ளினிக்'கை நாடி வரும் நோயுற்ற மக்களின் தொகையைப் பெருக்கலாயிற்று. 1902ல் நியூயார்க் நகரின் செல்வந்தர் ஒருவரின் நன்கொடையைக் கொண்டு நாற்பது படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையைக் கட்டினாள். அதற்கு 'மேரி தாபர் ஆஸ்பத்திரி' என்று பெயர்.

இதற்கு நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் பெண்மணியின் கனவு நனவாகும் வேளை வந்தது. வேலூரை அடுத்துள்ள கிராமப்புறங்களுக்குத் தன்னுடைய வைத்திய சேவையை விரிவுபடுத்தினாள். 'சாலையோரக் கிளினிக்' என்று அன்று பெயர் சூட்டப்பட்ட இத்தகைய மருத்துவ உதவி இன்று அரசாங்கத்தின் 'கம்யூனிட்டி ஹெல்த் டிபார்ட்மெண்டி'ன் கீழ் செயல்பட்டுக் கிராமப்புறங்களின் வைத்தியத் தேவைகளைக் கவனித்து வருகின்றது.

மருத்துவ சேவையில் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட இந்தப் பெண்மணி பாரதப் பெண்களையே டாக்டர்களாகவும் நர்ஸ்களாகவும் பயிற்சி அளித்து உருவாக்கினால்தான் இந்தியாவில் பெண் டாக்டர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்று உணர்ந்தாள். ஆகவே 1909ல் நர்ஸ்களுக்கான பயிற்சியளிக்கும் லோயர்கிரேடு பள்ளியைத் தொடங்கினார். பின்னர் இது 1931ல் ஹையர் கிரேடுபள்ளியாக உயர்ந்தது. 1946ல் நான்கு வருடப் பட்டப் படிப்பு (B. Sc. In Nursing) ஆரம்பிக்கப்பட்டது. இன்று வேலூர் நர்ஸிங் கல்லூரி சென்னை சர்வ கலாசாலையோடு இணைந்து செயல்பட்டுப் பட்டதாரிகளை உருவாக்கி அனுப்புகிறது.

நர்ஸ்களுக்கான பள்ளியை உருவாக்கி வெற்றி பெற்ற இந்தப் பெண்மணி பெண்களை வைத்தியப் படிப்புக்குத் தயாரிக்


கும் பெரும் பணியைத் தாம் ஒருவராகவே முன்னின்று முடிக்க முயன்றார். தளராத உழைப்பு, நம்பிக்கை, சேவை மனப்பான்மை இவைகளின் பலன் 1942ல் மாணவிகளை எம். பி. பி. எஸ். பட்டப் படிப்புக்குத் தகுதியுள்ளவர்களாக்கும் பணியில் இவரை ஈடுபட வைத்தது. இன்று ஆண்டுதோறும் இந்த ஸ்தாபனத்தில் அறுபது மாணவ மாணவிகள் வைத்தியப் படிப்புக்காக அனுமதிக்கப்படுகிறார்கள்.

அறுபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன், தொண்டு செய்யும் கனவுகளோடு வேலூரில் காலடி வைத்த அந்தப் பெண்மணிதான் திருமதி இடா ஸோபியா ஸ்கட்டர். புகழ் பெற்ற வேலூர் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி — ஆஸ்பத்திரி இவைகளின் ஸ்தாபகர்.

காக்கும் கரங்களும் காகித ஆலயமும்


[தமிழக அரசாங்கம் ஏற்பாடு செய்த சுற்றுப் பயணத்தில் கலந்து கொண்ட நமது நிருபரின் இரண்டாவது கட்டுரை இது. —ஆர்.]





முன் பக்கம்: 1. அந்நியச் செலாவணியை அள்ளிக் கொடுக்கும் வாழைப் பழத்தை, கோவை பி. எஸ். ஜி. பண்ணையாரைப் போல இப்படிப் பலன் தரும்படி பயிரிட்டால் என்ன? 2. டாக்டர் இடா ஸ்கட்டரின் நினைவாக எழுப்பப்பட்டுள்ள அரங்கம். 3. காகித உருளைகளின் முன்னே பத்திரிகை நிருபர்கள்.

இந்தப் பக்கம்: 1. வேலூர் வைத்தியக் கல்லூரி மாணவி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார். 2. "நான் ஹோசூர் பண்ணையில் தயாரானவன்" என்கிறார் இந்தக் காளையார். 3. கரும்புச்சாறு மணல் சர்க்கரையாக மாற ஆட்படும் நிலைகளில் இது ஒரு நிலை.



1900ம் ஆண்டு ஒரே ஒரு அறையில் ஆரம்பிக்கப்பட்ட ஆஸ்பத்திரி இன்று 1,077 படுக்கைகளோடு கூடிய புகழ் பெற்ற ஆஸ்பத்திரியாக விளங்குகிறது. ஒரு நாளைக்கு இங்கு பிணி தீர்த்துக் கொள்ள வரும் நோயாளிகள் 1800 பேர்கள். ஸ்கட்டரின் பணியைத் தொடர்ந்து செயலாற்ற இன்று இந்த ஸ்தாபனத்தில் 315 டாக்டர்கள், 305 நர்ஸ்கள், 273 மருத்துவ உதவியாளர்கள் ஆகியோர் இருக்கிறார்கள். இவர்களைத் தவிர இந்தப் புகழ் பெற்ற ஸ்தாபனத்தை நிர்வகிக்கும் பணியில் 1417 பேர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள். அயல்நாட்டு நிபுணர்கள் பலர் இங்கு அடிக்கடி வந்து தங்கள் உழைப்பை நல்குகிறார்கள்.

கண் மருத்துவம், மன வியாதிக்கான நிலையம், கிராமப்புறங்களுக்குப் பணி புரியும் பகுதி, தொழுநோயாளிகளுக்குப் புனர்வாழ்வளிக்கும் பகுதி, அங்கம் இழந்தவர்களுக்குச் செயற்கை உறுப்பும், நீண்ட காலப் பயிற்சியும் தரும் பகுதி என இப்படி விரிந்து பரந்து செயல்படுகிறது இந்நிலையம். இதயம், மூளை சம்பந்தப்பட்ட சஸ்திர சிகிச்சை ஆராய்ச்சிகள் இந்தியாவைப் பொறுத்தவரை வே ஏர் மிஷன் ஆஸ்பத்திரியில்தான் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டன. ஒரு நாளைக்குச் சராசரி 143 ஆபரேஷன்கள் நடைபெறுகின்றனவாம். இதில் 58 பெரிய ஆபரேஷன்கள். மாற்று இருதய ஆபரேஷனைப்

பற்றிக் கேட்டபோது அது அப்படியொன்றும் பெரிய சாதனையாகத் தங்களுக்குத் தோன்றவில்லை என்கிறார்கள் இங்குள்ள டாக்டர்கள். இங்கு வாரத்துக்கு இரண்டு ஆபரேஷன்கள் இதயத்தைத் திறந்து நடக்கின்றனவாம். கன்றுக்குட்டியின் இதய வால்வை மனித இதயத்துக்குப் பொருத்தி நடத்தும் ஆபரேஷனை விளக்கி அதில் சிகிச்சை பெற்று இன்று ஓடியாடி வேலை செய்யும் ஒருவரையும் — மார்பிலே தழும்போடு — எங்களுக்குக் காட்டினார்கள் டாக்டர்கள்.

தர்மபுரி மாவட்டத்தில் இன்முகத்தோடு இஞ்சிச்சாறு கொடுத்து வரவேற்றார்கள் பழங்களைப் பதனப்படுத்தும் 'டெலிஷியோ' ஸ்தாபனத்தினர். இவர்கள் இம்மாவட்டத்திலும் அடுத்துள்ள சேலம் மாவட்டத்திலும் கிடைக்கும் பழங்களைப் பதனப்படுத்தி எக்காலத்திலும் எல்லாப் பழங்களும் கிடைக்கச் செய்கிறார்கள். தளதளவென்ற பிஞ்சு இஞ்சிகளைச் சுத்தப்படுத்தி அவற்றிலிருந்து சாறு எடுத்து அத்துடன் சர்க்கரை சேர்த்து உடலுக்கும் குடலுக்கும் இதமளிக்கும் இனிப்பான பானமாகத் தயாரிக்கும் வேலை நடந்து கொண்டிருந்தது நாங்கள் போனபோது. இன்னொரு பக்கம் வாழைப்பழ ஜாம் தயாராகிக் கொண்டிருந்தது. மாம்பழ சீஸனில் மாம்பழங்களைத் துண்டுகளாக்கிக் கெடா வண்ணம் தகர டப்பாக்களில் 'பாக்' செய்வார்களாம். சேலத்து மாம்பழத்தைத் தென்காசிக் கடைகளில் எந்தக் காலத்திலும் கேட்டு வாங்கிச் சாப்பிடலாம்.

மாதிரிப் பழத் தோட்டம் — நர்ஸரிக்கு விஜயம் செய்தோம். பெரிய சாத்துக்குடி அளவில் கொய்யாவையும் (ஆனால் ருசி இல்லை!) நீளவாக்கில் மூன்று முடிச்சுகளில்லாத சதைப் பிடிப்பான தக்காளி வகைகளையும் கண்டோம். இந்தத் தக்காளி இந்தப் பிரதேசத்து மண் வளத்துக்குத்தான் இப்படி வருகிறதாம். அதிக விதை இல்லை. சதை மிகுந்து ருசியுடன் காணப்படுகிறது. கோவையில் பி.எஸ்.ஜி. ஆராய்ச்சிப் பண்ணையில் பெரிய தேங்காய் அளவில் தக்காளிகளைப் பார்த்துப் பிரமித்தோம். புது மாதிரியான ஓர் இனம் இந்த வகை. திராட்சைக் கொடிகளைப் போல் பந்தலிட்டுப் படர விட்டிருக்கிறார்கள். நீண்ட நாட்களுக்குப் பலன் தரக் கூடிய வகையாம் இது. இந்த வகையையும் தர்மபுரியில் உள்ள நீள வகையையும் ஏராளமாகக் கிடைக்கும் வகையில் பிரபலமாக்கினால் மலிவு விலையில் ஒரு சத்துணவைப் பெறும் வாய்ப்பு மக்களுக்குக் கிட்டும்.

கானடாவா, ஸ்விட்ஸர்லாந்தா என்று ஐயுறும் வண்ணம் எங்களை ஓர் இடத்தில் கொண்டுபோய் நிறுத்தினார்கள் தமிழக அரசினர். பிறகுதான் அது ஹோசூர் கால்நடைப் பண்ணை என்று தெரிந்தது. எங்கு நோக்கினும் மெத்தென்ற ரத்தினக் கம்பளம் விரித்ததுபோன்ற மரகதப் புல்வெளிகள். ஆங்காங்கே சந்தனம், தேக்கு, மா, புளி, புன்னை என்று பலன் தரும் பலவகை மரங்கள். அழகும், அமைதியும் சூழ்ந்த ஹோசூர் கால்நடைப் பண்ணை இந்தியாவிலேயே மிகச் சிறந்தது என்று புகழ் பெற்றது. சரித்திரச் சிறப்பும் கொண்டது இந்தப் பண்ணை. மைசூரை ஆண்ட திப்பு சுல்தான் தமது குதிரைப் படையின் குதிரைகளைப் பழக்குவதற்காக இந்தப் பண்ணையை உருவாக்கினாராம். கடல் மட்டத்துக்கு மேல் 3015 அடி உயரத்தில் 1646 ஏக்கராவில் அமைந்துள்ளது இந்தப் புகழ்பெற்ற பழமையான மிகப் பெரிய பண்ணை.

கலப்பு இனப் பசுக்களையும் காளைகளையும் உருவாக்குவதில் ஒப்பற்ற புகழ் கொண்டது ஹோசூர் கால்நடைப் பண்ணை. ஆடுகள், பன்றி, கோழி இவைகளின் தரமான இன விருத்தியும் இங்கு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மேல்நாட்டு இனத்துடன் நம் நாட்டுச் சிறந்த இனங்களை இணைத்து வளமிக்க பசுக்களையும், காளைகளையும் உருவாக்குகிறார்கள். இங்கு தயாராகும் பொலி காளைகளைப் பல்வேறு மாவட்டப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுப்புகிறார்கள், புதிய பண்ணைகளின் தரத்தை உயர்த்துவதற்காக.

ஆறு மாதக் கன்று, ஒரு வருஷம், இரண்டு வயது என்று தரம் தரமாகப் பிரித்து மாடுகளைப் பரந்த புல்வெளிகளில் மேயவிட்டிருக்கும் காட்சி அற்புதமாக இருக்கிறது. அந்தக் காலத்தில் கண்ணனின் கோகுலம் இப்படித்தான் காட்சி அளித்திருக்க வேண்டும் என்று எண்ணியபோது, ''இங்கு தினம் 34,000 லிட்டர் பால் சேகரிக்கப்படுகிறது'' என்று கூறிப் பாற்கடலையும் நினைவுபடுத்தினார்கள்! ஒரு லிட்டர் பால் இங்கு 75 பைசாதான்!

இந்தப் பெரிய பண்ணைக்குத் தேவையான பசுந் தீவனம் முழுவதும் இங்கேயே பயிரிடப்படுகிறது. ஐந்து குளங்களும், ஆறு குழாய்க் கிணறுகளும் இப்பண்ணைக் காம்பவுண்டுக்குள்ளேயே இருக்கின்றன. கன்று உயரப் பசு உயரும், பசு உயரப் பால் உயரும், பால் உயர மனித இனம் உயரும் அல்லவா?

ஆத்மசக்தி பெற இவ்வுடலை வருத்திக் கொள்ள வேண்டும் என்று கருதுவர் அறிஞர். பலவித சோதனைகளுக்கும் தன்னை ஆளாக்கிக்கொண்டு வெற்றி கண்டால் இறுதியில் புடமிட்ட பொன் போல் ஆன்ம ஒளி பெறலாம் என்பர். சர்க்கரை ஆலைகளில் கரும்பு தூய்மை அடைந்து ஒளிர விரும்புகிறதோ இல்லையோ, 'விட்டேனா பார் உன்னை' என்று அதைப் படாத பாடு படுத்திவிடுகிறார்கள் ஆலைக்காரர்கள்.

வட ஆர்க்காடு மாவட்டம் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கருப்பங் கழிகள் படும்பாடு அப்பப்பா! அடித்து ஒடித்து நசுக்கித் திருகிச் சக்கையாகப் பிழிந்து விடுகிறார்கள். ஒரு பக்கம் கருப்பங் கழிகளாக இயந்திரத்தினுள் போய் மறுபக்கம் கண்களைப் பறிக்கும் வெண் மணல் சர்க்கரையாகச் சாக்குகளில் அடைபடுவதற்குள்தான் அந்தக் கருப்பஞ்சாறு எத்தனை சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறது! எத்தனை மாற்றங்கள், எத்தனை பக்குவங்கள், எப்படியெல்லாம் காய்ச்சி வடிக்கப்படுகிறது! அத்தனை பாட்டுக்கும் பிறகுதான் பளபளக்கும் சர்க்கரையாக முடிகிறது; பக்குவமடைந்த மனம் போல. ஆனால் ஒன்று;

சர்க்கரைத் தொழிற்சாலையைப் பார்வை யிட்டவர்கள் சர்க்கரை சாப்பிடுவதையே தியாகம் செய்துவிட்டால் வியப்பதற்கில்லை. சில நிலைகளில் அதிலிருந்து கிளம்பும் நாற்றம் இருக்கிறதே — அது சர்க்கரை சாப்பிடும் ஆசையையே மறக்கடிக்கக் கூடியது!

இப்போது ஒரு நாளைக்கு 1250 டன் சர்க்கரை உற்பத்தி செய்யும் தகுதியுடையது இந்தத் தொழிற்சாலை. ஒரு நாளைக்கு 2200 டன்கள் உற்பத்தி செய்ய லைசென்ஸ் பெற்றுள்ளார்கள். அதுமட்டுமல்ல; இதன் இன்னொரு கிளையாகத் திருப்பத்தூர் தாலுகாவில் இன்னொரு சர்க்கரை ஆலையும் அமைக்கப்போகிறார்களாம். 1961ல் தொழிற்சாலையை அடுத்துள்ள பகுதிகளில் 26,500 ஏக்கராவே கரும்புச் சாகுபடி செய்தார்கள். தொழிற்சாலையினரின் முயற்சியின்பேரில் இப்போது 32,000 ஏக்கராக்கள் கரும்பு சாகுபடியின் கீழ் வந்துள்ளன. இந்தப் பகுதிகளில் கரும்பு ஒரு மாற்றுப் பயிர்தான். இரண்டு வருஷங்கள் கரும்பு சாகுபடி செய்தால் ஒரு வருஷம் நெல் சாகுபடி செய்வார்கள். ஆகவே சராசரி 21,500 ஏக்கராக்களில் விளையும் கரும்பே ஒரு வருஷத்துக்குக் கிடைக்கிறது. ஓர் ஏக்கராவுக்குச் சுமார் முப்பது டன் கரும்பு விளையும். ஒரு வருஷத்தில் இந்த ஆலைக்கு 6,45,000 டன் கரும்பு கிடைக்கிறதாம்.

சேலம் ஜில்லா பள்ளிப்பாளையத்தில் உள்ள சேஷசாயி ஸ்தாபனத்தினரின் காகிதம், அட்டைகள் உற்பத்தித் தொழிற்சாலையில் தயாராகும் காகிதத்தின் தரம் உயர்வானது. நவீன யந்திர வசதிகளுடன் கூடிய பெரிய தொழிற்சாலை இது. மூங்கிலும், எதற்கும் உதவாத மரக் கட்டைகளும் ஒரு பக்கத்தில் தூளாக்கப்பட்டுக் கொப்பரைகளில் குழம்பாகக் கொதித்துக் காகிதமாகப் பக்குவமாகும் நிலைவரை பார்க்க வேண்டிய ஒன்று. வெள்ளைக் காகிதம் உருளைகளில் சுற்றப்படும்போது அத்தனை காகிதத்திலும் எழுதித் தீர்த்துவிட வேண்டும் என்ற வேகம் எழுத்தாளனுக்கும் அச்சடித்துத் தள்ளிவிட வேண்டும் என்ற ஆசை பதிப்பகத்தாருக்கும் ஏற்படாமல் இருக்காது. அதற்காகத்தானே அவைகளைத் தயாரிக்கிறார்கள்! —கௌசிகன்

படித்துப் பாருங்கள்

காந்திக் கதைகள்

ஒரு மனிதன் தன் ஒழுக்கத்தினால் உயர்ந்துவிட்டால், அவன் மகாத்மாவாகிவிட முடியும் என்பதை நிரூபிக்கிறது காந்தியடிகளின் வாழ்க்கை. காந்தியடிகள் சொல்லையும் செயலையும் ஒன்றாக்கி வாழ்ந்து காட்டியதனால், அவரது வாழ்க்கையில் நிகழ்ந்த ஒவ்வொரு சின்ன நிகழ்ச்சியும் பளிச்சிடும் வைரங்களாகத் திகழ்கின்றன.

கைக்கு அடக்கமான, இந்தச் சிறு நூலில், காந்தி நூற்றாண்டு விழாவை முன்னிட்டுக் காதி கிராமோத்யோக் பவனத்தினர் ஸ்ரீமதி துளசி ஐயராமனைக் கொண்டு பக்கத்துக்கு ஒரு நிகழ்ச்சி வீதம் நூற்றிருபது நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார்கள். படித்துச் சுவைக்க, சுவைத்துப் பயன் பெறப் பல நிகழ்ச்சிகள் உள்ளன.

தம்மைப் பரிசோதிக்க வந்த டாக்டரிடமே காந்தியடிகள் பீஸ் வாங்கின நிகழ்ச்சி அவற்றில் ஒன்று.

இது போன்ற நிகழ்ச்சிகளைப் படித்துப் பார்க்க விரும்புபவர்களுக்கு இதோ முகவரி:

காதி கிராமோத்யோக் பவன், சென்னை—2; விலை: 75 காசு.

சாதிபேதத்தைத் தகர்த்த ராஜாஜி

ராஜாஜி தமது நீண்ட வாழ்க்கையில் எத்தனையோ துறைகளில் அரும் பணிகள் ஆற்றியிருக்கிறார். அவரது அத்தனை பணிகளையும் ஒருங்கே சேர்த்து நினைவுகூரத் தொடங்கினால் அது மாபெரும் புத்தகமாகி விடும். அது எளிதில் சாத்தியமாகக் கூடியதுமன்று. இந்தச் சிறு நூலில் ராஜாஜி அவர்கள் சாதி பேதத்தைத் தகர்க்க எடுத்துக் கொண்ட தன்முயற்சிகள் மட்டும் விளக்கப்படுகின்றன. நூலாசிரியர் விருதுநகர் திரு ஆர். டி. பி. சுப்பிரமணிய நாடார் காந்தியவாதி. மதுரை ராமநாதபுரம் வட்டங்களில் அரும் காங்கிரஸ் பணி அந்த நாட்களில் புரிந்து காந்தி மகான் முதல் காங்கிரஸ் மேலோர்கள் வரை பலரது அன்பைப் பெற்றவர். அந்த நாட்களில் நாடார் சமூகம் இருந்த நிலையையும் அவர்களுக்கு ராஜாஜி செய்த மகத்தான சேவையையும் அருமையாக நினைவுகூருகிறார்.

பொதுவாக ராஜாஜி சாதி பேத உணர்ச்சியே இல்லாத மாபுருஷர் என்பதைப் பலப்பல சம்பவங்களை நினைவுகூர்ந்து விளக்குகிறார்.


ராஜாஜி பற்றிச் சமீப காலத்தில் வெளிவந்துள்ள சிறந்த நூல்களில் ஒன்று இது.

பிரசுரம்: லோக் சேவக் பதிப்பகம், 68, எம். வி. ரோடு, சென்னை—21. விலை: 60 காசு

ஸ்ரீ நாராயண கீதம்

பக்தி உணர்வு நிறைந்து தம்மை மறந்த நிலையில் பக்தர்கள் பரந்தாமனை நாம சங்கீர்த்தனம் செய்து வழிபட்டு வந்திருக்கின்றனர். வேள்வியும், விரதமும், தவமும், தியான சமாதியும் தர முடியாத பேற்றினை இந்தக் கலியுகத்தில் பகவந்நாம சங்கீர்த்தனத்தின் மூலம் யாரும் பெற்றுவிடலாம் என்பது மகான்களின் அநுபவ வாக்கு. அந்த அநுபவ வாக்கை மெய்ப்பிக்க ஸ்ரீமதி சாவித்திரி மணியின் பக்திப் பாடல்கள் பக்தி மிகுந்த இதயத்திலிருந்து பிறந்திருக்கின்றன. கனிவும், கசிவும் கொண்ட பக்தியுள்ளத்திலிருந்து பிறந்த பக்திப் பாடல்களின் பெருமையைப் பக்தர்கள்தாமே அறிந்து கொள்ள முடியும்? பக்தியோடு இப்பாடல்களைப் படித்தால் பரவசம் தானே ஏற்படும்.

கிடைக்குமிடம்: சாவித்திரி மணி, 60, செயின்ட் மேரீஸ் ரோடு, சென்னை—18.


முற்றிலும் வெற்றி !
MAFATLAL GROUP
மபத்லால் க்ரூப்
பாப்ளின்கள், ஷர்ட்டிங்-
குகள் காட்டன் மற்றும்
'டெரீன்'/காட்டன்,
2x2 'டெரீன்/காட்டன்,
பிரின்டெட் டெரிலீஸ்டு
மற்றும் மஃபிலீஸ்டு
தரங்கள்.
நியூ ஷொராக், (ஷொராக்) அகமதாபாத்
நியூ ஷொராக், நாடியாத்.
ஸ்டாண்டர்டு, பம்பாய்
ஸ்டாண்டர்ட், (நியூ சைனா)
பம்பாய். ஸ்டாண்டர்ட், தேவாஸ்.
ஸாஸூன், பம்பாய். ஸாஸூன்,
(நியூ யூனியன்) பம்பாய். ஸூரத்காட்டன்,
ஸூரத், மபத்லால் ஃபைன், நவ்ஸாரி,
மிஹிர் டெக்ஸ்டைல்ஸ், அகமதாபாத்.

H 407 TM

கிளிஞ்சல் கோபுரம்



ஜெகசிற்பியன்

அத்தியாயம் 12

வைர வெட்டு!

"ஆமாம்; நீ ஏதோ கம்பெனியில் வேலை பார்க்கிறதாகக் கேள்விப் பட்டேன். அது என்ன கம்பெனி ?"

கருணாவின் இந்தக் கேள்வி வசந்திக்குச் சிரிப்பை வரவழைத்தது. "கேள்விப் பட்டிருக்க மாட்டீங்க, அக்கா! பஸ் ஸ்டாண்டிலே ஒரு நாள் உங்களைப் பார்த்தப்ப நான் தான் இதைச் சொன்னேன்" என்று குறும்பாகக் கூறிய அவள், "நான் வேலை செய்யறது ஒரு விளம்பர ஆலோசனைக் கம்பெனி! ரெயின்போ பப்ளிசிடீஸ்னு பேரு. அதிலே ரிஸப்ஷனிஸ்டா இருக்கிறேன். மாசம் நூத்தெழுபத்தைஞ்சு ரூபாய்" என்றாள்.

"ஆமாமாம். இப்போ ஞாபகம் வருது. அந்தக் கம்பெனியாகத்தான் இருக்கும்னு நினைச்சேன்" என்று தணிந்த குரலில் சொல்லித் தலையாட்டிக் கொண்ட கருணா, "எவ்வளவு காலமாக அங்கே வேலை பார்க்கிறே ?" என்று கேட்டாள்.

"கிட்டத்தட்ட ஒரு வருஷமாகப் போறது" என்று சுவாரசியமில்லாமல் பதிலளித்த வசந்தி சட்டென்று நிமிர்ந்து, "ஏனக்கா, இதைக் கேட்கிறீங்க?" என்றாள் சிரித்துக்கொண்டே.

கருணா மென்னகையுடன் பார்வையைக் கீழே தாழ்த்திக் கொண்டு, "ஒண்ணுமில்லே !.... எங்க கனகா இண்டஸ்ட்ரீஸில் தயாராகிற பொருள்களைப் பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தறதுன்னு தீர்மானிச்ச அந்தப் பொறுப்பை நீ வேலை பார்க்கிற ரெயின்போ பப்ளிசிடீஸிடம்தான் என் அப்பா ஒப்படைச்சிருக்கிறார்.." என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே வசந்தி குறுக்கிட்டு, "ஆமாக்கா, நான்கூடக் கேள்விப்பட்டேன்" என்றாள் மகிழ்ச்சியுடன்.

"உனக்கும் தெரியுமா ? சரி !" என்று இளநகை புரிந்த கருணா, "அந்த விளம்பரங்கள் சம்பந்தமாக நேற்று உன் கம்பெனி ஆர்ட்டிஸ்டும், போட்டோகிராபரும் சில லே-அவுட்டுகளைத் தயார் பண்ணி என் அப்பாவின் பார்வைக்காகக் கொண்டு வந்து காட்டினாங்க. நானும் பார்த்தேன். அவைகளைப் பார்த்தப்ப எனக்கு ஏற்பட்ட ஒரு சின்ன சந்தேகத்தை உன்கிட்டே கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்னு நினைச்சேன். அதாவது, அந்த லே — அவுட்டுகளிலே உபயோகிச்சிருந்த போட்டோப் படங்களைப் பற்றி...." என்று இழுத்தாற் போல் கூறி நிறுத்தினாள்.

"போட்டோப் படங்களா?... நான் பார்க்கவில்லையே!" என்றவாறு ஒரு கணம் யோசித்த வசந்தி, "அம்மாதிரியான விஷயங்களுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை அக்கா !" என்றாள். "நான் வெறும் ரிஸப்ஷனிஸ்ட் தானே ? அதாவது அந்த விளம்பரக் கம்பெனியின் விளம்பரப் பொம்மை !"


மீண்டும் அவளே தொடர்ந்து, "உங்க தொழிலகத்தின் விளம்பரப் பொறுப்பை எங்க கம்பெனி எடுத்திருக்கிறது என்கிற விவரம் கூட எனக்கு எப்படித் தெரிஞ்சதுன்னு, உங்க அப்பா அங்கே இரண்டொரு முறை காரைப் போட்டுக்கிட்டு வந்தார் ; அதிலிருந்து விஷயம் அதுவாகத்

தான் இருக்கும்னு ஊகிச்சுக்கிட்டேன்'' என்றாள்.

''வாஸ்தவம். அதையெல்லாம் நீ தெரிஞ்சுக்கச் சந்தர்ப்பம் இருக்காதுன்னு எனக்கும் தெரியும்'' என்று கூறிய கருணை, தான் கேட்க நினைக்கும் விஷயத்தை எப்படிக் கேட்கலாம் என்று சிந்திப்பவள் போல் ஒரு கணம் மௌனமாயிருந்து விட்டுத் தொடர்ந்தாள். ''ஆனால் நான் கேட்பது அந்தப் போட்டோப் படங்களைப் பற்றி அல்ல, வசந்தி! அம்மாதிரிப் படங்களுக்கு 'போஸ்' கொடுக்க வரும் 'மாடல் பெண்'களைப் பற்றித்தான் கேட்கிறேன்'' என்றாள் மெல்லச் சிரித்துக் கொண்டே. ''அவர்களை நீ பார்த்திருக்கிறாயா? அவர்களோடு பேசிப் பழகியிருக்கிறாயா?''

வசந்தி இதைக் கேட்டு முகம் சுளிப்பானோ என்று கருணை எதிர்பார்த்ததற்கு மாறாக அவன் மிகவும் உற்சாகத்தோடு சொன்னான்: ''தெரியும், அக்கா! அந்தப் பெண்களிடம் எனக்கு நெருங்கிய பழக்கமும் உண்டு. எல்லாம் பெரிய இடத்துப் பெண்கள். ஒருத்தி கல்யாணமானவள். இரண்டு பேர் காலேஜ் குமாரிகள். இன்னொருத்திதான் என்னன்னு தெரியலே.''

''என்ன தெரியலே?''



"கல்யாணம் ஆனவளா, ஆகாதவளான்னு தெரியலே. நானும் அதைக் கேட்கிறதில்லே."

"கேட்கக் கூடாது" என்று சொல்லிக் கலீரெனச் சிரித்தாள் சுகுணா. "கேட்டால் அதற்குக் கிடைக்கிற பதில் மெய்யாகவும் இருக்கலாம்; பொய்யாகவும் வரலாம். அதனால் கேட்காமல் இருப்பதே உத்தமம்."

சுகுணாவின் இந்தக் குறும்புப் பேச்சால் மேலும் உற்சாகமடைந்த வசந்தி, "ஆனாலும் அந்தப் பெண்தான் நிஜமான அழகி; மற்றதுகளெல்லாம் என்னைவிட மோசம்!" என்றாள் விஷமச் சிரிப்புடன்.

"நான் இதை நம்ப மாட்டேன். ஏன்னா, நம்ம கண் வேறே; காமிராக் கண் வேறே!" என்று சுகுணா சொன்னதைக் கேட்டு வசந்திக்கு வெட்கமாகி விட்டது. "அப்பமுன்னா நான் அழகாயில்லையா அக்கா?" என்று கவலையோடு வினவினாள் அவள்.



"அதை அப்புறம் சொல்றேன்" என்று கண் சிமிட்டி நகைத்த சுகுணா, "அது சரி; அந்த மாடல் பெண்கள் விளம்பரங்களுக்கு போஸ் கொடுக்கிறதற்குப் பணமும் வாங்குவார்கள் இல்லையா?" என்று மிக அக்கறையாக வினவினாள்.

"அது இல்லாமலா? ஆனால் அவர்களைக் கேட்டால் பணத்துக்காகத் தாங்கள் போட்டோ கொடுக்க வரவில்லை என்றும், சும்மா ஒரு 'ஹாபி'க்காகவே அதை மேற்கொண்டிருப்பதாகவும் சொல்றாங்க!"

"ஆமாமாம்; சில படிச்ச பெண்களுக்கும் பணக்கார வீட்டுப் பெண்களுக்கும் இப்ப எல்லாமே 'ஹாபி' தான். சினிமா நடிகனைக் கூப்பிட்டு 'டின்னர்' கொடுத்து அவனோடு பிக்னிக் போறதிலிருந்து, கல்யாணம் கட்டிக்கிறது, குழந்தை பெத்துக்கறது, 'டைவர்ஸ்' பண்ணறதுவரையில் அவங்களுக்கு எல்லாமே ஒரு 'ஹாபி' தான்."

வசந்திக்குச் சிரிப்பு வெடித்துக் கொண்டு வந்து விட்டது. தோளில் தொற்றிக் கொண்டிருந்த மேலாக்கு சரிந்து விழுந்ததுகூடத் தெரியாமல் குலுங்கிக் குலுங்கிச் சிரித்த அவள், "அது இருக்கட்டும், அக்கா! நீங்க எதற்காக அந்த மாடல் பெண்களைப் பற்றிக் கேட்டீங்க?" என்று கேட்டாள்.

"அதுவா...." என்று ஒரு கணம் தயங்கிய சுகுணா, வாசற்பக்கம் தன் தாயாரை எட்டிப் பார்த்துவிட்டுத் தணிந்த குரலில் சொன்னாள்: "அது.. எங்க தொழிலகத்தில் தயாரிக்கிற பொருள்களைப் பத்திரிகைகளிலே விளம்பரப்படுத்தறதுக்கென உங்க கம்பெனி சில லே-அவுட்டுகளைப் போட்டு என் அப்பாவின் பார்வைக்கு அனுப்பியிருந்தாங்கன்னு முன்னே சொன்னேன் இல்லையா? அந்த விளம்பர 'மாதிரி'களிலெல்லாம் ஒரே பெண்ணைப் பலவிதமான 'போஸ்'களில் எடுத்த போட்டோப் படங்களை உபயோகிச்சிருந்தாங்க. அப்படி 'போஸ்' கொடுத்திருந்த பெண்ணை நான் எங்கோ எப்போதோ பார்த்த ஞாபகம். ஆனால் அவளை இன்னாள்னு அவ்வளவு நிச்சயமாக என்னால் கண்டுபிடிக்க முடியலே. ஏன்னா, அவளுடைய முகத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கூடுமான வரையில் அதை மறைச்சுட்டுப் போட்டோ எடுக்கப்பட்டிருந்தது. அதனால்தான் அவள் யாருன்னு உன்னைக் கேட்டுத் தெரிஞ்சுக்கலாமேன்னு நினைச்சேன். உனக்கு அவளைத் தெரியுமா?"

மிகவும் சாதாரணமாக இவ்விவரங்களைக் கேட்டுக் கொண்ட வசந்தி,

"எனக்குத் தெரியாதே, அக்கா! நான்தான் முதலிலேயே சொல்லிவிட்டேனே; உங்க தொழிற்சாலையின் விளம்பரத்துக்காகத் தயாரிச்ச அந்த 'லே-அவுட்டு'களை நான் பார்க்கலே! பார்த்திருந்தால் அவைகளில் உபயோகிச்சிருந்த போட்டோப் படங்களுக்கு எந்தப் பெண் 'போஸ்' கொடுத்தாள்னு சொல்லுவேன். வேணுமானால் நாளைக்கு விசாரிச்சுச் சொல்கிறேன்."

"வேண்டாம், வேண்டாம்" என்று அவசரமாகக் கையசைத்த சுகுணா, 'இந்த விஷயத்தை இவளிடம் பிரஸ்தாபித்ததே முட்டாள்தனம்' என்று உள்ளூற எண்ணி வருந்துவதுபோல் சிறுபொழுது மௌனமாயிருந்துவிட்டு, "அதைத் தெரிஞ்சுக்கணும்னு அப்படி ஒண்ணும் எனக்கு அவசியமில்லே, வசந்தி! சும்மா ஒரு இதுக்காகத்தான் கேட்டேன்" என்றாள் அலட்சியமாக. பிறகு அவளே தொடர்ந்து, "மொத்தத்தில் அந்த லே–அவுட்டுகளில் எதுவும் எனக்குப் பிடிக்கலே; அதனால் அதுகளை 'ரிஜக்ட்' பண்ணிவிடும்படி என் அப்பாகிட்டே சொல்லிவிட்டேன்!" என்றாள்.

வசந்தி அவளை வியப்புடன் ஏறிட்டுப் பார்த்து, "அப்படியா சொல்லிட்டீங்க? அடடா!" என்று ஏதோ தான் நஷ்டப்பட்டுப் போன மாதிரி பதறினாள்.

"கவலைப்படாதே! முழுக்கவும் விளம்பரமே பண்ண வேண்டாம்னு நான் சொல்லி விடவில்லே. போட்டோப் படங்களை வைச்சு 'செட்' பண்ணாமல் ஆர்ட்டிஸ்டை விட்டுக் கையாலேயே வரைஞ்சுடச் சொன்னேன். அப்பாவும் அதற்குச் சம்மதிச்சுட்டார்."

"ஏன் அப்படிச் சொன்னீங்க? உங்களுக்குத் தெரிஞ்ச பெண்ணுயிருக்கிறவளின் போட்டோப் படங்களை உங்க தொழிற்சாலை விளம்பரத்துக்கு உபயோகப்படுத்த வேண்டாமேன்னு நினைச்சுட்டீங்களா?"

"ஆமாம்; அனால் அந்தப் பெண் எனக்குத் தெரிஞ்சவள்தானுன்னு எனக்கே நிச்சயமில்லே. சும்மா அப்படி ஒரு சம்சயம். இப்ப அதுவும் 'வீக்'காய்ப் போச்சு. ஆனாலும் போட்டோக்களை வைச்சு 'செட்' பண்ணின அந்த லே - அவுட்டுகள் எனக்கு அறவே பிடிக்கலே. அதனால் வேண்டாம்னு சொல்லிவிட்டேன்."


"நல்ல வேடிக்கைதான்" என்று கூறிக் கலகலவெனச் சிரித்தாள் வசந்தி. "ஊர் உலகம் இருக்கிற நிலைமை தெரியாமல் பேசறீங்க அக்கா நீங்க! இது விளம்பர யுகம். இந்த விளம்பர யுகத்திலே போட்டோக் கலைக்குத்தான் முதல் தட்சிணை. எதையும் அப்பட்டமாப் போட்டோப் பிடிச்சுக் காட்டறதைத்தான் இப்ப எல்லாரும் விரும்பறாங்க; அதைத்தான் நம்பவும் செய்யறாங்க. கற்பனை என்கிற உயர்ந்த கலை செல்லாக் காசாகிப் போச்சு. கடவுளைக் கூடப் போட்டோ பிடிச்சுக் காட்டினால்தான் நம்புவேன்னு சொல்கிற நிலைமை வந்தாலும் வந்துடும். இதைத் தெரிஞ்சுக்கிட்டுத்தான் இந்தக் காலத்து ஓவியருங்க உண்மையுமில்லாத, கற்பனையும் தேவைப்படாத 'மாடர்ன் ஆர்ட்' பக்கம் திரும்பிட்டாங்க. ஏதோ சில பேர் மட்டும் வேற வழியில்லாமல் பத்திரிகை ஆபீஸ்களில் குப்பை கொட்டிக்கிட்டு இருக்கிறாங்க. போட்டோ யுகத்துக்கு மாடர்ன் ஆர்ட் ஒண்ணுதான் இப்ப சரியான சவாலாக நிற்குது. வேற என்ன பண்ணறது? ஓவியக்கலா ரஸனையிலே இப்படி ஒரு பரிதாபமான திருப்பம் ஏற்பட்டுப் போனதாலேதான் அதற்கு ஏற்றபடி விளம்பரக் கலையும் மாற வேண்டியதாகிடுச்சு. இப்ப வருகிற விளம்பரங்களைப் பாருங்களேன்; ஒண்ணு முழுக்க முழுக்கப் போட்டோப் படமாயிருக்கும்; அல்லது சின்னப் பிள்ளைகள் கிறுக்கிப் போட்ட 'பொம்மைகள்' மாதிரி இருக்கும். இதுதான் இன்றைய நவீன விளம்பர பாணி. அதாவது அசலை அசலாகவே காட்டணும்; இல்லேன்னு அசலும் இல்லாமல் நகலும் இல்லாமல் வேறே எதையாவது ஒண்ணைக் காட்டி இதுதான் அதுன்னு பயமுறுத்தணும்."

"ஹியர்! ஹியர்!.... எக்ஸலண்ட் லெக்சர்!" என்று படபடவெனக் கைகொட்டி நகைத்த சுகுணா, "அடி, வசந்தி! எங்கேடீ இவ்வளவு நல்லா பேசக் கத்துக்கிட்டே? உங்க பப்ளிஸிடி கம்பெனியிலே ரிஸப்ஷனிஸ்டா வேலைக்கு வருகிறவங்களுக்கு இந்த மாதிரியெல்லாம் பேசக் கற்றுக் கொடுக்கிறாங்களா? இல்லே. இதுக்குன்னு எங்களுச்சும் தனியா டிரெயினிங் எடுத்துக்கிட்டியா? அடடா, என்ன பேச்சு! என்ன பேச்சு!" என்றாள் குறும்பும் குதூகலமுமாக.

வசந்திக்கு வெட்கமாகி விட்டது. "போங்க அக்கா!" என்று அவள் பொய்க் கோபத்துடன் சிணுங்கினாள்.

அவளுடைய மோவாயைப் பிடித்து நிமிர்த்திவிட்டு அவளையே ஒருகணம் உற்றுப் பார்த்த சுகுணா, "வசந்தி! நிஜமாகவே நீ ரொம்ப அழகாத்தாண்டி இருக்கிறே! அதிலும் பேச





றப்ப இன்னும் ரொம்ப அழகாயிருக்கிறே! அதனால்தான் செத்த முன்னாடி உன்னையே கண் கொட்டாமல் பார்த்துக்கிட்டு இருந்தேன்ம்மா!'' என்றாள் பூஞ்சிரிப்புடன்.

கிசுகிசு மூட்டினாற்போல் உடம்பைக் கூசிக் குறுக்கி ஒசிந்து நெளிந்து பின்னால் நகர்ந்தாள் வசந்தி. அவளுக்கு ஒரே ஆனந்தம்! பெருமை! அதை அவளால் மறைக்கவும் முடியவில்லை. முகமெல்லாம் சிவந்து மலரக் கருணாவை ஏறிட்டுப் பார்த்து, ''ஆமாக்கா! நீங்க சொல்லிருப்பபலே தான் எங்க கம்பெனி போட்டோகிராபரும் அடிக்கடி சொல்றார்! அவர் அப்படிச் சொல்றதோடு என்னை விடவில்லே, அக்கா! எதனாச்சும் ஒரு கம்பெனி விளம்பரத்துக்கு 'போஸ்' கொடுக்கச் சொல்லியும் வற்புறுத்தறார். எனக்கு போட்டோஜினிக் ஃபேஸ் இருக்குதாம். விளம்பரங்களிலே என் படங்களைப் பயன்படுத்தினால் எங்க கம்பெனிக்கு ரொம்ப நல்ல பேர் கிடைக்குமாம். இன்னும் என்னென்னமோ சொல்றார்....'' என்றாள்.

''நீ என்ன சொன்னே?''

''அது முடியவே முடியாதுன்னு மறுத்துக்கிட்டு வரேன்!''

''ஏன் மாட்டேங்கிறே? நீயும் ஒண்ணு ரெண்டு 'போஸ்' கொடுக்கிறதுதானே? அதனால் உனக்கு லாபம் தானே? பக்கவாட்டு வருமானத்துக்கு அது வழி செய்யும் இல்லையா?''

''என்ன அக்கா, நீங்களே இப்படிச் சொல்றீங்க!'' என்று வசந்தி ஒரு சீறு சீறினாளே பார்க்கலாம்; கருணா திடுக்குற்றுத் திகைத்தே போனாள்.

''அந்த ஆள் என்னிடம் அப்படிக் கேட்கிறது எனக்கு அறவே பிடிக்கலே. நாசூக்கா ஏதேதோ சொல்லிப் பார்க்கிறேன். அவர் கேட்கிறதாகவும் தெரியலே. இப்ப எங்க கம்பெனி மானேஜர்கிட்டேயே சொல்லி என்னைச் சம்மதிக்க வைக்க முயற்சி பண்றார். நானும் அதை எதிர்பார்த்துக்கிட்டுத் தான் இருக்கிறேன். மானேஜர் மட்டும் என்னைக் கூப்பிட்டு இது சம்பந்தமாய் ஏதாவது சொன்னால்....''

''நீ என்ன சொல்றதாக இருக்கிறே?''

''நான் சொல்லப் போறது ஒண்ணுமில்லே; அந்த நிமிஷமே என் வேலையை ராஜிநாமா செய்து விடறது என்கிற தீர்மானத்தோடு இருக்கிறேன்.''



''இந்தா, சரோஜா! சீக்கிரம் ஒரு டவலைக் கொண்டாமே...! சங்கீத மழையிலே நனைஞ்சுகிட்டு வந்திருக்கேன்....!''

இதுவரை கூம்பிச் சிறுத்திருந்த கருணாவின் வதனம் இதைக் கேட்டு வியப்பால் விரிந்தது. வசந்தியைப் பரபரப்புடன் நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

எதற்கும் எப்போதும் கவலையே படத் தெரியாதவள் போல் பேச்சுக்குப் பேச்சு சிரிப்பும் குலுக்குமாகவே இதுகாறும் இருந்து வந்த வசந்தி இப்போது ஏதோ ஒரு வேதனையைப் பொறுக்க மாட்டாதவள் போல் எங்கோ வெறித்துப் பார்த்தபடி கண் கலங்கினாள்.

இதைக் கண்டு மேலும் பதறிப் போன கருணா, ''என்ன வசந்தி, ஏன் அழறே?'' என்று தணிந்த குரலில் கேட்டாள்.

சட்டென்று தன் கண்களைத் துடைத்துக் கொண்டு தலை குனிந்த வசந்தி, ''ஒண்ணுமில்லேக்கா!'' என்றவாறு அசட்டுச் சிரிப்பு சிரித்தாள்.

''நீ எதையோ மறைக்கிறே! என்கிட்டே சொல்லக் கூடாதா? சொல், வசந்தி!''

சற்று நேரம் கருணாவையே பார்த்துக் கொண்டிருந்த வசந்தி துயரம் செறிந்த குரலில் கூறினாள்: ''என்னைப் பார்த்தால் நீங்க மட்டுமில்லே, மற்றவர்களும்கூடக் கவலையே இல்லாமல் ரொம்ப ரொம்பச் சந்தோஷமாகவும், மன நிறைவோடும் வாழ்க்கையை நடத்துகிறவளாகத்தான் நினைப்பீங்க, நினைக்கிறாங்க. ஆனால் நீங்க நினைக்கிறப்பலே நான் அப்படி ஒண்ணும் சந்தோஷ வாழ்க்கை வாழலே. நிம்மதியாகவும் நாளைக் கடத்தலே. அத்திப் பழம் போல் சும்மா வெளிப் பார்வைக்கு அப்படித் தெரியறேன். உள்ளே நிராசை, நிம்மதியின்மை என்கிற புழுக்கள் என்னை அணு அணுவாக அரிச்சுத் தின்னுக்கிட்டே இருக்குது.''

விழியசைக்காமல் அவளைப் பார்த்துக் கொண்டிருந்த கருணாவுக்குப் பதிலேதும் பேசத் தோன்றவில்லை. மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வசந்தியின் கண்களிலிருந்து கண்ணீர்த் திவலைகள் உருண்டன. அவற்றைத் துடைக்கவும் மறந்தவளாய், மேலும் தொடர்ந்து சொன்னாள்:

''என்ன இப்படித் திடீர்னு எதையோ பேசறேனேன்னு நினைக்கிறீங்களா?....

டுங்ககிட்டேயாவது என் மனக் குமுறலைக் கொஞ்சம் கொட்டித் தீர்க்கலாம்னுதான் இதைச் சொல்றேன்: கல்யாணமாகிறதுக்கு முன்னால் நான் ரொம்பவும் ஆனந்தமாகத்தான் இருந்து வந்தேன். அப்ப எனக்குக் கவலைன்னா என்னன்னே தெரியாமல்தான் இருந்தது. கல்யாணமாகி ஒரு வருஷம் வரையில்கூட அப்படித்தான் இருந்தேன். அப்புறம்தான் சனி பிடிச்சது. என்னை இல்லை, என் கணவரை! அதாவது, நாடக மோகம் என்கிற சனி அவரை நல்லாப் பிடிச்சுட்டது. அதனால அது என்னையும் பிடிச்சு அலைக்கழிக்க ஆரம்பிச்சுட்டது. ஆமாம்! அவருக்கு நாடகம் போடறதிலே அப்படி ஒரு பைத்தியம் பிடிச்சுப் போச்சு. அந்தப் பைத்தியத்திலே, மாசம் இருநூறு ரூபாய் சம்பளம் வந்துக்கிட்டிருந்த வேலையையும் விட்டு விட்டார். அந்த இருநூறு ரூபாய் வருமானம் எங்களைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய விஷயம் இல்லைதான். என்றாலும் தன்னுடைய புருஷன் நாலு பணம் சம்பாதிச்சுக் கொடுக்கிறதைத் தானே எந்த மனைவியும் பெரிசா நினைப்பாள்? வீட்டிலே என்னதான் கொட்டிக் கிடந்தாலும் அதுக்கு ஈடாகுமா?.... வேலையை விட்டுட்டு வீட்டிலே சும்மா இருந்தாலும் பொறுத்துக்கலாம்; அவர் அப்படியும் இல்லை. நாடக மன்றம் ஒன்றை ஆரம்பிச்சுக்கிட்டு ராத்திரி பகல் இல்லாமே அதுக்காகவே அலையத் தொடங்கினார். அதையும் கூடச் சகிச்சுக்கிட்டுத்தான் இருந்தேன். அப்புறம் அவர் அரங்கேற்றுகிற நாடகத்துக்கெல்லாம் நாங்கதான் பணம் கொடுக்க வேண்டியதாச்சு. அப்படிக் கொடுக்கிற பணம் ஒரு நயாபைசாகூடத் திரும்பி வருகிறதில்லை. அப்பாவுக்கு ஒன்னும் எனக்கு ஒன்னுமாக டிக்கட்டுகள்தான் தவறாமல் கிடைத்தன! எங்கிட்டேயிருந்து வாங்கிப்போற பணத்தை அவர் சொந்தத்துக்குச் செலவழிச்சுக்கிட்டாலும் பரவாயில்லையே! வேறே யார் யாருக்கோ ஏமாந்து கரைச்சுடறார். கேட்டால்? ஐயைய, அதைச் சொல்லவே எனக்கு வெட்கமாயிருக்குது. அசிங்கம்....''

வசந்திக்கு இப்போது குபீரென்று அத்திரம் பீரிட்டுக் கொண்டு வந்து விட்டது. ஆனால் குரலை அடக்கி இரகசியமாகப் படபடத்தாள்: ''எனக்குத்தான் அவர் கணவர். அதையெல்லாம் பொறுத்துக்கறேன். பொறுத்துக்க வேண்டியது என் தலைவிதி. ஆனால் என் அப்பா எவ்வளவு காலத்துக்குச் சகிப்பார்? என்னதான் நான் வீட்டுக்குச் செல்லப் பெண்ணாயிருந்தாலும் என்னால் அவர் ஓட்டாண்டியாகிவிடச் சம்மதிப்பாரா? மாப்பிள்ளையை இலேசாகக் கண்டிக்க ஆரம்பிச்சார். எங்கிட்டே ஓயாமல் குறை சொல்லவும் சலித்துக் கொள்ளவும் தொடங்கினார். வீட்டிலே இப்படிக் கசப்பு வாடை வீசறது அவருக்கும் தெரியும். ஆனாலும் அவர் அதைச் சட்டை பண்ணிக்கவில்லை. நிலைமை சகிக்க முடியாமல் போகவே எனக்கு என் அப்பாவின்மீதே கோபம் திரும்பியது. 'பணம் பாழாறது. வரும்படி இல்லை'ன்னு அலுத்துக்கிட்டிருந்த அவரிடம் ஒரு நாள் ரோஷமாக ஏதோ சத்தம் போட்டுவிட்டு உடனே இந்த பப்ளிசிடி கம்பெனிக்கு ஓர் அப்ளிகேஷன் எழுதிப் போட்டேன். அதிர்ஷ்டவசமாக வேலையும் கிடைச்சது. புருஷனை ஊர் சுற்ற விட்டுவிட்டு நான் சம்பாதிக்கப் போனேன். அப்பவும் அவர் கவலைப்படலை. முன்னைவிட அதிதீவிரமாக நாடகங்கள் தயாரிக்க ஆரம்பிச்சுட்டார்......''

எரிச்சல் மிகுதியால் வசந்திக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது. அதையும் பொருட்படுத்தாமல் காரத்த குரலிலே மீண்டும் பேசினாள்: ''ஏதோ கொஞ்சம் நிம்மதி கிடைச்சது என்கிற ஆறுதலுடன் அந்த விளம்பரக் கம்பெனியிலே வேலை பார்த்துக்கிட்டு இருந்தேனா? அப்படி இருந்த எனக்கு இப்ப மறுபடியும் ஒரு சோதனை ஆரம்பமாகியிருக்குது. அமாக்கா! என்னை விளம்பரங்களுக்கு 'போஸ்' கொடுக்கச் சொல்லி ஏற்பட்டிருக்கிற கெடுபிடியைத்தான் குறிப்பிடறேன். இதன் முடிவு என்ன ஆகும்னு எனக்கு இப்பவே தெரியும். அதாவது, நான் கண்டிப்பாக இந்த வேலையை விட்டு விடும்படியாகத்தான் ஆகும். இதை முன்கூட்டியே தெரிஞ்சுக்கிட்டுத்தானோ என்னவோ, எனக்குப் பதிலா வேறொரு பெண்ணை வேலைக்கு அமர்த்துற முயற்சி அங்கே இப்ப நடந்துக்கிட்டு வருது.....''

இவ்வாறு சொல்லிக் கொண்டே அவசர அவசரமாகச் சற்று முன்னால் நகர்ந்து வந்த வசந்தி, ''அக்கா! உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா?'' என்று கேட்டு விட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தாள். பிறகு இரகசியக் குரலில், ''உங்க முத்துசிவன் இருக்கிறாரே, அவருடைய சின்ன மைத்துனி சுந்தரி என்பவளைத் தெரியுமா உங்களுக்கு?'' என்று கண்களை அகல மலர்த்திக் கொண்டு கேட்டாள்.

(தொடரும்)

கால்கேட் மூலம், வாய்-நாற்றத்தைத் தடுத்து நாள்முழுதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!





ஏனெனில்:
ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் க்ரீம் வாய்நாற்றத்தையும் பற்சிதைவை விளைவிக்கும் கிருமிகளையும் 85 சதவிகிதம் வரை அகற்றுகிறது.

கால்கேட் 10 க்கு 7 பேர்களில் வாய்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறதென்றும், உணவு உட்கொண்ட உடனேயே கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால் இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத அளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப்படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன! இந்த நிரூபணத்தைப் பெற்றிருப்பது கால்கேட் மட்டுமே!

அதன் விசேஷமிக்க பெப்பர்மின்ட் சுவையே நன்கு கால்கேட் டென்டல்க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாது பல் துலக்க விரும்புவதில் வியப்பென்ன!

தூய்மையான இன் மூச்சோடு வெண்மையான பற்களும் பெறவே...மற்றெந்தப் பற்பசையையும்விட உலகிலே அதிக மக்கள் கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்.



நீங்கள் பற்பொடியை விரும்பினால், இப்பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத்பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பா பல மாதங்களுக்கு வரும்!

DC.G.37 TM

காட்சி 1

(கண்ணபிரான் வீட்டு ஹால். காலை மணி ஏழு. ஹாலின் ஒரு பக்கத்தில் மாடிப்படி. மாடிப்படியை ஒட்டி ஒரு கட்டில் இருக்கிறது. கட்டிலையொட்டிய ஒரு சாய்வு நாற்காலியில் கண்ணபிரான் கையில் ஒரு புத்தகத்துடன் உட்கார்ந்திருக்கிறார். ஹால் நடுவில் ஒரு மேஜை. அதன்மேல் ஒரு ரேடியோ. பக்கத்து ஸ்டூலில் ஒரு டெலிபோன். டெலிபோன் மணி அடிக்கிறது. கண்ணபிரான் வந்து பேசுகிறார்.)



கண்ணபிரான்: வணக்கம்! கண்ணபிரான்தான் பேசுகிறேன்!... அப்படியா? ராஜிபண்ணிட்டுப் போங்களேன்!... அனுவசியமான ஆத்திரமும் குரோதமும் மனுஷனை மிருகமாகத்தான் ஆக்குமே தவிர... ரைட்! ரைட்!...பழி வாங்கறது ரொம்ப சுலபம்!...அந்த எண்ணத்தை அடக்கி வெற்றி காணற போது தான் மனுஷன் முழு மனுஷனாகிறான். அது வரையில் அவன் அரை மனுஷன்தான்... சரி!... சந்தோஷம்...

(டெலிபோனை வைத்துவிட்டு மீண்டும் சாய்வு நாற்காலியில் போய் உட்காருகிறார். சில விநாடிகளில் அவர் மகள் மல்லிகா காப்பிக் குவளையைக் கொண்டு வந்து பக்கத்து டீபாயில் வைக்கிறாள்.)

கண்ணபிரான்: குட் மார்னிங் குழந்தாய்! (காப்பியை ஒரே மடக்கில் குடித்துவிட்டு) மல்லிகா....! அப்படியே வந்து இந்த மாடிப்படிக் கைப்பிடியைக் கொஞ்சம் பிடித்துக் கொண்டு நில்; அதுதான் சாட்சிக் கூண்டாம்....

மல்லிகா (நகர்ந்து கொண்டே) என்னப்பா இதெல்லாம்?

கண்ணபிரான்: உஷ்! நான் சொல்றபடி சொல்லணும்... உம்! 'சர்வ வல்லமையுள்ள ஆண்டவன் சாட்சியாக நான் சொல்வதெல்லாம். உண்மை. உண்மையைத் தவிர வேறொன்றும் இல்லே'... சொல்...

மல்லிகா: என்னப்பா! ராத்திரி தூக்கம் வரலேன்னு ஏதாவது 'மர்டர் மிஸ்டரி' நாவல் படித்தீர்களா?.. காலையிலேயே கோர்ட் பாஷையிலே நீங்க பேச ஆரம்பிச்சுட்டீங்களே!

கண்ணபிரான்: நான்தான் இப்போது உன்னை விசாரணை பண்ணப் போகிறேனே தவிர நீ இல்லே!...நான் சொன்னபடி சொல்லு!... விஷயம் ரொம்ப சீரியஸ்....ஆமா!

மல்லிகா : நான் மாட்டேன் அப்பா! உங்க மூட் சரியில்லேபோலிருக்கு!... நான் அப்புறம் வர்றேன். (கிளம்புகிறாள்)

கண்ணபிரான் (சிரித்தபடியே) : பயந்துட்டியா மல்லிகா?... இது காதல் கீதல் பற்றிய விசாரணை இல்லே! சாதாரணந்தான். மிகவும் சாதாரணம். ஆனால் மிகவும் பரபரப்பான விஷயம்.

சர்வ வல்லமையுள்ள காதல்...



மல்லிகா (கண்களை மூடிக் கொண்டு): சர்வ வல்லமை யுள்ள ஆண்டவன் சாட்சியாக நான் சொல்வதெல்லாம் முற்றும் உண்மை! உண்மையைத் தவிர வேறொன்றுமில்லே...

கண்ணபிரான்: கண்ணைத் திறந்துக்கோ அம்மா!... இதுதான் என் விசாரணையின் முதல் கேள்வி. இப்போ எனக்கு ஏதோ குடிக்கக் கொடுத்தாயே! அது காப்பிதானு?...

மல்லிகா (திடுக்கிட்டு): அப்பா...

கண்ணபிரான்: நான் இப்போ ஒரு பிராசிக்கூஷன் வக்கீல்... ஆமா, இல்லே என்கிற ஏதாவது ஒரு பதில் தேவை.

மல்லிகா: நான் பயந்தே போயிட்டேன்! காப்பிக் கொட்டை கொஞ்சம் மட்டமான சரக்காகத்தான் இருக்கு! வாசனேயே இல்லே. மன்னிச்சுக்குங்கோ. நானே போய்.. நல்ல ப்ரீக் கொட்டையா கறுப்புச் சந்தையிலே யாவது வாங்கிண்டு வரேன்!...

கண்ணபிரான்: உனக்கெங்கே அம்மா சாவகாசம் இருக்கு? காலம்பர சேவா சமாஜம், மத்தியானம் அநாதை விடுதி, சாயங்காலம் லேடீஸ் கிளப்னு அலேஞ்சுண்டு இருக்கே.

மல்லிகா: என்னப்பா அப்படிச் சொல்லிட்டீங்க? உங்களுக்குச் சேவை செய்தது போக மீதி நேரம்தான் மற்ற அயிட்டங்களுக்கெல்லாம்... ஏனப்பா! இன்னும் கொஞ்சம் ஸ்டிராங்கா காப்பி போட்டு அனுப்பவா?

கண்ணபிரான்: வேண்டாம்மா! மல்லிகா! கம்பர் காலத்திலேயே காப்பி குடிக்கிற பழக்கம் இருந்ததாமே! உனக்குத் தெரியுமா?

மல்லிகா: காப்பி ரசனையிலிருந்து கம்ப ரசனைக்குத் தாவிட்டீங்களா? ரேடியோவிலே கம்பராமாயணப் பிரசங்கம் கேட்டீங்களோ?

கண்ணபிரான்: இல்லே இல்லே!...ராவணன் யுத்த களத்திலே படை பலமெல்லாம் இழந்து நின்ற கட்டத்தை 'காப்பியில்லாக் காலே போல் கலங்கினுன் இலங்கை வேந்தன்' என்றுதான் கம்பர் வருணிச்சிருக்கணும்!...

மல்லிகா: அப்புறம்....

கண்ணபிரான்: அப்புறம் வந்த கடன்பார ஆராய்ச்சிக்காரப் பாவி யாரோ அதை மாத்தி 'கடன் பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினுன்'னு இடைச் செருகல் பண்ணியிருக்கணும். தான் கடன் பட்டுத் திண்டாடற உணர்ச்சியை அந்த ராவணனுக்குள் புகுத்தியிருக்கிறுன்.

மல்லிகா: ரொம்ப அதிசயமான ஆராய்ச்சி அப்பா! ராத்திரி உங்ககிட்ட கம்பராமாயணப் புத்தகம் சிக்கிடுத்துப் போலிருக்கு!... இப்போ நீங்க ராவணன் மாதிரி தவிக்க வேண்டாம்! வேறு காப்பியே அனுப்பி வைக்கிறேன். (அங்கிருந்து கிளம்புகிறுள்)

கண்ணபிரான்: நோ! நோ!... வேண்டாம்மா! சும்மா தமாஷுக்குச் சொன்னேன்.

(மல்லிகா போகிறுள். சில விநாடிகளில் வேலைக்காரன் வேலப்பன் உள்ளே வந்து மேஜை நாற்காலிகளைச் சுத்தம் செய்கிறுன்.)

கண்ணபிரான்: இந்தா வேலப்பா! அந்த ரேடியோவைத் திருப்பு.

வேலப்பன்: சரிங்க.

(ரேடியோவைத் திருப்புகிறுன். சில விநாடிகளில் 'வேலனே நீயே கதி' என்னும் சுப பந்துவராளிப் பாட்டு ஒலிக்கத் தொடங்குகிறது.)

கண்ணபிரான் (நிமிர்ந்து உட்கார்ந்து): சேச்சே! நேற்று காலையிலே பந்துவராளி, ராத்திரி பந்துவராளி, இப்போதும் அந்த ஏழவு பந்துவராளிதானு?

வேலப்பன் (தலையைச் சொறிந்து கொண்டே): எஜமான்! இது ஏழவு பந்துவராளி இல்லிங்க! சுப பந்துவராளி.

கண்ணபிரான்: வேலப்பா! நான் உன்னை ஒன்றும் கேட்கலியே! சினிமாக்களிலே வருகிற வேலைக்காரன்மாதிரி அதிகப்பிரசங்கித்தனமாக் குறுக்கே பேசாதே!... எனக்குப் பிடிக்காது.

வேலப்பன்: சரிங்க, எசமான்! (போகிறுன்)

மல்லிகா: இந்தாங்கப்பா!... இப்போ நீங்க ரசித்துக் குடிக்கலாம். என்னைச் சத்தியப் பிரமாணம் செய்யச் சொல்ல வேண்டிய அவசியமிருக்காது!...

கண்ணபிரான்: ரொம்ப தாங்ஸ்! (குடித்துவிட்டு) பேஷ்! நிஜமாகவே நன்ருக இருக்கு! ஏனம்மா மல்லிகா ஒரு சின்ன விஷயத்தைப் பற்றி விவாதிக்கலாமா?

மல்லிகா (நாணத்துடன்): என் கல்யாணத்தைப் பற்றி ஆரம்பிப்பீர்கள்!

கண்ணபிரான்: ஏனம்மா, நீ கல்யாணமே வேண்டாங்கிறியா?

மல்லிகா: அதெல்லாம் இல்லேப்பா! இப்போ என் கல்யாணத்துக்கு அவசரம்

கோமதி ஸ்வாமிநாதன்

இல்லேன்னே. அவ்வளவுதானா. நான் வரேன், அப்பா. எங்க மாதர் சங்கக் கட்டிட நிதிக்கு டிக்கட் நிறைய விற்கணும்!

கண்ணபிரான்: அப்புறம் கட்டிடம் கட்டி முடிக்கிற வரையில் கல்யாண விஷயம் அவசரம் இல்லேன்னு சொல்லுவியோ!...

மல்லிகா: போங்கப்பா!... அது அதற்கு வேளை வந்தால் நிற்கவா போகிறது? (கிளம்புகிறாள்).

கண்ணபிரான்: ஹூம்!...காதல் கதைன்னு என்னத்தையாவது கற்பனை பண்ணிண்டு...

மல்லிகா (போலிக் கோபத்துடன்): சர்வ வல்லமையுள்ள ஆண்டவன் சாட்சியாக நான் சொல்வதெல்லாம் உண்மை. உண்மையைத் தவிர வேறொன்றுமில்லே! நான் இதுவரை யாரையும் காதலிக்கத் தொடங்கவில்லே... சரிதானா? (போகிறாள்.)

காட்சி 2

(அதே இடம். முற்பகல் மணி பதினொன்று. கண்ணபிரான் மேஜை அருகில் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார். ஒரு இளைஞன் வருகிறான்.)

இளைஞன்: வணக்கம் சார்! இங்கே கண்ணபிரான்னு ஒரு ஜெண்டில்மென்....

கண்ணபிரான் (நிமிர்ந்து உட்கார்ந்து): இப்படி உட்காருங்க... அவர் இப்போ வந்துடுவார்!... நீங்க யாருன்னு...

இளைஞன் (ஒரு நாற்காலியில் அமர்ந்து): அவரே வந்துடட்டும் சார்! அப்புறம் சொல்றேன்!... உங்ககிட்டே ஒரு தடவை சொல்லி அப்புறம் இன்னொரு தடவை அவருகிட்டே சொல்லி...

கண்ணபிரான்: கரெக்ட்! அப்புறம் நீங்க சொல்ல வந்த விஷயம் உங்களுக்கே மனப்பாடமாகி, வீட்டுக்குப் போய்ச் சம்சாரத்துக்கிட்டே கூட அதையே சொல்ல ஆரம்பிச்சுடுவீங்க!... புரியுது...

இளைஞன்: அவ்வளவு தூரம் போயி அசட்டுத்தனத்தை வழியவிட இப்போதைக்கு அவசியம் இல்லே. நான் தனிக்கட்டைதான்.

கண்ணபிரான்: கையிலே ஜாதகம் வச்சிருக்கீங்களா?

இளைஞன்: வெளி நாடு போறவங்க கையிலே பாஸ்போர்ட், விஸா வச்சுக்கற மாதிரி பிரமச்சாரிங்களெல்லாம் சட்டைப் பையிலேயே ஜாதகத்தை வச்சுக்கிட்டு இருக்கணும்னு எதிர்பார்க்கிறீங்களா?

கண்ணபிரான்: நல்லாப் பேசறீங்களே! கண்ணபிரான் சாருக்கு இந்த ஜாதக விஷயம் கொஞ்சம் பிடித்தமான விஷயம். நீங்க திடீர்னு செக்கோஸ்லோவேக்கியாவைப்பற்றிப் பேசினாக்கூட 'அந்த நேப்செக் ஜாதகத்தைப் பார்த்தால் தேவலே'ன்னு ஆரம்பிப்பார். கடைசியிலே உங்க ஜாதகத்திலேயே வந்து நிற்பார்.

இளைஞன்: நான் ஒன்றும் அவர்கிட்ட பெண் கேட்க வரலே! உண்மையைச் சொல்லப் போனால் அவர் பெண் மேலே புகார் செய்ய வந்தேன்.

கண்ணபிரான் (திடுக்கிட்டு): என்னது? அவர் பெண் மல்லிகாமீதா புகார்?

இளைஞன்: அந்தப் பொண்ணு பேரு மல்லிகாவா? அதுகூட எனக்குத் தெரியாது. ஆனால் அவள் மிஸ்டர் கண்ணபிரான் பெண் என்பது மாத்திரம் தெரிஞ்சுக்கிட்டேன்.

கண்ணபிரான்: மிஸ் மல்லிகாகூட இப்போ வீட்டுக்கு வர நேரம்தான்! அவளை வைத்துக் கொண்டே நீங்கள் உங்கள் புகாரைத் தாக்கல் பண்ணலாம். உங்களுக்குத் திருப்தியான விவரங்கள் கிடைக்கும்.

இளைஞன்: விவரம் கொடுக்க வேண்டியவன் நான் சார்!... நான் மிஸ் மல்லிகாவைச் சந்திக்கிறதை விட மிஸ்டர் கண்ணபிரான்கிட்டே பேசத்தான் ஆசைப்படறேன். நீங்கள் தயவு செய்து அவரைக் கொஞ்சம் கூப்பிடறீங்களா?

கண்ணபிரான்: உங்க நிலைமை அவ்வளவு சரியாயில்லேன்னு நினைக்கிறேன். நீங்க ஏன் மிஸ் மல்லிகாவைப் பார்க்கப் பயப்படறீங்க?

இளைஞன்: ஐயையோ! என்னைத் தப்பாக நினைக்கிறீர்களே! நான் மல்லிகாவைப் பார்க்கிறதற்குப் பயப்படலே சார்! மல்லிகா என்னைப் பார்த்துட்டா பேச விட மாட்டாங்க! அதனாலேதான் இங்கே ஓடி வந்தேன்.

கண்ணபிரான்: நீங்க சொல்றது எனக்கே புரியலே! அப்புறம் மிஸ்டர் கண்ணபிரானுக்கு எப்படிப் புரியப் போறது?

இளைஞன்: சார்! கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே மிஸ் மல்லிகா எங்க வீட்டுக்கு வந்திருந்தாங்க. மாதர் சங்கக் கட்டிட நிதிக்குப் பத்து ரூபா டிக்கட் வாங்கிக்கணும்னு கேட்டுக்கிட்டாங்க.

கண்ணபிரான்: கேட்டிருப்பா! அவள் காரியதரிசியாச்சே!

இளைஞன்: முதலாவது மாதர் சங்கத்துக்குக் கட்டிடம் அவசியம் இல்லே. இரண்டாவது பத்து ரூபாய் டிக்கட் வாங்க முடியாதுன்னு சொன்னேன்.

கண்ணபிரான்: வெரி குட்! நீங்கதான் கச்சிதமாகக் கறாராகப் பேசிட்டீங்களே! மேலே பேச என்ன இருக்கு?

இளைஞன்: நாசமாப் போச்சு! அதற்கப்புறம்தான் விஷயமே இருக்கு! ஆனால் மிஸ் மல்லிகா அவசரப்பட்டு...

(வெளியிலிருந்து வேகமாக உள்ளே வந்த மல்லிகா, உட்கார்ந்திருக்கும் இளைஞனைப் பார்த்து திடுக்கிட்டுவிட்டு நேராக மாடிக்குப் போய்விடுகிறாள்.)

கண்ணபிரான்: ஓஹோஹோ! பத்து ரூபாய் டிக்கட் விலை போகலேன்னு இவ்வளவு கோபமா?... கொஞ்சம் உட்கார்ந்திருங்க தம்பி! நான் மேலே போயி கண்ணபிரான் உங்களைச் சந்திக்கத் தயாராக இருக்காரான்னு பார்த்துட்டு.. (எழுந்திருக்கிறார்)

இளைஞன்: வேண்டாம் சார்!... தவறு என் மேலே கூட இருக்கலாம்....

கண்ணபிரான்: ஏன்? ஏதாவது சினிமாக் காதல் பாட்டைச் சீட்டியடிச்சீங்களோ? மல்லிகாவுக்கு அது ஒன்றுதான் பிடிக்காத விஷயம்...


இளைஞன்: என்னை என்ன தெருப் பொறுக்கின்னு நினைச்சுட்டீங்களா? இந்தக் கல்யாணராமன் எம். ஏ. அட்வகேட் அனந்தராமனின் பிள்ளை, அமெரிக்க சர்வகலாசாலை மாணவன். அப்படியெல்லாம் நாகரிகக் குறை


கேசத்தை நன்கு பராமரிப்பது நல்ல அழகுடன் விளங்க உதவுகிறது!

பெங்கால் கெமிகல்ஸின்

காந்தாரிடைன்

ஹேர் ஆயில்





கேசத்தைப் பற்றி அக்கறையுள்ளோர் பெங்கால் கெமிகல்ஸ் காந்தாரிடைன் ஹேர் ஆயிலைத்தான் நினைக்கிறார்கள். பிசுக்கற்றது. கேசம் நன்கு பளபளப் பாகவும், நீண்டு அடர்த்தியாகவும் வளர்கிறது. கேசம் உதிர்வதைத் தடுக்கிறது. ஒவ்வொரு வீட்டிற்கும் மிகவும் இன்றியமையாதது.

பெங்கால் கெமிகல்

கல்கத்தா ○ பம்பாய்
கான்பூர் ○ டெல்லி

ஆல்போ-ஸாங்



எல்லா வயதினருக்கும் ஒரு சிறந்த டானிக்

உங்களுடைய உடல் வளர்ச்சிக்கு ஆல்போ-ஸாங் அவசியம் தேவை. ஏனெனில் இந்த பேர் முதியவர்கள் எல்லோருடைய ஆரோக் கியத்திற்கும் உடல் வளர்ச்சிக்கும் தேவை யான விசேஷப் பொருள்கள் ஆல்போ-ஸாங் கில் இருக்கின்றன.



ஜே. அன் ஜே. டிஷேன்
ஹைதராபாத் (டெக்கான்)

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு

பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1947)

"வீணு விகார்", 17-A, ஃபிளாங்க் ரோடு

ஷண்முகானந்தா ஹாலுக்கு அருகில்

சயான் (கிழக்கு) பம்பாய் - 22 D. D.

டெலிபோன்: **471455** - தபால் பெட்டி: **6759** - தந்தி: GROWRICH

ஏலம் கேட்ட பிறகு டிவிடெண்டு அடையும் வசதியுள்ள 40 மாத புதிய குருப்புகள் ஆரம்பம் - ஏலத் தேதி: ஜனவரி 25, 1969

வகுப்பு	தவணை ரூ.	காலம்	சீட்டுத் தொகை ரூ.
LTE	500-00	40 மாதங்கள்	20,000-00
LTF	250-00	40 மாதங்கள்	10,000-00
LTG	125-00	40 மாதங்கள்	5,000-00

கீழ்க்கண்ட எல்லா வகுப்புகளுக்கும் புதிய குருப்புகள் ஜனவரி 1969க்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

குறுகிய காலம்: 25 மாதங்கள்
ஏலத் தேதி: 12-1-1969

வகுப்பு	மாதச் சந்தா ரூ.	சீட்டுத் தொகை ரூ.
A	200/-	5,000/-
B	100/-	2,500/-
C	50/-	1,250/-
F	25/-	625/-
G	20/-	500/-

நீண்டகாலம்: 50 மாதங்கள்
ஏலத் தேதி: 19-1-1969

வகுப்பு	மாதச் சந்தா ரூ.	சீட்டுத் தொகை ரூ.
C	200/-	10,000/-
A	100/-	5,000/-
B	50/-	2,500/-
D	20/-	1,000/-

வேலை நேரம்: { காலை 8 மணி முதல் 10-30 மணி வரை
மாலை 4 மணி முதல் 7-30 மணி வரை

வார விடுமுறை: திங்கட்கிழமை

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்காரச்சாரி தெரு - திருவல்லிக்கேணி - சென்னை-5

கிளைகள்: பெங்களூர் - கல்கத்தா - புதுடெல்லி

பிரகடனம் இலவசம்

சீட்டுகள் ஒதுக்குதல் கம்பெனியின் உரிமையைப் பொறுத்தது

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

வாக நடத்துக்க மாட்டான் சார்!... மாதர் சங்கத்துக்கு ஒரு கட்டிடம் அவசியமில்லே. தமிழ் நாட்டில் மாதர் சங்கம் சர்வ கலாசாலேபோல வளர்ந்து நிற்க வேண்டும்! அதற்குப் பல கட்டிடங்கள் அவசியம். எனக்குப் பத்து ரூபாய் டிக்கட் வேண்டாம். நூறு ரூபாய் டிக்கட்டாகக் கொடுங்கள் என்று சொல்ல வந்தேன். பாதியிலே என்னைப் பேச விடாமல் தடுத்து எனக்குக் கஞ்சப் பிரபு பட்டத்தைக் கட்டிவிட்டு வந்து விட்டாள் மிஸ் மல்லிகா. அதைத்தான் மிஸ்டர் கண்ணபிரான்கிட்டே கூற வந்தேன். நான் கஞ்சன் இல்லே! இதை நீங்களே அவர் கிட்ட சொல்லிட்டாப் போதும். நான் வர்றேன் சார்!

கண்ணபிரான்: எங்கிட்ட சொல்ல மாட்டேன், அவர்கிட்டத்தான் சொல்லுவேன்னு சொல்லிட்டு எங்கிட்டேயே எல்லாத்தையும் சொல்லிட்டீங்களே! ஆனால் நான் கண்ணபிரான் கிட்ட இதையெல்லாம் திருப்பிச் சொல்ல முடியாது. அவரையே அழைச்சுக்கிட்டு வர்றேன். நீங்க அவரைப் பார்த்துச் சொல்லிட்டுப் போறதுதான் முறை.

(மேலே போகிறார். வேலைக்கார வேலப்பன் உள்ளிருந்து வருகிறான்.)

இளைஞன்: இந்தாப்பா! ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வா.

வேலப்பன்: கிடைக்காதுங்க.

இளைஞன்: தண்ணி இல்லேங்கிறியா? கொடுக்க மாட்டேங்கறியா?

வேலப்பன்: இந்த வீட்டிலே குடிக்கத் தண்ணி கொடுக்கிற வழக்கமில்லீங்க.

இளைஞன் (கோபமாக): ஷர்பத்தும் கிரஷ்ம்தான் கொடுப்பீங்களோ?

வேலப்பன்: சரியாச் சொல்லிட்டீங்க!... ஐயா உத்தரவு அப்படித்தான் உங்களுக்கு லேம்ஜூஸ் கொண்டுவருகிறேன். (போகிறான்)

இளைஞன் (தன்னை மறந்து இரைந்து): நானே ஒரு நிமிஷத்திலே ஆத்திரப்பட்டுட்டேனே!... இப்படித்தான் மிஸ் மல்லிகாவும் பேச்சைத் தப்பிதமாப் புரிஞ்சிட்டு இருப்பா.

(கண்ணபிரான் மல்லிகா பின்தொடர வருகிறார்.)

கண்ணபிரான்: மிஸ்டர் கல்யாணராமன்! நான் கண்ணபிரான் கிட்ட எல்லாம் சொன்னேன்! அவர் உங்கள் புகாரை எழுத்து மூலமாகக் கொடுக்கச் சொல்லுகிறார். அவர் கொஞ்சம் பிஸியாக இருக்கிறார்.

இளைஞன்: வேண்டாம் சார்! (எழுந்திருந்து) நான் சொன்னதை இவங்கிட்டச் சொல்லிட்டீங்களில்லே! அதுவே போதும். இந்த நூறு ரூபாயை அவங்கிட்டே கொடுத்துடுங்க!

((நூறு ரூபாய் நோட்டைக் கொடுக்கிறான்.)

கண்ணபிரான்: இரண்டு விஷயங்களுக்காகக் கண்ணபிரான் இந்தப் புகாரை எழுத்துருவத்தில் கேட்கிறார். அவர் அதைக் கண்ணாடி போட்டு மாட்டி வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறார்.

இளைஞன்: வேண்டாம் சார்! என் கையெழுத்து அவ்வளவு நன்றாக இருக்காது. நான்தான் வாபஸ் வாங்கிக்கிறேனே?

கண்ணபிரான்: ஆனால் கண்ணபிரான் அதை இனிமேல் அனுமதிக்க மாட்டாரே மிஸ்டர்!... முதலாவது அவர் பெண்மீது வந்திருக்கும் முதல் புகார் இது. இதுவரை யாரும் துணிந்து மல்லிகாவின் மீது குற்றம் சாட்டியதில்லே. அதுவே அவருக்குப் பெருமையாக இருக்கிறது. இரண்டாவது உங்கள் புகார் அவளுடைய மாதர் சங்கத்துக்கான தீவிர உழைப்பையும் எடுத்துக் காட்டுகிறது. ஒரு தகப்பனுக்கு இதைவிடப் பெருமை அளிக்கக் கூடிய விஷயம் வேறு எது?... எழுதுங்க மிஸ்டர்!

மல்லிகா (திடீரென்று முன்னால் வந்து உணர்ச்சி வேகத்துடன்): போங்கப்பா!



அடிதடி சண்டையும்

டோக்கியோவில் ஓர் உணவு விடுதி. ஒரு நாள் இங்கு ஏழெட்டுப் பேர் வந்து ஒரு மூலையில் இருந்த மேஜையைச் சுற்றி அமர்ந்து மதுவும் உணவும் கொண்டுவரச் சொன்னார்கள். அந்த உணவு விடுதியின் சொந்தக்காரருக்குச் சற்று நேரத்துக்கெல்லாம் அவர்கள் ஏதோ திருட்டுப் புரட்டுச் செய்துவிட்டு வந்திருக்கிறார்கள் என்பது புரிந்துவிட்டது. ஏனெனில் கத்தை கத்தையாக நோட்டுக்களை அடுக்கி வைத்துப் பங்கு பிரிப்பதில் அவர்கள் ஈடுபட்டிருப்பதைப் பார்த்தார் அவர். எந்த விகிதத்தில் பங்கு பிரிப்பது என்பதில் அவர்களுக்குள் வாக்குவாதம் பெருகி, சீக்கிரமே முஷ்டி யுத்தத்தில் முடிந்தது. ஏழெட்டுப் பேர்களும் ஒருவரை ஒருவர் நாற்காலிகளாலும் பாட்டில்களாலும் உணவருந்தும் பாத்திரங்களாலும் தாக்கிக் கொள்ள முற்படவே, விடுதியின் அதிபர் கதிகலங்கிப் போனார். சண்டையை உடனே நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் தமது உணவு விடுதி முழுதும் சர்வ நாசமாகிவிடும் என்பதைப் புரிந்து கொண்டார் அவர். போலீஸை அழைத்துப் பயனில்லை. அவர்கள் வருவதற்குள் மஞ்சள் கடுதாசி கொடுக்கும் நிலைக்குத் தாம் வந்துவிட நேரும் என்பதை அவர் உணர்ந்தார். இந்த இக்கட்டான நிலையில் அவர் என்ன செய்திருப்பார்? யோசித்துப் பாருங்கள். பிறகு 79ம் பக்கத்தில் அவர் செய்த தந்திரத்தைக் காணுங்கள்.

...என்னை ஒன்றும் இப்படிக் கேலி பண்ண வேண்டாம்...

இளைஞன் (திடுக்கிட்டு):... அப்பாவா?... யாருக்கு யார் அப்பா? மிஸ் மல்லிகா கண்ணபிரானின் பெண் இல்லையா?... நீங்க யாரு?...

கண்ணபிரான் (சிரித்துக்கொண்டே): நாடகம் ரொம்ப நன்ருக இருக்கு மிஸ்டர்! நான் பிரமாதமாக அநுபவிக்கிறேன். இப்போ நான் உங்களுக்கு ஒரு சர்டிபிகேட்டே எழுதித் தர்றேன்: வேணுமா?

இளைஞன்: நீங்க என்ன சொல்றீங்க? எனக்கு ஒன்னும் புரியல்லே. நீங்க யாருன்னு இன்னும் சொல்லலியே?

கண்ணபிரான்: மிஸ்டர்! ஜனகணமன பாடி முடிக்கத் திரை விட்டாச்சு! நாடகம் முடிஞ்சு போச்சு! இந்த மல்லிகா கொஞ்சம் அவசரப்பட்டதாலே கடைசி ஒன்னு இரண்டு சீன் கட் ஆகிப் போச்சு! பரவாயில்லே! நீங்க இனிமே மேக்கப்பைக் கலைக்கலாம்!... ஆமாம் மல்லிகா! நீகூடத்தான்! வேலப்பா! வேலப்பா!...

வேலப்பன்: இதோ கிரஷ் கொண்டு வந்துட்டேன் யஜமான்!

இளைஞன்: சார்! நீங்கதான் மிஸ்டர் கண்ணபிரானு? மன்னிக்க வேண்டும்...

கண்ணபிரான்: நாடகம் முடிஞ்சு ரொம்ப நாளானாலும் சிலபேருக்கு டயலாக் மறக்காது! அது மாதிரிதான் நீங்க பேசறீங்க?... அதுக்கு அவசியமில்லே. இந்த ஒரு இறுமைக் காவது உங்களை நான் மாப்பிள்ளையாக ஏற்றுக் கொள்ளத் தயார்! உங்களுக்கு நன்ருகத் தெரிந்த விஷயம்தான். ஆனாலும் சொல்ல வேண்டியது என் கடமை! நான் தான் கண்ணபிரான். உங்களை யார் என்று எனக்குத் தெரியும்.

இளைஞன்: நான் வர்றேன் சார்!

கண்ணபிரான்: உஷ்... அவசரப்படறீங்களே...இந்த நாடகத்திலே சிறந்த நடிகருக்கு ஒரு பரிசு கொடுக்க ஆசைப்படுகிறேன். அதைத் தீர்மானிச்சுப்பிடுவோம்.

மல்லிகா: போங்கப்பா! என்னை மன்னிச்சுடுங்க! நான்தான் இதற்கெல்லாம் காரணம்!

கண்ணபிரான்: எனக்குத்தான் தெரியுமே! அதனாலேதான் நானும் ரசித்து நடித்தேன். சும்மா பார்வையாளராக மாத்திரம் இல்லேயே!... வேலப்பா...

வேலப்பன் (வந்து கொண்டே): வந்துட்டேன் யஜமான்!... நம்ப குழந்தை மல்லிகா அம்மாவுக்குத்தான் முதல் பிரைஸ்!.... என்னமா முன்னே பின்னே தெரியாதவங்க மாதிரி முறைச்சுப் பார்த்துக்கிட்டே மாடிக்குப் போனுங்க! அந்த ஒரு நடையிலேதான் எத்தனை நடிப்பு!

மல்லிகா: வாயை மூடு வேலப்பா!

வேலப்பன்: சின்னம்மா! வாயை மூடிடலாம் சுலபமாக! ஆனல் காதை மூடிக்கிட முடியலியே!... நீங்களும் இந்த ஐயாவும் இன்னிக்குக் காலையிலே அந்தப் பொம்பிளே ஸ்கூல் காம்பவுண்டு மரத்தடியிலே பேசிக்கிட்டு இருந்ததைத்தான் கேட்டுட்டோமே... யஜமான்! மேலே நீங்களே சொல்லிடுங்க...

(மல்லிகா உள்ளே போக முயல்கிருள்.)

கண்ணபிரான்: நில்லம்மா! நீ வெளியே போனவுடனே, நானும் வேலப்பனும் மார்க்கெட்டுக்குக் கிளம்பினோம். நீங்க இரண்டு பேரும் மெய்மறந்து பேசிக்கிட்டு இருந்ததைப் பார்த்துட்டோம். அந்த மரத்தடிக்குப் பக்கத்திலே காம்பவுண்டு சுவர் இருந்ததா? அப்படியே நின்னு கேட்டுக்கிட்டு வந்தோம். நீ ஒரு நாடக டைரக்டராகவே ஆயிடலாம்! ரொம்ப நல்லாச் சொல்லிக் கொடுத்தே! என் காது கேட்க ஒரு 'சாலிலக்கி' தனிப்பேச்சு — பேசக்கூடச் சொல்லிக் கொடுத்தே! அதையும் கச்சிதமாக வேலப்பன் தண்ணீர் கொடுக்க மாட்டேன்னபோது இவர் பேசிட்டாரு!...பிரமாதம்! கல்யாணராமன்! உங்களுக்குத்தான் முதல் பரிசு!... அப்பாவித்தனமாக என்னிடம் வந்து என் அபிப்பிராயத்திலே உயர்ந்து என் மாப்பிள்ளையாக வர முயற்சியிலே நீங்க பாஸ்! கங்கிராசுலேஷன்ஸ்!

இளைஞன் (வெட்கத்துடன்): மன்னிச்சுக்குங்க ஸார்! நீங்கதான் ஜமாய்ச்சுட்டீங்க!... பிரமாதமான நடிப்பு! நான் வர்றேன் சார்! மல்லிகா எல்லாம் சொல்லுவா...

கண்ணபிரான்: இன்னமே யாரு என்ன சொல்ல இருக்கு! சஸ்பென்ஸ் ஓவர்! உங்க அப்பா என் நண்பர்தான். அவரை வந்து சந்திப்பதாகச் சொல்லுங்க!...

(இளைஞன் கிளம்புகிருன்.)

வேலப்பன்: ஐயா! லெமன் ஜூஸ் சாப்பிடாமல் போறீங்களே!...

இளைஞன் (போய்க்கொண்டே): இப்போ இருக்கிற என் தலைச் சுற்றலுக்கு உன் எலுமிச்சம்பழ ஜூஸ் போதாது! அப்புறம் வந்து சாப்பிடறேன். நீ எங்கே போறே, நான் எங்கே போறேன்! (போகிருன்).


மல்லிகா (நாணத்துடன்): அப்பா! அவர் ரொம்ப நல்லவர்!...

கண்ணபிரான்: அதுதான் தெரியுதே! நீ சொல்றபடி இப்பவே ஆட ஆரம்பிச்சுட்டானே! இல்லாதபோனு, நான்தான் கண்ணபிரான்னு தெரிஞ்சிருந்தும் ஊமைம் மனுஷன் போலப் பாவித்து நடிப்பானு? நல்ல பையன்! ...இது என்ன ஆட வைக்கும் காதலா? ரொம்பப் பிரமாதம்தான். (முகவாய்க்கட்டையைத் தடவிக் கொண்டு)...ஆனல்....

மல்லிகா (திடுக்கிட்டு): என்னப்பா?....

கண்ணபிரான்: ஒன்னுமில்லேம்மா!... இன்னிக்குக் காலையிலே நீ மாடிப் படியைச் சாட்சிக் கூண்டு மாதிரி நினைத்து என்னவோ சொன்னியே. அதிலே உண்மை இருந்ததான்னு....

மல்லிகா (வேகமாகப் போய் மாடிப் படி ஏற்றத்துப் பின் கைப்பிடியைப் பிடித்து நின்று) சர்வ வல்லமையுள்ள ஆண்டவன் சாட்சியாக நான் சொல்வதெல்லாம் உண்மை; உண்மையைத் தவிர வேறொன்றும் இல்லே. நான் இன்று காலையிலிருந்து மிஸ்டர் கல்யாணராமனைக் காதலிக்கத் தொடங்கிவிட்டேன்... (நகர்ந்து வந்து) சரிதானு அப்பா! □



VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEEN
வீணா
Veena • எம்ப்ராய்டரீஸ்
நவீன டிசைன்கள். கண் நிறைந்த வண்ணங்கள்.
மனதைக் கவரும் சித்திர தையல் வேலைப்பாடுகள் அமைந்தது.
மற்ற எல்லா சித்திர தையல் துணிகளுக்கும், வேலைகளுக்கும் மிகச் சிறந்தவை.
தயாரிப்பாளர்கள்:
S. S. M. பிரதர்ஸ் (பி) லிட்.,
எங்கள் இதர உற்பத்திகள்:
அமர்ஜோதி டிரேடர்ஸ்



பொங்கல் விசேஷ விற்பனே!
ஈடு இணையற்ற பட்டுச் சேலை ரகங்களுக்கு
NALLI SILKS
SILK SAREES
நல்லி சில்க்ஸ்
நல்லி சில்க்ஸ்
62, ராயப்பேட்டை ஹைரோட்
5 & 12-1-69 ஞாயிற்றுக்கிழமைகளில் விற்பனை உண்டு!

தென்னகம் கண்ட மகாத்மா

ம.சீ.க





அண்ணலின் வழியிலே...

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து நாலில் காந்திஜியின் ஹரிஜனச் சுற்றுப் பிரயாணத்தின் போது நான் மதுரை ஜில்லாவில் பெரியகுளத்தில் ஹிந்திப் பள்ளிக்கூடம் நடத்திக் கொண்டிருந்தேன். ஒரு குறிப்பிட்ட நாளில் மாலை ஐந்து மணி சுமாருக்கு காந்திஜி சோழவந்தானை நோக்கிப் பிரயாணம் செய்யும் ரயில் வண்டியைத் தேனி ஸ்டேஷனில் சந்தித்து, கோஷ்டியினருக்கு இரவு உணவு அளிக்க வேண்டும் என்று எனக்கு உத்தரவாயிற்று. நான் சுயம் பாகம் செய்து தனியாய் வசிப்பவன். நல்ல காலம், அச்சமயம் என் தாயார் என்கூட இருந்தார்கள். நான் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டேன்.

என் தாயார் வட இந்தியாவில் வசித்த பழக்கத்தால் சோறு, பூரி, சப்பாத்தி, இரண்டு மூன்றுவிதமான கூட்டு கறி வகைகள், சாம்பார் சட்னிகள், ஊறு காய்கள், உப்பு மாத்திரம் சேர்த்து வேக வைத்த காய்கள், பருப்பு முதலியன தயாரித்தார்கள். புளித்த தயிரும் இளம் தயிரும் இருந்தன. வீட்டில் வெண்ணெய் எடுத்துக் காய்ச்சிய நெய்யும் இருந்தது.

ஸ்ரீமதி மீராபேன், இடைவிடாத பிரயாணத்தால் ஏற்படும் மலச்சிக்கலைப் போக்க வேக வைத்த கோஸ் கீரை கனிசமாகக் கேட்டிருந்தார்கள். காந்திஜியின் பாலுக்காக ஒரு நண்பரின் வெள்ளாட்டுக்கு நான்கு நாள் 'ராஜ உபசாரம்' நடந்தது. நல்ல புல், இளந் தழைகள், தவிடும் பொட்டும் உப்பும் கலந்த தண்ணீர், சுத்தமான கட்டுத் தரை, குளியல் முதலான சுக அநுபவங்கள் அதற்கு லபித்தன. குறிப்பிட்ட நாள் மாலை நான்கு மணிக்குப் பாலைக் கறந்து, வண்டியேறி, தேனியை அடைந்து, தேனி ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டில் புகையில்லாத அடுப்பில் நீராவியிலேயே பாலைக் காய்ச்சி, பாத்திரத்துக்கு ஒரு சால்வை சுற்றி ஒரு மரப்பெட்டியில் அடக்கமாக வைத்து, கூடியவரை சூடு குறையாமல் பார்த்துக் கொண்டோம்.

குறிப்பிட்ட நேரத்துக்கு வண்டி வந்தது. ஆசிரம விதிப்படி 5-30க்கு இராச் சாப்பாடு தொடங்கிற்று. அவரவர்களுக்குப் பிரியமானதைக் கேட்டு வாங்கிச் சாப்பிட்டார்கள்.

வண்டியின் மறு கோடியில் இருந்த காந்திஜி தமக்கு ஏற்பட்ட நியமப்படியே, பேரீச்சம் பழம் முதலியவைகளைத் தின்று கொண்டே, சாப்பாட்டை முடித்துவிட்ட ஸ்ரீ டக்கர் பாபாவுடன் ஹரிஜன நிதிக் கணக்கு வழக்குகள் பேசிக் கொண்டிருந்தார். சாப்பாடு முடித்துக் கொண்டு திரும்புவோரின் முகங்களைப் பார்த்ததும் அவர் தம் இணையற்ற சிரிப்புடன், "சாப்பாடு மிகவும் திருப்திகரம் என்பது தெரிகிறது. உணவளித்தவர்களைப் பாராட்டி நன்றி கூறினீர்களா, சும்மா வந்து விட்டீர்களா?" என்று வினவினார்.

கோஷ்டியிலிருந்த பஜாஜ் குடும்பத்தார் முதலான பெண்கள் என் தாயாரை அவரிடம் அழைத்துச் சென்று, புன்னகையுடன், "எங்கள் முக மலர்ச்சிக்குக் காரணம் இவர் தான். எங்கள் கிராம வீட்டில்தான் இவ்வளவு நல்ல தயிரும் குருணை குருணையாக நல் மணம் வீசும் நெய்யும் சாப்பிட்டிருக்கிறோம். தேன் — அவர்கள் சொந்தப் பெட்டித் தேனும் — ஆரஞ்சு மலர் வாசனையுடன் மிக நேர்த்தி: ஜாடியுடன் கொடுத்து விட்டார்கள்—இதோ! மிக்க யோசனையோடும் திறமையோடும் பலவகை வெஞ்சனங்கள் தயாரித்திருக்கிறார்கள். நாங்கள் பாராட்டி நன்றி கூறியாகி விட்டது" என்றார்கள்.

காந்திஜி தமிழில், "சகோதரி! என் உடைய நன்றிகூட" என்றார். என் தாயார் இலக்கண சுத்தமற்ற ஹிந்தியில், "நன்றி

கூற வேண்டியது நான். பூர்வ ஜன்ம புண்ணியத்தால் என் குடும்பத்தாருக்கு இச் சிறு தொண்டு புரியும் வாய்ப்புக் கிடைத்தது—ஸ்ரீராமருக்கு குஹன் உதவி செய்தது போல்'' என்று குரல் தழுதழுக்க விடையளித்தார். அந்த வார்த்தைகள் கேட்ட காந்திஜி எதிர் பாராத சுக அநுபவத்துடன் எங்கள் குடும்பத் தகவல்கள் பற்றி விசாரித்தார். குடும்பத்தில் பலர் காந்திய ஆக்க வேலைகளில் ஈடுபட்டிருப்பதை அறிந்து மகிழ்ந்தார்.

ஆட்டுப் பால்

எங்கள் 'தெர்மாஸ் பெட்டி'யிலிருந்த பாலுடன் நான் அவரை அணுகிச் சற்று முன்புதான் கறந்து ஆவியில் சூடாக்கப்பட்டதை அறிவித்தேன். விஸ்தாரமான ஏற்பாட்டைக் கவனித்த அவர் மனம் கலங்கி, ''இந்நேரத்தில் பால் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் இவ்வளவு சிரமப்பட்டிருக்கக் கூடாது. முறைப்படி என் சாப்பாடு முடிவடைந்து விட்டது. — மீரா, நீ குடித்து விடேன்'' என்றார்.

மீராபேன் சிரித்துக் கொண்டே தான் காலி செய்த கோஸ் கீரைக் கிண்ணத்தைக் காட்டி, ''சப்பாத்தியும் பட்டுப் போயிருந்தது. இனி வயிறு கொள்ளாது'' என்றாள்.

காந்திஜி கெஞ்சுதலாகப் பேசி, ''ரொம்ப சிரத்தையுடன் செய்திருக்கிறார்கள். அவர்கள் மனம் நோகக் கூடாது. குடிக்க முடியுமா, பார் !'' என்றார்.

என் தாயார், 'இன்னும் ஒரு கவளம் சாப்பிடு' என்று உபசாரம் செய்ய வேண்டியவள், நிலைமை புரிந்து, ''பரவாயில்லை, இருந்து விட்டுப் போகட்டும்'' என்று சமாதானம் கூறினார். அதைக் கேட்டதும் மீரா பேன், ''நல்ல பண்டத்தை வீணாக்கக் கூடாது ; ஆளுக்குப் பாதியாகக் குடிப்போம்'' என்ற முடிவுக்கு வந்தாள்.

புதுக் கவலை

காந்திஜி அந்தத் தீர்ப்பைப் பாராட்டிக் கொண்டே தாழ்ந்திய குரலில், ''இவர்கள் டிக்கட்டு வாங்கியிருக்கிறார்களா ? இந்த வண்டிக்கு முழுக் கட்டணம் ஆகிவிட்டது. மேலும் தனி டிக்கட் வாங்கத் தேவையில்லை என்று பலர் நினைக்கிறார்கள். டிக்கட் வாங்காவில்லையானால் அடுத்த ஸ்டேஷனில்....'' என்று அவர் சொல்லும்போதே நாங்கள் டிக்கட் வாங்கியாகிவிட்டது என்று அறிவித்தோம். அவர் கவலை நீங்கிப் பின்புறம் சாய்ந்து உட்கார்ந்தார். பொதுஜன வேலைகளில் எப்படியாவது தவறுதல் நடந்து விடும், எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்ற கவலை அவருக்கு.

செக்கான் ஊரணி நிலையத்தில் அனைவரும் இறங்கி மோட்டார் வண்டிகளில் சோழவந்தான் வந்து சேர்ந்தோம். பெரும் நாட்டுப்புறக் கூட்டம் வெகு ஒழுங்காகவும் அமைதியாகவும் அவ்வூரில் நடந்து கொண்டதை காந்திஜி பாராட்டினார். என் தமையனார் டாக்டர் கோபாலஸ்வாமியின் மருத்துவ இல்லத்தில் காந்திஜி இரண்டு மணி நேரம் ஓய்வெடுத்துக் கொள்வதாக ஏற்பாடு. தயாராக இருந்த கட்டிலையும் கொசு வலையையும் வேண்டாமென்று சொல்லிவிட்டு அவர் தரையில் தம் மெலிந்த, மிருதுவான, பல மடிப் புள்ள விரிப்பின்மேல் படுத்தார். கொசுக்களை விரட்டும் தைலத்தை மாத்திரம் கைகால்களிலும் முகத்திலும் தடவிக் கொண்டார்.

நடுநிசியில் சோழவந்தானிலிருந்து திருச்சி செல்லும் ரயில் வண்டியில் நானும் ஏறிக் கொண்டேன். திருச்சியில் டாக்டர் ராஜனின் வீட்டில் அதிகாலை பஜனை நடந்தது.

வீண் செலவு !

பஜனை முடிந்து காந்திஜி தனியாய் இருந்த போது நான் அவர் முன் விழுந்து நமஸ்கரித்து ஆசி கோரினேன்.

''எழுந்திரு. என்ன, நீகூட இப்படி யெல்லாம்'' என்றவர், ''திருச்சியில் என்ன ஜோலி உனக்கு?'' என்று கேட்டார்.

''காலைப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதற்காகத்தான் வந்தேன். மறு வண்டியில் பெரிய குளம் நோக்கிப் புறப்படுகிறேன். ஆயுளில் இன்னொரு முறை வாய்ப்புக் கிடைக்குமோ, சந்தேகம். அதனால் வந்தேன் '' என்றேன்.

''முட்டாள்தனம். பொறுப்பறியாமை. இந்த வீண் செலவுக்கெல்லாம் யார் காசு கொடுக்கிறார்கள் ? இப்படி ஊர் சுற்றிக் கொண்டிருந்தால் உன்னுடைய வேலை என்ன ஆவது?'' என்று குடும்பச் சொத்தைப் பந்தயக் குதிரையின் வாலில் கட்டிவிடும் மகனைக் கண்டிப்பதுபோல் அவர் கண்டித்தார்.

''ஐயா! எனக்கும் வீண் செலவு பிடிக்காது. இரண்டாண்டுகளுக்கு முன்வரை இருநூறு ரூபாய் சம்பளத்தில் இருக்கும்போது தனி வீடும் , சமையல்காரரும் வைத்துக் கொண்டு மாதம் 80 — 100 வரை செலவழித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது சம்பளமில்லாமல் ஹிந்திப் பாடசாலை நடத்துகிறேன். சொந்தப் பணத்தில், சொந்தச் சமையலுடன் 8—9 ரூபாய்தான் செலவு செய்கிறேன். சந்தோஷமாயிருக்கிறேன். இங்கு இன்று வந்தது ஒரு 'டானிக்' போல. இன்றைய ஐந்தாறு ரூபாய் செலவில் என் மன உடல் ஐந்தாறு வருஷங்கள் ஆரோக்கியமாயிருந்தால் இச்செலவு பெரிதல்ல. சமுதாயத்துக்கு என் மூலம் கிடைக்கும் நன்மை அளவிலும் தரத்திலும் வளரும். ஒவ்வொரு நிமிஷத்துக்கும் ஆசிரம விதிப்படி 'டயரி' எழுதுவதுபோல் ஒவ்வொரு தம்படிக்கும் கணக்கு எழுதுகிறேன். உங்களுடன் தொடர்பு கொண்டவன் பொறுப்பறியாமல் இருக்கிறான் என்று நினைத்துச் சங்கடப்பட வேண்டாம் '' என்று சமாதானம் கூறினேன்.

புன்முறுவலால் அவர் எல்லாக் கரகரப்பையும் துடைத்துவிட்டு, ''சரி, போ. வேலையைச் சரியாய்ச் செய். ஜெயிலுக்குப் போக வேண்டாம். ஆக்க வேலை செய் '' என்று உரைத்தார். அதுவே மனப்பூர்வமான ஆசி.



மனைவி அருகில் இல்லாவிட்டாலே ஒரு விதக் காற்றோட்டமான போக்குத்தான். அதிலும் ஊர்ப்பட்ட வேலைகளைத் தலையில் வைத்துக் கொண்டு காலில் சக்கரத்தோடு சுற்றுபவன் சுந்தரம். அதனால்தான் காலையிலேயே வந்திருந்த அந்தத் தந்தியை இரவில் சாவதானமாக வீடு திரும்பியபோதுதான் அவன் பார்க்க நேர்ந்தது.

தலைப் பிரசவத்துக்கு மதுரையிலுள்ள தாயார் வீட்டுக்குப் போயிருந்த மனைவி சகுந்தலாவைப் பற்றி மாமனார் கொடுத்திருந்த தகவல் அது.

''ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. ஆனால் சகுந்தலாவின் நிலைதான் மோசமாக இருக்கிறது. என்றாலும் பயப்பட வேண்டாம்.
— மாமனார்.''

நிலைமை மோசமாக இருக்கிறதாம். ஆனால் பயப்பட வேண்டாமாம். இந்த 'வழவழப்பு' மாமனாரின் ரத்தத்தோடு கலந்தது.

சுந்தரம் உடனே புறப்பட்டுவிட்டான். இன்னும் ஒரு மணி நேரத்தில் மதுரைக்கு அடுத்த வண்டி. பரபரப்புடன் படி இறங்கி வந்தவனை வீட்டுக்கார அம்மாளின் நீட்டி முழக்கிய குரல் எதிர்கொண்டது: ''தம்பி! உனக்குக் காலையில் தந்தி ஒண்ணு வந்ததே.''

அந்த அம்மாளிடம் விவரமாகப் பேசிக் கொண்டிருந்தால் ரயிலைப் பிடிக்க முடியாது. ''வேறொண்ணுமில்லே; மதுரைக்குப் போய்ச் சகுந்தலாவைப் பார்த்துவிட்டு வரலாம்னு போறேன்.....'' என்று நாலே வார்த்தையில் பேச்சைக் கத்திரித்தான்.

எழும்பூர்.

மதுரைக்கு டிக்கட் வாங்கியாகிவிட்டது. வேறு ஏதாவது வாங்க வேண்டுமா?..... சாதாரண சந்தர்ப்பம் என்றால் கூடை கூடையாக வண்டிக்குள் ஏறும். இப்பொழுது யாருக்கென்று எதை வாங்குவது? குழந்தை பிறந்திருக்கும் குன்றுமணி அளவு இன்பம் சகுந்தலாவின் நிலை பற்றிய குன்று போன்ற துன்பத்துக்குள் ஒதுங்கி மறைந்திருக்கும் போது....

பளிச்சென்று அந்த நினைவு. தனக்கென்று ஒரு முழம் பூ கூடக் கேட்டறியாத சகுந்தலா பிறந்தகத்துக்குப் போகும் போது கேட்டாளே அது!

ஃபீடிங் பாட்டில்!

வேடிக்கைதான். அவளுக்கு எப்போதுமே கொஞ்சம் அழகுணர்ச்சி அதிகம். எந்தப் வைத்தியமோ அவளிடத்தில் சொல்லியிருக்கிறது. 'தாய்ப் பால் கொடுத்தால் உடலழகு கெட்டுப் போய்விடும்' என்று! அந்தப் வைத்தியக்காரச் சித்தாந்தத்தில் அவளுக்கு ஓர் அசட்டுத்தனமான நம்பிக்கை!

''அம்மாகிட்டே சொன்னால் கோவிச்சுக்கிட்டு வாங்கித் தர மாட்டாள். நீங்க வாங்கிட்டு வந்துட்டா உங்க பேரிலே பழியைப் போட்டுட்டு நான் உபயோகிச்சுடுவேன். கட்டாயமா.......''

உலகத்தில் இந்தப் பெண்ணுக்குத்தான் புருஷன் மேல் என்ன ஒரு நம்பிக்கை! தன் அசட்டுத்தனத்துக்குக்கூட அவன் ஒருவன் நிச்சயமாகத் துணையிருப்பான் என்று மனம் எவ்வளவு உறுதியாகப் பற்றிக் கொள்கிறது!

அழகான ஃபீடிங் பாட்டில் ஒன்று அவனுடைய தோள் பைக்குள் இடம் பிடித்துக் கொண்டது.

அந்தப் பெட்டியில் கூட்டமேயில்லை. 'லக்கேஜ் பர்த்'தில் படுக்கை விரித்துப் படுத்துக் கொண்ட தூரப் பயணிகள் ஓரிருவர்.



குழந்தையோடு விளையாடிக் கொண்டிருந்த ஒரு கைக் குழந்தைக்காரி. சுந்தரத்துக்கு அடுத்தாற்போல் உட்கார்ந்து நிமிஷத்துக்கு மூன்று தடவை கொட்டாவி விட்டுக் கொண்டிருந்த ஒரு முதியவர். இத்தனை பேர்தான்.

''என்ன, வண்டியில் இன்றைக்குக் கூட்டமேயில்லே.'' — சகுந்தலாவைப் பற்றிய நினைவு அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்காகப் பக்கத்தில் இருந்தவரைக் கேட்டு வைத்தான் சுந்தரம்.

''தெரியாதா? இன்னிக்குத் தெற்கே சூலம்! பஞ்சாங்கத்திலே போட்டிருக்கானே! தெற்கே பயணம் புறப்படக் கூடாதாம்..... ரொம்ப மோசமான காரியங்களெல்லாம் நடக்குமாம். ரொம்பப் பேர் புறப்படமாட்டார்கள். நல்லதில்லே.... ஆங்.... எனக்கு இந்த உலகத்தில் இனிமேல் நல்லதுன்னும் கெட்டதுன்னும் ஒண்ணும் ஆகவேண்டிய தில்லே..... தனிக்கட்டை.....'' என்று விளக்கினார் கொட்டாவிப் பெரியவர்!

திக்கென்றது சுந்தரத்துக்கு.

அவரைப் பார்க்கப் பிடிக்காமல் பக்கவாட்டில் பார்வையை ஓட விட்டான். ரொம்ப ரம்மியமான காட்சி. கைக்குழந்தைக்காரி. அசல் கிராமப்புறப் பெண். பதவிசாகத் தன் குழந்தைக்கு அமுதூட்டிக் கொண்டிருந்தாள். அந்தப் பெண் ரவிக்கைகூடப் போட்டுக் கொண்டிருக்கவில்லை. என்றாலும், உள்ளணி வெளியணி என்று அடுக்கடுக்காகப் போர்த்திக்கொண்டிருக்கும் பெண்மணிகளில் அநேகருக்குக் கைவராத, உடம்பை மறைத்துக் 'கௌரவமாக'ப் பாலூட்டும் வித்தை அந்தப் பெண்ணுக்கு அழகாகக் கைவந்திருந்தது!

சுந்தரத்தின் மனத்தில் ஒரு திடீர்த் திட்டம். சகுந்தலாவுக்கு ஃபீடிங் பாட்டிலைக் கொடுக்கக் கூடாது. இந்த ரவிக்கை போடாத பெண் லாகவமாகப் பாலூட்டிய சாமர்த்தியத்தைச் சகுந்தலாவுக்கு விளக்க வேண்டும். 'ஊஹூம்' என்பாள். விடக் கூடாது. 'அழகு உடலில் இல்லே. உதிரத்தை அமுதாக்கிக் குழந்தைக்கு ஊட்டும் தாய்மையில்தான் இருக்கிறது' என்று அவளுக்குச் சொல்ல வேண்டும்....

சுந்தரத்தின் இனிய சிந்தனைகள் அந்தக் கொட்டாவிப் பெரியவருக்குப் பொறுக்கவில்லையா?.... மனிதர் இப்படி வார்த்தைகளை உதிர்த்தார்.

'' இந்தக் காலத்திலே இப்படிப் பால் கொடுக்கிறதுக்கு எத்தனை பெண்களுக்குத் துப்பு இருக்கு? டப்பிப் பாலைக் கரைச்சு ஊத்தறாங்க. தாயார் தவறிப் போயிட்டால் தான் சங்கு.... ஃபீடிங் பாட்டில் எல்லாம் தேவை!''

தாய் தவறிப் போனால்தான் ஃபீடிங் பாட்டில் தேவையா? மதுரையில் சகுந்தலா மோசமான நிலையில்.... இங்கே தோல் பைக்குள் ஃபீடிங் பாட்டில்!..... அந்தப் பாவிப் பெரியவர் தாமாகப் பேசுகிறாரா, அல்லது ஏதாவது யக்ஷிணி தேவதை அவர் நாவுக்குள் புகுந்து இப்படி அபசகுனமாகப் பேச வைக்கிறதா?....



மதுரை வரையில்....

பா. தாமரை புஷ்பம்

செங்கல்பட்டு

''**சா**ர், உங்களுக்கு ஒரு தந்தி !''

சுந்தரத்தின் கண் முன் தந்தி ஒன்றை நீட்டியவாறு நின்றான் வீட்டுக்கார அம்மாளின் பதினெட்டு வயது மகன்.

''தந்தியா ?''

''ஆமாம், சார்! நீங்க புறப்பட்ட கொஞ்ச நேரத்துக்கெல்லாம் இந்தத் தந்தி வந்திச்சு. எப்படியாச்சும் உங்ககிட்டே குடுத்துடச் சொல்லி அம்மா விரட்டினாள். நான் ஸ்டேஷனுக்குள்ளே நுழையறப்போ வண்டி புறப்பட்டுடிச்சு. கடைசிப் பெட்டியிலே ஏறிக்கிட்டேன். செங்கல்பட்டிலே நின்றப்புறம்தான் உங்களைக் கண்டுபிடிச்சேன்.''

பையனிடமிருந்து கரம் நடுங்கப் பெற்றுக் கொண்ட தந்தியின் உறையை ஒருகணம் வெறித்துப் பார்த்தான். பின் அதைப் பிரித்துப் பார்க்காமலேயே தன் சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டான் சுந்தரம்.

''சார்! தந்தியை உடைச்சுப் பாருங்க. ஏதாவது குட் நியூசா இருக்கும்.....!''

சுந்தரத்தின் வாயிலிருந்து வார்த்தைகள் படபடப்பாக வெளியேறின. ''ஆமா..... ஆமா ! குட் நியூஸ்தான் ! ரொம்ப நல்ல செய்தி. எனக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு. அந்தச் செய்திதான் வந்திருக்கு. எனக்கு அப்பவே தெரியும். வா....வா.... காப்பி சாப்பிடலாம். வா, கான்டீனுக்கு...''

பையனை அனுப்பி விட்டுத் திரும்பிய சுந்தரம் வண்டிக்குள் ஏறவில்லை. வண்டி புறப்பட இன்னும் சிறிது நேரம் இருந்தது. அவன் மெதுவாக நடந்து பிளாட்பாரத்தின் ஒரு மூலைக்குச் சென்றான்.

பைக்குள்ளிருந்து பிரிக்கப்படாமல் இருந்த தந்தியை எடுத்தான். இப்போதும் அதைப் பிரிக்கவில்லை. வெறுமனே உறையையே வெறித்து நோக்கினான் ஒரு கணம். மறு விநாடி, அதை அப்படியே சுக்கல் சுக்கலாகக் கிழித்து, அந்தச் சுக்கல் காகிதங்களைப் பந்து போல் சுருட்டினான். அதைத் தூர எறியக் கையை உயர்த்தினான். ஆனால் எறியவில்லை. ஏதோ தயக்கம். அந்தக் காகிதக் குப்பையை மீண்டும் பைக்குள் திணித்தான்.

ரயில் ஊதியது. ஓடிப் போய் வண்டிக்குள் ஏறினான்.

''ரொம்ப மகிழ்ச்சியான செய்தியா ?''— 'கொட்டாவி'ப் பெரியவர் சுந்தரத்தின் தோளைத் தட்டிக் கேட்டார்.

''ஹூம் ?''

''செய்தி கொண்டு வந்த பையனுக்கு கான்டீனில் இனிப்புப் பலகாரங்களாலே அபிஷேகம் நடந்துதே !''

''ஆமாம், மகிழ்ச்சிதான் ! ரொம்ப மகிழ்ச்சி !'' சுந்தரம் மிடறு விழுங்கினான்.

இரண்டு முறை கொட்டாவி விட்டுப் பெரியவர் மீண்டும் தொணதொணத்தார்.

''அப்படி என்ன மகிழ்ச்சியோ?''

''என் மனைவி சிங்கக் குட்டி மாதிரி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றிருக்கிறாள்.''

''நல்ல செய்திதான். ஆமாம். தாயும் நல்ல சுகம்தானே?'' பெரியவர் விடவில்லை.

''தாய்.... தாய்.... ஆமா, என் சகுந்தலா ....ஓ... அவளுக்கென்ன? ராணி மாதிரி இருக்கா. சாயங்காலம் அவளோடயே டிரங் கால்லே பேசினேன். என்ன பேச்சுப் பேசினா! பையனுக்கு என்ன வாங்கிட்டு வர்றீங்கன்னு கேட்டாள். நான் வேடிக்கையாக 'ஃபீடிங் பாட்டில்'ன்னு சொன்னேன். என்னமா கோவிச்சுக்கிட்டா தெரியுமா? அதெல்லாம் அவளுக்குப் பிடிக்காது. அவள் பட்டணத்திலே பழகினாலும் கிராமப் பெண் மாதிரி தான்...எவ்வளவு நேரம் பேசினா தெரியுமா?''

''பச்சை உடம்புக்காரப் பெண் பெத்தெடுத்த அன்றைக்கே ஐயாகிட்ட இவ்வளவு பேச்சுப் பேசறது ஆச்சரியம்தான். என்னைப் போனொத்தவா பேச்சு மூச்சு இல்லாம கிடப்பாள்'' என்று கைக்குழந்தைக்காரி சிரிக்காமல் சொன்னாள்.

குழாய் நீர் தடைப்பட்டது போல் ஒரு கணம் சுந்தரத்துக்கு வார்த்தை வரவில்லை. மறு கணம் ரோஷத்துடன், ''என் சகுந்தலா ஒவ்வொருத்தர் மாதிரி இல்லை. எப்படி இருந்தாலும் எங்கிட்டப் பேசறது அவளுக்கு உயிர்....ஆமாம்... அவ எப்படிப்பட்டவ ?'' என்றான்.

திருச்சி

திருச்சியில் வண்டி நின்றது.

பிளாட்பாரத்தில் இறங்கி நடந்து எஞ்சின் அருகே வந்து நின்றான். மெதுவாகப் பையைத் துழாவி, அங்கு அடக்கமாகியிருந்த காகிதக் கந்தலை எடுத்தான். சிறிய தயக்கத்துக்குப் பின் அந்தக் காகிதச் சுருளிலிருந்து ஒரு துண்டை மட்டும் எடுத்துப் பிரித்துப் பார்த்தான். அதில் 'சகுந்' என்ற எழுத்துக்கள் இருந்தன.

முகம் 'குப்'பென்று வேர்த்தது.

இன்னொரு துண்டை எடுத்துப் பார்க்கவில்லை. கையிலிருந்த காகிதக் கந்தலை அப்படியே எஞ்சினுக்குள் தகதகவென்று மின்னிக்கொண்டிருந்த அடுப்புக்குள் எறிந்தான். அது குபீரென்று பற்றி எரிந்து சாம்பலாகியது.

மீண்டும் வண்டிக்குள் ஏறியவனை வரவேற்றது ஒரு பெண் குரல். ''ஹலோ, மிஸ்டர் சுந்தரம்!''

பெட்டிக்குள் பழையவர்கள் யாருமில்லை. புதிதாக, கணவனோடும், கையில் ஒரு சிசுவோடும் ஏறியிருந்த ஓர் இளம் பெண்தான் அவனை வரவேற்றது.

''என்ன சுந்தரம் அப்படிப் பார்க்கிறீங்க? என்னைத் தெரியலே? நான்தான் ஜானகி. உங்க மனைவி சகுந்தலாவோட கல்லூரித் தோழி.''

'' 'சட்'டென்று அடையாளம் தெரியலே'' என்று சமாளித்தான் சுந்தரம்.

''எல்லாம் இந்தப் பேபிக்குட்டியாலே வந்தது. இவன் பிறந்தாலும் பிறந்தா, வெறும் ஜானகியா யிருந்த என்னை ஜானகி அம்மாவாக்கிக் கிழவியாக்கிப்புட்டா'' என்று பெருமையோடு தன் குழந்தையைக் கொஞ்சினாள் ஜானகி.

''எங்களுக்கும் ஆண் குழந்தை பிறந்திருக்கே!'' என்றான் சுந்தரம்.

அவன் சொன்ன விதத்தைக் கண்டு ஜானகியும் அவளுடைய கணவனும் ஒரு விநாடி அயர்ந்து போய் விட்டார்கள்.

''அப்படியா? கன்கிராஜுலேஷன்ஸ். குழந்தை எப்படி இருக்கான்?''

''நான் இன்னும் பார்க்கவில்லே. நேற்றுத்தான் பிறந்திருக்கிறான். இப்போ பார்க்கத்தான் போறேன்.... ஆம்... என் சகுந்தலாவுக்குப் பிறக்கிற குழந்தையைப் பார்த்துத்தான் சொல்லணுமா? என் சகுந்தலாவோட அழகு. அவளோட அழகுச் சிரிப்பு அப்படியே குழந்தைக்குப் பொருந்தி யிருக்காதா?...''

''அப்போ ஜானகியோட வாயாடித்தனம் என் பொண்ணுக்கும் வரும்னு சொல்றீங்களா?'' என்று வேடிக்கையாகக் கேட்டான் அவளுடைய கணவன்.

''ஆரம்பிச்சுட்டீங்களா? இப்படிப் பேசினால் எனக்குக் கோபம் வரும்'' என்று பொய்மையாகச் சீறினாள் கணவனிடம்.

''என் சகுந்தலா இப்படிக் கோபமே பட மாட்டாள்!'' என்று குறுக்கிட்டான் சுந்தரம்.

''மிஸ்டர், சுந்தரம்! இதை நம்ப மாட்டேன். நாளைக்குப் பொறக்கப் போற என் இரண்டாவது பெண் என் கிட்ட வந்து, 'எங்க மாமியார் அப்படித்தான்'னு சொன்னாத்தான் நம்புவேன்'' என்றாள் ஜானகி சிரித்துக் கொண்டே.

''மாமியாரா?''

''ஆமாம், சகுந்தலா உங்ககிட்ட சொல்லலையா? எங்க இரண்டு பேருக்கும் அப்பவே ஒப்பந்தம் இருக்கு. என் பொண்ணுக்கும் அவ பையனுக்கும் கல்யாணம் பண்ணறதாக! சக்கு உங்க கிட்டச் சொல்லலையா?''

''ஓ, அதுவா? சொன்னாள், சொன்னாள்! என் சகுந்தலாவா மறப்பாள்! அவள் ஒவ்வொருத்தர் மாதிரியா?...''

''மிஸ்டர் சுந்தரம்! சகுந்தலா எனக்குப் பத்து வருஷத் தோழி. ஆனால் அவளைப்பற்றி நான் தெரிஞ்சுக்காததை யெல்லாம் நீங்க ஒரு வருஷத்துக்குள்ளே தெரிஞ்சிருக்கீங்க.''

''ஆமா, ஆமா... என் சகுந்தலாவோட சுபாவம் அப்படி. அவளை யாரும் கண்டு பிடிக்க முடியாது. நான் மட்டும் என்ன, நானா கண்டுபிடிச்சேன்? இல்லை... அவ அன்பையும் அறிவையும் அவளா என்கிட்டே அர்ப்பணிச்சுக் காட்டினாள். அவ்வளவு அன்பு. அவளுக்கு என் பேரிலே அவ்வளவு ஆசை.... அவ்வளவு பக்தி... அவ்வளவு பாசம்...ஆனா ஆனா... அவள் இப்போ.... இப்போ...''

''அவளுக்கு என்ன?''

''ஒண்ணுமில்லே. அவளுக்கென்ன, ராஜாத்தியாட்டம் இருக்கா...சாயங்காலம் தான் டிரங்கால்லே பேசினேனே...!''

மதுரை வந்தது.

''நாங்க ஒரு வாரத்திலே எங்க 'மாப்பிள்ளை'யையும் சகுந்தலாவையும் பார்க்க வருகிறோம். ரொம்ப விசாரிச்சேன்னு 'சக்கு'விடம் சொல்லுங்கோ.'' — ஜானகி தம்பதி விடைபெற்றுக் கொண்டனர்.

''ம்ம்'' அதற்கு மேல் பேசவில்லை சுந்தரம்.

வந்தாயிற்று. கிழக்கு ஆவணி வீதி. அந்தப் பக்கத்துச் சந்தில் மாமனாரின் வீடு.

சந்து முனைக்கு வந்ததும் அவனுடைய பார்வை வீட்டு வாசலை நோக்கி ஓடியது. அங்கே அந்த வாசலின் எதிரே... பச்சைக் கம்புகள்... நீச்சட்டி... சிறு கூட்டம்.



''என் ஸ்வெட்டர் எங்கே?''

''மழைகாலம் பாருங்கோ! அரிசி கெட்டுப்போகாமல் இருக்க அரிசி மூட்டைக்குப் போட்டு வெச்சிருக்கேன்!''

பத்தடி நடந்தால் வீடு. ஆனால் அவனால் நடக்கவில்லை... தலை சுற்றியது.

''**ச**ந்து முனையிலேயே சகுந்தலா சகுந்தலான்னு மயங்கி விழுந்துட்டீங்களே! என்னைப் பார்க்காம அவ்வளவு ஏக்கமா?.... ஹூம்?... நீங்கள் இப்படித் தவிப்பீங்கன்னு தான் சுகமா யிருக்கேன்னு அப்பாவை இரண்டாவது தந்தி அடிக்கச் சொன்னேன்!''

''உங்கப்பா இரண்டாவது அடித்த தந்தி செங்கல்பட்டிலே கிடைச்சுது. ஆனால் நான் அதைப் பார்க்கவில்லை.''

''ஏன்?''

''தந்தியிலே நல்ல செய்திதான் இருக்குன்னு எனக்கு எப்படித் தெரியும்? வேறு 'வித்தியாச'மான உன்னைப்பற்றின பயங்கரச் செய்தி இருந்திருந்தால்... அதைப் பிரிச்சுப் பார்த்து அப்படியொரு பயங்கரச் செய்தி இருந்தால் கூட அதை அப்பவே அவ்வளவு சீக்கிரமா நான் தெரிந்து கொள்ள விரும்பவில்லை. 'அந்தச்' செய்தியையும் உறுதியாகத் தெரிந்து கொள்ளாமல் நீ நன்றாக இருப்பாய் என்ற நம்பிக்கையை என் மனத்துக்கு நான் கொடுத்து என்னைப் பொறுத்த அளவில் கூடக் கொஞ்ச நேரம் உனக்கு உயிர் கொடுத்து மானசிகமா உன்னோடே வாழ்ந்து அனுபவித்துக் கொண்டு வந்தேன்....ஆனா வீட்டு வாசலிலே கூட்டமும் அதுவுமாப் பார்த்ததும் அதிர்ச்சி தாங்கலே.''

''நல்லா யிருக்கு. உங்க மனைவி மதுரையில் இருக்கிறாள் என்பதற்காக, மதுரையில் இருக்கிற நூறு வயதுக் கிழம் கூடச் சாகப்படாதாக்கும்! அந்த அடுத்த போர்ஷன் தாத்தா 'சொர்க்கரி' அடிச்சதும் போதாதுன்னு ஒரு மாசமாப் பயணம் சொல்லிக் கடைசியில் இன்னிக்குத்தான் முடிவாப் புறப்பட்டிருக்கார்!''

அவருக்காகத்தான் நாங்கள் இருக்கிறோம்!





அப்படித்தான் திருமதி ராதா நினைக்கிறா. நாங்களும் அதைத்தானே விரும்புகிறோம்! அவருக்கு உதவ, நாங்கள் எத்தனை வசதிகளை செய்திருக்கிறோம், பாருங்கள்! திருமணம் செய்து கொள்வதற்காக அவர் வேலையை ராஜினாமா செய்தபோது, அவரது பிராவிடெண்ட் பண்டு பணத்தை எங்கள் 'பிக்ஸெட் டெபாஸிட்'டில் முதலீடு செய்யச் சொன்னோம். பின்னர் அவர் ஒரு தையல் மெஷின் வாங்க விரும்பினார். அதற்கான பணத்தை சுலபமான மாதத் தவணைகளில் சேமிப்பதற்காக எங்கள் 'ரெக்கரிங் டெபாஸிட்' திட்டத்தில் சேரச் சொன்னோம். பிறகு அவர், நகை விலையுயர்ந்த நகைகளை வீட்டில் வைத்துக்கொள்ள பயந்தபோது, எங்கள் 'ஸேஃப் டெபாஸிட் லாக்கரை' வாடகைக்கு எடுத்துக்கொள்ளச் சொன்னோம்.

இப்பொழுதெல்லாம் திருமதி ராதா, எந்த பிரச்னை தோன்றினாலும், எங்களிடம்தான் வருகிறார். நாங்கள் கூடி ஆலோசித்துப் பரிகாரம் காண்கிறோம். எனவே, "அவருக்காகத்தான் நாங்கள் இருக்கிறோம்" என்று அவர் நினைப்பதில் ஆச்சரியமில்லை! எங்களது லட்சக்கணக்கான வாடிக்கைக்காரர்களில் ஒவ்வொருவரும் இப்படித்தான் எண்ணுகிறார். எனவே, உங்களுக்கும் சேவைசெய்ய வாய்ப்பளியுங்கள்!

நீங்கள் என்றென்றும் வளமையுடன் வாழ

தி பாங்க் ஆஃப் பரோடா லிட்.

(நிறுவனம்: 1908) ரெஜிஸ்டர்ட் ஆபீஸ்: மாண்ட்வீ, பரோடா
இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் 100க்கு மேற்பட்ட கிளைகள் உள்ளன

Shilpi-BOB-11/68 tam

ஜெட் யுகத்தில் பிஞ்சு உள்ளம்

உலகம்தான் எவ்வளவோ மாறிவிட்டதே. சந்திரனை எட்டிப் பிடிக்க மனிதன் முயலுவதுகூட குழந்தைகளுக்குத் தெரிந்திருக்கிறதே! 'ஜெட்' விமானங்களில் பறக்கும் இந்த நவீன காலத்தில் குழந்தைகளின் மனோபாவமும் மாறியிருக்கிறதா என்பதை அறிய ஜெர்மனியில் பேராசிரியர் டாக்டர் ரிச்சர்ட் முல்லர் என்பவர் ஒரு சர்வே நடத்தினார். அதன் முடிவுகள், அனைவரையும் வியப்பில் ஆழ்த்துவதாக அமைந்துள்ளன.

குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்கள் இன்னும் "மிருதுவாகத்"தான் இருக்கின்றன என்பதை இந்த ஆய்வு நிரூபித்துவிட்டது. ஒன்பது வயது முதல் பன்னிரண்டு வயது வரையிலான முந்நூறு குழந்தைகளிடம் "வேறு ஏதேனும் ஒன்றாக மாற முடிந்தால், என்னவாக மாற விருப்பம்?" என்று கேட்டார் பேராசிரியர்.

பெரும்பாலான சிறுமிகள், அழகிய இளவரசியாகவோ அல்லது கோமகவரியாகவோ



மாறவும், கோட்டைகளில் வாழவும், கண்ணைப் பறிக்கும் ஆடை, ஆபரணங்கள் அணிந்து புகழுடன் விளங்க விரும்புவதாகவும் தெரிவித்தனர்.

பையன்கள் வலிமை வாய்ந்த மன்னர்களாகவோ அல்லது சகல சக்திகளும் படைத்த வல்லவர்களாகவோ மாற விருப்பம் தெரிவித்தனர். பையன்களில் சிலர் புத்தகங்களிலும், டெலிவிஷன்களிலும் தங்கள் கவனத்தைக் கவர்ந்த கதாநாயகர்போல மாறவும் ஆசை தெரிவித்தனர்.

வேறு ஒரு பிராணியாக மாற வேண்டும் என்பது குழந்தைகளின் ஆசைக் கனவுகளில் முக்கியமானதாகும். பறவையாகவோ சிறிய பிராணியாகவோ மாறச் சிறுமிகள் ஆசை தெரிவித்தனர். பையன்களோ கொடிய மிருகமாகவோ, அல்லது வலிமைக்கும் திறமைக்கும் பெயர் பெற்ற பறவையாகவோ மாற விருப்பம் தெரிவித்தனர்.

காலம் மாறினாலும் "குழந்தைகளின் உலகம்" தனி; குழந்தைகள் என்றும் குழந்தைகளே!

(யூ.பி.எஸ்.)

இரு துறவிகளும் ஒரு பெண்ணும்

இரு இளந் துறவிகள் பயணம் செய்துகொண்டு இருந்தனர். வழியிலே ஒரு ஆறு குறுக்கிட்டது. ஆற்றிலோ கரை புரண்டு வெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது. நேரமோ இருட்டிக் கொண்டிருந்தது. இருவரும் ஆற்றின் கரையில் நின்றுகொண்டு மறுபுறம் செல்வதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தனர். அச்சமயத்தில் ஓர் இளம் பெண் பரபரப்போடு ஓடிவந்தாள். அவளுக்கு அவசரமாக ஆற்றின் மறுபுறம் சென்றாக வேண்டும். தன்னை எப்படியாவது கரையேற்றி விட வேண்டும் என்று துறவிகளை மன்றாடினாள். துறவிகள் இருவரும் மௌனமாக இருந்தனர்.

அவளோ மீண்டும் பரிதாபகரமாக வேண்டுகோள் விடுத்தாள். முதல் துறவி முகத்தை வேறு புறமாகத் திருப்பிக் கொண்டார். இரண்டாவது துறவி சற்றே யோசித்தார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவராக அந்தப் பெண்ணைத் தமது தோளில் சுமந்து கொண்டு ஆற்றைக் கடக்கத் தொடங்கினார். முதல் துறவி முணுமுணுத்துக்கொண்டே பின் தொடர்ந்தார்.

ஆற்றைக் கடந்ததும் துறவிகளின் பயணம் தொடர்ந்தது. முதல் துறவி இரண்டாம் துறவியை நோக்கி "நீர் செய்தது சரிதானா?" என்றார். அவரோ பதிலேதும் சொல்லவில்லை. பயணம் தொடர்ந்தது. முதல் துறவி மீண்டும் மீண்டும் குறை கூறிக்கொண்டே வந்தார். மற்ற துறவியோ மறுமொழி கூறாமலே நடந்தார்.




இந்தத் தடவை முதல் துறவி சற்று காட்டமாகவே கூறினார்: "நீர் செய்தது நமது தர்மத்துக்கு அப்பாற்பட்ட தல்லவா - துறவிகளுக்கு அழகா?" என்று கேட்டார்.

இரண்டாம் துறவி வாயைத் திறந்தார்: "நண்பரே! நான் அந்தப் பெண்மணியை ஆற்றங்கரையிலேயே இறக்கி விட்டுவிட்டேன், நீர் இன்னுமா அவளைச் சுமந்துகொண்டு வருகிறீர்?" என்று கூறினார்.

முதல் துறவி வெட்கித் தலைகுனிந்தார்.


-பழங்கால புத்த இலக்கியக் கதைகளிலிருந்து
டி. எம். மாணிக்கராஜ், பம்பாய்.



'செக்'கில் கைரேகை

'செக்'குகளில் பொய்க் கையெழுத்து மோசடி அதிகமாகி வருவதால் வருங் காலத்தில் சில பாங்குகள் 'செக்'குகளில் விரல் ரேகையை வைக்கும்படி கேட்கும் காலம்கூட வரலாம்' என்கிறார் சர்தூல் சிங் என்ற பிரபல விரல் ரேகை நிபுணர்.

'சண்டே ஸ்டாண்டர்டு' - பாபு



விமானத்தினடியில் பெட்ரோல் ஒழுக ஆரம்பித்ததாம். ஆபத்தான நிலைமையைச் சமாளிக்க விமானி என்ன செய்தார் தெரியுமா?

"தலைகீழாகப் பறந்தாராம்!" -'ரமணி'

அபயமும் அபாயமும்

1924-ம் ஆண்டு ஜூன் திங்கள் இருபத்தி ஆறும் நாள். நேரம் இரவு 11—30 மணி. நல்லிருள் நகரில் படர்ந்திருக்கிறது. அந்த விசாலமான அறையில் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் வழக்கம்போல் ஒரு மேடையில் படுத்துக் கொண்டிருக்கிறார். அறையில் பொருத்தப்பட்டிருந்த வெவ்வேறு ஜன்னல்களுக்கு அருகில் நான்கு சிஷ்யர்கள் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். திடீரென்று 'திருடர்கள், திருடர்கள்' என்று வெளியே சத்தமிட்டுக் கொண்டு போவதைக் கேட்டுத் துயில் கொண்டிருந்த சிஷ்யர்களில் குஞ்சு, மாஸ்டன் என்ற இருவர் விழித்துக் கொள்கின்றனர்.

''யார் அது?'' என்று கேட்கிறார் மாஸ்டன்.

கேள்விக்குரிய பதிலைத் தரும் வகையில் ஒரு ஜன்னலின் கண்ணாடிக் கதவு உடைந்து நொறுங்குகிறது. குஞ்சுவும், மாஸ்டனும் இச் செய்கையைக் கண்டு பீதி அடைந்து, மகரிஷிகள் இருப்பிடத்துக்கு வருகிறார்கள், அபயம் தேடி. அடுத்தபடி திருடர்கள் பகவான் படுத்துக் கொண்டிருந்த இடத்துக்கு அருகில் உள்ள கண்ணாடிக் கதவுகளை 'ஒரு கை' பார்க்கின்றனர். இதைப் பார்த்துக் கொண்டு மகரிஷி மௌனமாகவே உட்கார்ந்திருக்கிறார். நிலைமை மோசமாகப் போய்க் கொண்டிருப்பதை உணர்ந்த குஞ்சு, ராமகிருஷ்ணன் என்ற மற்றொரு சிஷ்யரை உதவிக்கு அழைத்து வருகிறார். இச்சமயத்தில் திறந்திருந்த வாசற்கதவு வழியாகக் கருப்பன், ஜாக் என்ற ஆச்ரமத்து நாய்கள் உள்ளே பிரவேசிக்கின்றன. நீச புத்தியுடைய அத்திருடர்கள் அந்த நாய்களையும் சவு: இரக்கமின்றி அடிக்கின்றனர். அந்த நாய்களும் வேறு வழியின்றி வந்த வழியே சென்று விடுகின்றன. கயவர்களின் கண்களுக்குக் கறுப்பு நாய்களும் கண்ணாடிக் கதவுகளும் ஒன்றாகவே தோன்றியது போலும். அத்வைத தத்துக்கும் மேம்பட்ட அரிய தத்துவம்தான்!

''இந்த அறையில் மிகவும் சொற்பமான பொருள்களே இருக்கின்றன... நீங்கள் அவைகளைத் தாராளமாக எடுத்துக் கொண்டு போகலாமே... ஏன் இந்த அவசியமற்ற கலவரம்?''

திருடர்களிடம் மிகவும் அமைதியான முறையில் கூறுகிறார் பகவான். ஆனால் இதுவும் செவிடர்கள் காதில் ஊதிய சங்காகவே ஒலிக்கிறது. திருடர்கள் அறையிலிருந்த ஒரு ஜன்னலை அடியோடு பெயர்த்தெடுக்க முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். கொதிப்படைந்த குஞ்சு திருடர்களுடன் சரிநிகர் சமமாகச் சண்டையிட அவர்கள் இருக்கும் திசையில் முன்னேறுகிறார். பகவான் குஞ்சுவைத் தடுத்து, ''இந்தத் திருடர்கள் அவர்கள் தர்மத்தைச் செய்யட்டும். நாம் நமது தர்மத்தைக் கடைப்பிடிப்போம்... அவர்கள் வழிக்கு நாம் போக வேண்டாம்...'' என்கிறார்.

திருடர்கள் தங்களிடம் இருக்கும் துப்பாக்கியைக் காண்பிக்கும் வகையில் ஏதோ சத்தத்தை உண்டு பண்ணுகிறார்கள். குஞ்சு, மகரிஷிக்கு எவ்வித ஆபத்தும் நேரக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் பாதுகாப்புக்கு ஆட்களை அழைத்து வர வெளியே விரைகிறார்.

அடுத்தபடியாகத் திருடர்கள் அந்த அறையின் கூரைக்குத் தீ வைக்கப் போவதாக அச்சுறுத்துகின்றனர். பகவான் மிகவும் பணிவுடன், திருடர்களை அந்நிய செயலில் ஈடுபட வேண்டாம் என்றும், வேண்டுமானால் தாம் தம் சிஷ்யர்களுடன் அந்த அறையை விட்டே வெளியேறிவிடுவதாகவும் கூறுகிறார். இதையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள்போல் அந்தத் திருடர்கள் பகவானும் பக்தர்களும் வெளியேறச் சம்மதித்துத் தக்க மரியாதையுடன் வழியனுப்புகின்றனர்! அதாவது தங்கள் கையிலிருந்த பிரம்பினால் பலத்த ஒன்றினைப் பிரசாதமாகக் கொடுத்தே அவர்களை வெளியேற்றுகின்றனர். பகவானுக்கும் இடது தொடையில் ஒரு பலத்த அடி விழுகிறது. உடனே அவர், அத்திருடர்களிடம், ''இதுவும் உங்களுக்கு மனத்திருப்தியை அளிக்கவில்லை என்றால் எனது வலது காலிலும் ஓர் அடி அடியுங்கள்!'' என்று கூறி அதற்குத் தயாராகிறார். ஆனால் ஏனோ அந்தக் கயவர்களின் கல் நெஞ்சமும் இன்னொரு முறை முற்றும் துறந்த அம்முனிவரைத் துன்புறுத்த மறுக்கிறது. அடிபட்ட அந்த அடியார்கள் அறையின் வடக்குப் புறத்தில் தங்கள் குருவுடன் அமர்ந்து கொள்கின்றனர்.





''மாடி போர்ஷன்காரர் சர்க்கஸ் கம்பெனியிலே மானேஜராம்!''

* *

'' அங்கேயே அமைதியாக உட்கார்ந்து கொண்டிருங்கள்...இல்லையேல் உங்கள் தலை சிதறிவிடும்...'' — இது திருடர்கள் ஒருவனின் அபாயச்சங்கு.

''இந்த அறை முழுதும் உங்கள் கையில் தான் இருக்கிறது... நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்... எது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்...'' — அபாயச் சங்குக்கு அமைதியான அபயச் சங்கு பதில்.

''பெரியவரே... எங்களுக்கு ஒரு அரிக்கன் விளக்கு இப்பொழுதே வேண்டும். விரைவில் கொண்டாரும்'' என்று மற்றொரு திருடன் கேட்கவே, பகவானின் உத்தரவின்படி ராமகிருஷ்ணன், ஏற்றிய விளக்கு ஒன்றினை அத்திருடனிடம் கொடுக்கிறார். இத்துடன் சும்மா இருந்து விடவில்லை. மற்றொரு திருடன் அந்த அறையில் இருந்த பூட்டிய அலமாரியைக் காண்பித்து அதற்குரிய சாவியைக் கேட்கிறான். ஆனால் அந்தச் சாவியையும் எடுத்துக் கொண்டுதான் குஞ்சு ஆட்களை அழைத்து வர வெளியே விரைந்தார். அவர் இன்னும் வந்தபாடில்லை. இந்த உண்மை திருடர்களிடமும் எடுத்துரைக்கப்படுகிறது. திருடர்கள், கேவலம் ஒரு சாவியை நம்பிக் கொண்டா வந்திருப்பார்கள்? மறு நிமிடமே அந்தப் பீரோக் கதவை உடைத்துத் திறந்து விடுகிறார்கள். பிறகு அதிலிருந்த ஒரு பேனாக் கத்தி, சில வெள்ளி விக்கிரகங்கள், சிறிது அரிசி, மாம்பழங்கள் ஆகியவற்றை எடுத்துக் கொள்கின்றனர். ஆக, பத்து ரூபாய் மதிப்புள்ள ஆசிரமத்து மொத்தப் பொருள்களும் கையாடப்படுகின்றன. தவிர, தங்கவேலுப் பிள்ளை என்ற ஒரு பக்தரிடமிருந்து ஆறு ரூபாயையும் வாங்கிக்கொள்கின்றனர். இல்லை, பிடுங்கிக் கொள்கின்றனர். எப்படியும் அவர்களுக்குக் கிடைத்த மொத்தத் தொகை இருபது ரூபாயைக்கூடத் தாண்டவில்லை. ஏமாற்றமடைந்த திருடர்களில் ஒருவன், ஏந்திய கையுடன் பகவானிடத்து, ''எங்கே உங்கள் பணம்? எங்கே வைத்திருக்கிறீர்கள்?'' என மிரட்டுகிறான். மகரிஷியோ தாங்கள் ஏழை சாதுக்கள் என்றும், தங்களுக்கென்று சொந்தமாகப் பணமோ பொருளோ கிடையாது என்றும் நயம்பட எடுத்துரைக்கிறார்.

பிறகு பகவான் அடிபட்ட தம் சிஷ்யர்களிடம் காயங்களில் ஏதாவது மருந்து தடவும்படி கூறுகிறார். ராமகிருஷ்ணன் பகவானிடம், ''தாங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்க, அதற்கு சுவாமிகள் நகைச்சுவையுடன், ''எனக்குத்தான் ஏற்கனவே 'பூஜை' ஆகிவிட்டதே... வேறு ஒன்றும் வேண்டாம்...'' என்று கூறி விடுகிறார். ஆனால் பகவான் காலில் பட்டிருந்த ஒரு காயம் ராமகிருஷ்ணனின் கண்களில் கண்ணீரை வரவழைத்து விட்டது. கோபம் கொண்ட அவர், அருகில் இருந்த இரும்பு உலக்கை ஒன்றுடன் திருடர்கள் இருந்த திசையில் ஓட முற்படுகிறார். ராமகிருஷ்ணன் அதிகக் கொதிப்படைந்துவிட்டதை அறிந்த பகவான், ''நாம் சாதுக்கள்... நமது தர்மத்தை நாம் கைவிடக் கூடாது. இந்த உலக்கையால் நீ அவர்களை அடித்தால் அவர்களில் ஒருவர் இறந்துவிடவும் கூடும். அதற்கான பழியை உலகம் நம்மீதுதான் போடும். தவிர அவர்கள் தவறான பாதையில் அழைத்துச் செல்லப்பட்டவர்கள். அறியாமை அவர்களுடைய கண்களை மறைத்திருக்கிறது. ஆனால் நம்மைப் பொறுத்தமட்டில் எது நல்லது என்று நமக்குத் தோன்றுகிறதோ, அதையே செய்வோம்... சில சமயம் உன்னுடைய பற்கள் உன் நாக்கையே கடித்து விடுகின்றன. அதற்காக நீ உன் பற்களையே பிடுங்கி விடுகிறாயா, என்ன?'' என்று கூறி ஆத்திரமடைந்த ராமகிருஷ்ணனை அமைதியுறச் செய்கிறார். ஒருவாறாக இரவு இரண்டு மணிக்கு அந்தத் திருடர்கள் அவ்விடத்தை விட்டு அகல்கின்றனர்.

இச்சம்பவம் நிகழ்ந்தபொழுது பகவான் ஆசிரமத்துக்கு வந்து இருபத்தி ஆறு வருடங்கள் கழிந்திருந்தன. இந்த இருபத்தி ஆறு வருடங்களில் பகவானிடம் வேரூன்றி வளர்ந்துவிட்ட ஒரு வைராக்கிய குணத்தையும், அஹிம்சைத் தன்மையையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் எல்லாவற்றுக்கும் மேலாகப் பிரபஞ்சத்தில் யாவரும் சமம்; அடிப்பவனும், அடிபடுபவனும் ஒருவனே என்ற அத்வைத தத்துவத்தை அகில உலகுக்கும் எடுத்துரைக்கும் அரிய பணியையும் இவ்வையகத்துக்கு உறுதிப்படுத்திக் காண்பிக்கவே ஆசிரமத்துக்கு அத்திருடர்கள் வந்திருக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்றுகிறது.

[ஸ்ரீ நரசிம்ம சுவாமிகள் எழுதியுள்ள Self Realisation *என்ற புத்தகத்திலிருந்து எடுத்து எழுதியவர்* **குடசின்**.*]*

SREE VISALAM CHIT FUND LTD.
SVCE
H.O. TIRUNELVELI

| உயர்வின் சின்னம் |

(Estd. : 6-1-1947)

ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிமிடெட்

பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் :
திருநெல்வேலி - 6 போன் : 274

மத்திய அலுவலகமும், முதலீடுகள் பெற்றுக்கொள்ளுமிடமும் :
61 - B, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை -17
போன் : 444532

31 - 3 -1968ல் அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 5 லட்சம்
மொத்த ஆஸ்திகள் 1.52 கோடி. சீட்டில் ஈடுபடுத்திய தொகை ரூ.3.05 கோடி

கல்கத்தா ரிசர்வ் பாங்க், பாங்க அல்லாத நிதி கம்பெனிகள் டிபார்ட்மெண்ட் 29 - 10 - 66ல் வெளியிட்ட நோட்டிபிகேஷன் DNBC 1/ED (5) 66/- பாரா 2 (I) (f)ன் எக்ஸ்பிளனேஷன் (x)ன் படி.

காரண்டி செய்த லோன் வாங்கப்படுகிறது

தவணை	வட்டி விகிதம் ரூ. 300- லிருந்து ரூ. 5,000 வரை	ரூ. 5,000-க்கு மேல்
ஒரு வருடம்	$8\frac{1}{2}$%	9%
இரண்டு வருடம்	9%	$9\frac{1}{2}$%

6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி செக்குகள் அனுப்பப்படுகின்றன. அவைகளை எங்கள் எந்தக் கிளையிலும் ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

தொழில் விபரம்

பிரதி மாதம், மாதம் மும்முறை, இனைசரி உள்ள ஏலச்சீட்டுகள் நடத்துதல், ரூ. 10,000 வரை மதிப்புள்ள ஏலச் சீட்டுகள் எங்கள் 27 ஆபீஸ்களிலும் நடத்தப்படுகின்றன.

அலுவலக நிர்வாகம்

மானேஜிங் டைரக்டர் :
ஸ்ரீ AR. ராமசாமி,

டைரக்டர்கள்:
ஸ்ரீ M. A. M. கோவிந்தன் செட்டியார்
ஸ்ரீமதி RM. மெய்யம்மை ஆச்சி

மத்திய அலுவலக மானேஜர்,
ஸ்ரீ K. A. ராம், பி. ஏ., பி. எல்.

கடந்த மூன்று வருடங்களில் ஆதாயமும் டிவிடெண்டும் :

வருடம்	வரி கொடுப்பதற்குமுன் லாபம்	வரி கொடுத்த பின் லாபம்	டிவிடெண்ட் விகிதம்
1965-66	61908-72	25170-72	13%
1966-67	79686-41	27686-41	16%
1967-68	89468-58	28468-58	17%

பொறுப்புகள் 31-3-1968

செலுத்தப்பட்ட மூலதனம் & ரிசர்வ் நிதி	ரூ.	1,40,075
பிக்ஸட் டிபாஸிட்	ரூ.	3,42,575
ஷேர் ஹோல்டர் டிபாசிட்டுகள்	ரூ.	2,75,050
காரண்டி செய்த லோன்கள்	ரூ.	10,33,475
தற்காலிகக் கடன்	ரூ.	1,15,991
சீட்டு இதர பொறுப்பு வகைகள்	ரூ.	1,33,79,414
மொத்தம்	ரூ.	1,52,86,580

புதிய M. குரூப் ரூ. 25,000 மதிப்புள்ள சீட்டுகள் எங்கள் 12, கிலேதார் தெரு, திருச்சி (போன்: 4276) யிலும்,43, விஸ்வநாதராவ் ரோடு, மாதவநகர், பெங்களூர்-1 (போன்: 75955)லும் நடைபெறும்.

ஆடிட் செய்த பாலன்ஸ் ஷீட்டுகள் வேண்டுபவருக்கு அனுப்பப்படும்.

K. A. ராம், பி. ஏ., பி. எல்.
மத்திய அலுவலக மானேஜர்

அனுமதித்த தேதி: 28-10 68

AR. ராமசாமி
மானேஜிங் டைரக்டர்

PARAMOUNT

அதிர்ஷ்டமென்ன சொல்லுவேன்!

'அபர்ணா'

“**பா**ர்த்தீர்களா, இதை? ஒற்றைக் கல்லினால் ஆன பெரிய நந்தி. நீளம் பத்தொன்பது அடி; அகலம் பன்னிரண்டு அடி; உயரம்...''

ஆத்திரமாக வந்தது, கல்யாணத்துக்கு. எவ்வளவோ சொந்த வேலைகளைக் கெடுத்துக் கொண்டு, இவர்களுக்கு ஊர் சுற்றிக் காட்ட வந்தால், அதுகளுக்குக் கொஞ்சமாவது 'இது' வேண்டாம்? நந்தியைக் காட்டும்போது கறுப்புக் கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக்கொண்டு பெரிய கோபுரத்தைப் பார்க்கிறதுகள்! கீச்சுக் குரலில் என்னென்னவோ மொழிகளில் பேசிக் கொள்ளுகிறதுகள்! அட சட், அவனைப் பார்த்து ஒரு கேள்வி கணீரென்று கேட்கக் கூடாது?

கல்யாணம் விடுவதாக இல்லை. பள்ளியில் அவன் படிக்கும்போது, சரித்திரப் பாடத்தில் இரட்டை இலக்க மதிப்பெண் வாங்கியே அவன் அறியான். அதற்குக் கழுவாய் செய்வதைப் போல் சென்ற ஒரு வாரமாகக் கரிகால சோழன் வரலாற்றிலிருந்து சரபோஜிக்கு வாரிசு காலம் வரை தஞ்சை சரித்திரத்தைக் கரைத்துக் குடித்து விட்டிருந்தான். அவன் பாடுபட்டுச் சேகரித்த அறிவின் சில துளிகளையாவது அதுகள் செவிகளில் தெளித்து, இதயத்தைக் குளிரப் பண்ணி, கம்பெனி டைரக்டரின் நன்றிக்குப் பாத்திரமாகி, வேலை உயர்வு பெற்று, கம்பெனிக் காரில் ஊர் சுற்றி, முதல் வகுப்பில் பிரயாணம் செய்து...

...முதுகில் ஏதோ பொருள் படுவதாகத் தோன்றவே திரும்பிப் பார்த்தான், கல்யாணம். அழகுப் பை ஒன்று அவன் முதுகை வருடிக் கொண்டிருந்தது. பையினும் அழகிய கை ஒன்று அதைப் பிடித்துக் கொண்டிருந்தது. கைக்கு உரியவள் மிஸ் மல்ஹோத்ரா.

''என்ன இப்படி, அந்தக் கல்லைப் பார்த்து மயங்கி நின்று விட்டீர்கள்?... எத்தனை நேரமாய்க் கூப்பிடுகிறேன், உங்களை? சரி, காது கொஞ்சம் கமார் போலிருக்கிறது என்றுதான் அழகுப் பையால் உங்களைத் தொட்டேன்!''

என்று லட்டு லட்டாக மொழிந்தாள் மல்ஹோத்ரா.

'நடுவில் அழகுப் பை எதற்கு, இடைஞ்சலாய்? உங்கள் கையாலேயே தொட்டிருக்லாமே?...உங்கள் விரல்கள் பட்ட முதுகுப் பகுதி பனியாய்க் குளிர்ந்திருக்குமே!' என்ற பைத்தியக்கார எண்ணங்களில் இறங்கவில்லை கல்யாணம். மிஸ் மல்ஹோத்ரா, மிஸ் இந்து மதி தேவிக்கும் தனக்கும் இடையே உள்ள தூரம் சென்டி மீட்டருக்கு அரை



மில்லி மீட்டர் குறைந்தாலும் பதறிப் போய்விடுவான், அவன். அவ்வளவு நல்ல பிள்ளை! இடைவெளியில் அவ்வளவு கவனம்; கருத்து.

அவனுக்கு மறுபடியும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. கல்யாமே, கல்! எத்தனைக் கெத்தனை பேரிசாய், உயிரோவியமாய்ச் செய்திருக்கிறுன் சிற்பி!....

''இ...இல்லே, மேடம்.... உண்மையில் நான் நந்தியின் அழகை ரசித்துக் கொண்டிருந்தேன். சரித்திரப்படி பார்த்தால், இந்த மண்டபத்தின் தூண்களும், மேல் விதானமும் பிற்காலத்து மன்னர்களால் கட்டப் பட்டதாகத் தெரி.....'

''போகலாமா, மிஸ்டர் கல்யாணம்...'' என்று இடைமறித்தாள், இந்துமதி தேவி.

'அட, ஞான சூன்யங்களே!' என்று மானசீகமாய்த் தலையில் அடித்துக் கொண்டு மேலே நடந்தான், கல்யாணம்.

பெரிய கோவிலே விட்டு வெளியே வந்து டாக்ஸியில் ஏறிக் கொள்ளும்வரை அவன் வாயைத் திறக்கவில்லே. தன்னுடைய சமீபக் கொள்முதலான சரித்திர அறிவைக் காட்டிக் கொள்வதற்குத் தகுந்த சந்தர்ப்பம் வாய்க்கவில்லேயே என்ற துயரம் ஒருபுறம் இருக்க, 'வேறு என்ன செயல்களேச் செய்வதன் மூலம் 'இதுகள்' மனத்தை மகிழ்விக்க முடியும்?' என்ற ஆராய்ச்சியிலும் அவன் தீவிரமாய் ஈடுபட்டிருந்தான்.

கார் நகர்ந்தும், 'உஸ்ஸ்...' என்று மூச்சு விட்டாள், மல்ஹோத்ரா — சற்றுப் பூசினுற்போன்ற உடல்; அகன்ற முகம்; சிவந்த வாய்; ரவிக்; கருகருவென்ற கூந்தல்...

'ஜமாய்டா கல்யாணம்' என்று கல்யாணத்தின் அந்தராத்மா ஊக்கவுரை வழங்கிற்று. அப்போது அவன் நெஞ்சில் ஒரு திட்டம் உருவாகி யிருந்தது.

''டிரைவர், கொஞ்சம் நில்லு!'' என்றுன்.

கார் நின்ற இடத்துக்கு எதிரே பெரிய ஹோட்டல். முன் கதவைத் திறந்து கொண்டு கல்யாணம் இறங்கினுன். பின் கதவைத் திறந்தபடி, தலையை ஒருபறமாய்ச் சாய்த்து. ''தயவு செய்து இறங்குகிறீர்களா?'' என்று அவர்களே நோக்கிப் பணிவுடன் கேட்டான்.

''ஓ!...இது என்ன?...ஹோட்டல் மாதிரி இருக்கிறதே?'' என்று கண்களேப் படபடத்துக் கொண்டு கேட்டாள், தேவி—ஒற்றைநாடி; போனி டெயில்; சாய உதடு; முத்து மாலே; சல்வார் — கம்மீஸ்.

''ஆமாம். ஹோட்டல்தான்!...''

''சரஸ்வதி மஹாலுக்கு அல்லவா போவதாகச் சொன்னீர்கள்?...''

''சொன்னேன். அங்கேதான் போய்க் கொண்டிருக்கிறேம். இடையில், கொஞ்சம் தாகசாந்தி செய்து கொண்டு போகிறேம்! அவ்வளவுதான்....''

''இந்து. நீ பேசாமல் இறங்கு. இதுவும் ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற கட்டிடமாகத்தான் இருக்க வேண்டும். இத்தனே நாட்களாக எதுவும் இல்லாவிட்டாலும் மிஸ்டர் கல்யாணம் ஸ்பெஷலாய் ஆராய்ச்சி செய்து இப்போது கண்டுபிடித்திருப்பார்!'' என்ற மிஸ் மல்ஹோத்ரா, அவனேப் பார்த்து, ''என்ன, நான் சொல்வது?'' என்று கேட்டாள்.

இதைக் கேட்டதும் இந்துமதி சிரித்த சிரிப்பு இருக்கிறதே. அது அவனே அணு அணுவாய் வதைத்தது. விதியே என்று அவனும் மழுப்பலாய்ச் சிரித்தான்.

பதினேந்து நிமிஷங்களுக்குப் பின், பில்லேக் கொடுக்கும்போது ஒரு சிறு தகராறு. இரண்டு குமாரிகளின் அழகுப் பைகளிலிருந்தும் மணிபர்ஸ் வெளிப்பட்டதே தவிர, மணிபர்ஸிலிருந்து பணம் வெளிவரவில்லே. 'வெறும் நாலே கால் ரூபாய்....சுண்டைக்காய்த் தொகை' என்று மனத்தோடு சொல்லிக் கொண்டான் கல்யாணம். அவனுக்கு மட்டும் வேலே உயர்வு கிடைத்தால், மாதம் நாற்பது என்ன, அறுபது, எழுபது ரூபாய் அதிகச் சம்பளம் கிடைக்காதா? சிறிய மீனேப் போட்டுத்தான் பெரிய மீனேப் பிடிக்க வேண்டும். இம்மாதிரியான அருமையான வாய்ப்பு அவன் கம்பெனியில் வேறு யாருக்கேனும் கிடைக்குமா? ராமதுரையும், தேவநாதனும் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தார்களே? அவர்களுக்குக் கிடைத்ததா? 'எனக்குப் புதுக் கோட்டையில் வேலே இருக்கிறது. அங்கே போய்விட்டுத் திரும்பும் வழியில் தஞ்சாவூரில்...' என்று ஆரம்பித்த



குருராஜனையும் ஒதுக்கி விட்டார், மானேஜர்: 'என் சொந்தக் கிராமமாகிய ஆலமங்கலத்துக்குப் போக வேண்டியிருப்பதால் மூன்று நாட்கள் லீவு தேவை' என்று கல்யாணம் எழுதிக் கொடுத்த மனுவில் அதிருஷ்ட தேவதை ஒளிந்து கொண்டிருந்தாள்.

''கல்யாணம்!'' என்று அதிகாரமாய் அழைத்தார், மானேஜர்.

எதிரில் போய் நின்றான்.

''உனக்கு ஒரு வாரம் லீவு!... என்ன, முழிக்கிறே?... நம்ம கம்பெனி டைரக்டர் ஒருவரின் சொந்தக்காரப் பெண்கள் இரண்டு பேர், தமிழ் நாட்டைச் சுற்றிப் பார்க்க வருகிறார்கள், டில்லியிலிருந்து. தெரியுமா, உனக்கு?''

''யெஸ், ஸார்!''

''அவர்கள் மதுரைக்குப் போய்விட்டுத் தஞ்சாவூர் வருவார்கள். ஸ்டேஷனில் அவர்களைச் சந்தித்து, ஊரைச் சுற்றிக் காண்பித்து, ரயிலேற்றி விடுவது உன் பொறுப்பு. என்ன?''

''ஓ...ஓ... என்னால் முடிந்த உதவிகளைச் செய்கிறேன், ஸார். நீங்கள் சொல்கிறபோது நான் எப்படி மறுக்க முடியும்?''

கிடைத்தற்கரிய வாய்ப்பை ஓர் ஏணியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தீர்மானித்து விட்டான், கல்யாணம். அதன்படி தான் நடந்து கொண்டும் வருகிறான். இல்லா விட்டால் டாக்ஸி, ஹோட்டல், அது. இது என்று செலவு செய்ய அவனிடம் கொட்டியா வைத்திருக்கிறது? பத்து மைல்களுக்கு அப்பால் ஆலமங்கலத்தில் ஒரு பழைய வீடும், பத்து மா நிலமும் இருப்பதைத்தானே அவன் வானளாவப் பீற்றிக் கொண்டிருக்கிறான்!

கார் நின்றது.

''முதலில் தர்பார் ஹாலைப் பார்த்து விட்டு வருவோமே?'' என்றான்.

ஒரு தலையசைப்பு. மன்னிக்கவும்; இரண்டு தலைகளின் அசைப்பு.

கிட்ட வந்து பார்த்தால்...கேட்டு பூட்டியிருந்தது.

வெளியே வந்து, காவற்காரனிடம் நயந்து பேசி, நைச்சியம் பண்ணி, ஓ...ஓ காட்டி, 'சம்திங்' கொடுப்பதாகக் கோடி காட்டிய பின் 'கேட்டு' திறந்து கொண்டது.

''சீக்கிரம் திரும்பிடுங்க. மணி ஒன்ணாயிடுச்சி. யாரும் உள்ளே போகக் கூடாதுன்னு ஆர்டர். ஆமா. வேற யாரும் உள்ளே நுழையாமே பூட்டிக்கிறேன்...''

இளிப்பாய் இளித்துக் கொண்டு இருவரையும் அழைத்துக் கொண்டு, உள்ளே நுழைகிறான், கல்யாணம். 'ஹோ' என்று பரந்த மைதானம். ஒரு புறமாய் மண்டபம். மேற்கூரையில் வண்ண ஓவியங்கள்; கதை வேலைப்பாடுகள்.

கல்யாணத்துக்கு இவற்றில் அக்கறை இல்லை: சிறு வயதில் எத்தனையோ தடவை பார்த்திருக்கிறான்.

குமாரிகள் கழுத்து வலிக்கப் பார்க்கிறார்கள். வியர்வையில் கரைந்து திட்டுத் திட்டாய்ப் பவுடர். செழுமையான கழுத்து. 'இது' 'அது' சற்று மங்கலாய் இருக்கிறது. புஷ்டியான கழுத்து — மேல் பட்டை உரித்த வாழைக் கட்டை மாதிரி. 'அது' நீண்டு, தொண்டையில் உருளை ஏறி இறங்கி... சே!

''மிஸ்டர் கல்யாணம்:::'' என்று இந்துமதி கூப்பிட்டு அவன் சிந்தனையைக் கலைத்தாளோ, அவன் பிழைத்தானோ! ''என்... எ...ன்... என்ன?''

''இது யார் கட்டிய மண்டபம்? எந்த நூற்றாண்டில் கட்டியது? கடைசியாக எப்போது தர்பார் நடந்தது?....''

கல்யாணம் அமுங்கியே போய்விட்டான், கேள்விகளின் அடுக்கில்!... குமாரிகளின் கழுத்தை ரசிக்கப் போய் இருநூறு செஞ்சுரி மீட்டருக்கு அப்பால் நின்று கொண்டுதான்!— அவன் சரித்திர ஞானம் பறந்தோடிப் போய் விட்டதே?....

''இது... இதுவா?... பராந்தக சோழனுடைய பட்டத்தரசியின் மூன்றாவது குமாரனாகிய எட்டாம் குலோத்துங்கச் சோழனால், கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. அவன் சாளுக்கியர்களோடு போர் புரியச் செல்கையில் பீரங்கிப் படையினால் பெரு நாசம் ஏற்படவே....''

மிஸ் மல்ஹோத்ராவின் உதடுகளின் நெளிவில் கல்யாணம் தன் பேச்சையே இழந்துவிட்டான். கி. மு. இரண்டாம் நூற்றாண்டு.... சாளுக்கியர் பீரங்கிப் படை.....!

வெளியே வந்தார்கள். 'தஞ்சாவூர் பிளேட்'டைப் பார்க்கா விட்டால் உலா பூர்த்தியாகாதே. சங்கீத மகால் கட்டிடத்துக்கு மேலே பொம்மைத் தொழிற்கூடத்தில், வேலைப்பாடமைந்த தாளங்களையும் பல வகைக் கிண்ணங்களையும் பார்த்தார்கள்.

''வொண்டர்ஃபுல்!'' என்றாள், ரவிக்.

''மார்வலஸ்!'' என்றாள், செல்வுதடு.

கல்யாணம், ஏதோ தானே ஒரு மகா கலைஞன் போல, புளகித்துப் போனான். அத்துடன் நிற்கவில்லை. கையகலம் இரண்டு தட்டுகள் வாங்கி, அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப் போனான்.

''நோ, நோ'' என்று இரு குரல்கள் ஒரே குரலாய் வந்தன.

''நீங்கள் மறுக்கக் கூடாது. என் திருப்திக்காகவேனும் இதைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.... எங்கள் கலை ஆற்றலை உங்கள் மனிதர்களிடம் காண்பிக்க வேண்டும்...''

அவன் கையிலிருந்து ஒரு தட்டை 'லபக்'கென்று பிடுங்கி, தன் பைக்குள் திணித்துக் கொண்டாள், இந்துமதி. மற்றவளும் கூட.

அன்றிரவு எக்ஸ்பிரஸில் அவர்களை அனுப்பி வைத்த பின்புதான் உல்லாசப் பெருமூச்சு விட்டான் கல்யாணம். அப்பாடி! அவர்களுக்கு ஒரு குறையும் வைக்கவில்லை. குமாரிகளுடைய சிறு சிறு சௌகரியங்களைக் கூட நிறைவேற்றியாகி விட்டது. 'அடாடாடா, தஞ்சாவூரில் மிஸ்டர் கல்யாணம் எங்களுக்குச் செய்த உபசாரத்தை மறக்க முடியுமா? அவருடைய சுறுசுறுப்பையும் கண்ணியமான போக்கையும் என்னவென்று சொல்வது?.... எங்களிடம் ஒரு பைசா கூட வாங்கிக்கொள்ள முடியாது என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டாரே!'' — மல்ஹோத்ராவும் இந்துமதியும் இப்படிப் புகழ மாட்டார்களா என்ன?

மகிழ்ச்சி தாண்டவமாடும் முகத்துடன் ஒரு வாரம் கழித்துக் காரியாலயத்துக்குள் நுழைந்தான், கல்யாணம். மனத்தினுள் ஒரு

வேட்கை. எல்லாரும் சேர்ந்து வந்து வாழ்த்துக்கள் கூறினால் என்ன பதில் சொல்வது என்ற தவிப்பு. பதவி உயர்வு உத்தரவு அதற்குள் வந்திருக்க நியாயமில்லை என்று ஒரு சமாதானம். என்றைக்கு வருமோ என்று ஓர் ஏக்கம்.

இருக்கையில் அமர்ந்ததும் சுற்றி வளைத்துக் கொண்டு விட்டார்கள், மற்ற எழுத்தர்கள்.

''நீ ரொம்ப ரொம்பக் கவனித்துக் கொண்டாயாமே, தஞ்சாவூரில்?... அந்தக் கொத்தவரங்காய் சொல்லிற்று!'' என்று குருராஜன் ஆரம்பித்தான்.

கல்யாணம் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டான். ''ஓ! இந்துமதி தேவியா?''

''அவள் இந்துமதியோ, சந்து மதியோ! பெயரை யாரப்பா கேட்டார்கள்? ஆமாம், அந்தக் கத்திரிக்காய்க்கு என்ன பெயர்?''

''அவன்தான் மிஸ் மல்ஹோத்ரா!..... வெளு வெளு என்று என்னமாய் வெளுத்துக் கட்டினான், இங்கிலீஷில்!... ராமதுரையாக இருந்தால் திறந்த வாய் மூடாமல் அவள் வாயையே பார்த்துக் கொண்டிருந்திருப்பான்!...''

''அந்தப் பெண்ணும்தான் கதை கதையாகச் சொன்னான் உன்னைப் பற்றி. தஞ்சாவூர்ப் பிளேட் கொடுத்தாயாமே!'' என்றான், தேவநாதன். அடி மனத்தில் அவனுக்குப் பொறாமை. தனக்குக் கிடைக்க வேண்டிய ஓர் அரிய வாய்ப்பை இந்தக் கல்யாணம் பயல் அடித்துக் கொண்டு போய்விட்டானே என்று ஓர் இகழ்ச்சி.

மானேஜரும் கல்யாணத்திடம் வெகு உற்சாகமாகத்தான் பேசினார். கல்யாணம் அசட்டுத்தனமாய்ச் சிரித்தபடியே அவர் கூறியதைக் கேட்டு ஆனந்த வெள்ளத்தில் அமிழ்ந்து அமிழ்ந்து, கிழே கிழே போய்க் கொண்டிருந்தான்! அவன் லட்சியம் கைகூடும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்ற நம்பிக்கை பிறந்தது.

கல்யாணம் அன்றைக்குப் படு சந்தோஷமாக இருந்தான். கிராமத்துக்குப் போக வேண்டும் என்று அவன் லீவு கேட்டது வெறும் கண் துடைப்பு. திருச்சியில் பெண் பார்க்கப் போயிருந்தான் அவன். பெண்ணைப் பிடித்திருந்தது அவனுக்கு. இரண்டு தினங்களுக்கு முன்னர் பெண்ணின் தகப்பனார்வந்து வெற்றிலை பாக்கு மாற்றிக் கொண்டதாகக் கல்யாணத்தின் தந்தை எழுதியிருந்தார். அவன் சந்தோஷப்படுவதற்குக் கேட்பானேன்.

காரியாலயத்துக்குள் பரம சாதுவாய் அடியெடுத்து வைத்தான். சற்றுத் தாமதமாகி விட்டதால் உள்ளூறச் சற்று உதைப்பு. மானேஜர் கடுமையாய் அதட்ட மாட்டார் என்றாலும், 'கல்யாணம், நீயெல்லாம் லேட்டாய் வரலாமோ?' என்று கேட்காமலா இருப்பார்?

இருக்கையில் அமரப்போன அவனைப் பிடித்திழுத்தான், சாரங்கபாணி. 'இப்படி கையை கொடு' என்று கேட்டு, கையைக் குலுக்கினான்.

''திருமண வாழ்த்துக்கள் — முன்கூட்டியே! கல்யாணம் பிரமித்து விட்டான்.

''எப்போடா, பெ. பார்ட்டி?'', ''என்றைக்குக் கல்யாணம்?'', ''நீ பெரிய ஆள்டா! விஷயத்தை வெளியே விடாமல் அமுக்கமாய் இருந்துவிட்டே?'', ''சரி, நாளைக்கே நீ அசிஸ்டெண்ட் மானேஜர், அப்புறம், மானேஜர்; அப்புறம்....''

கேரோவிலிருந்து மீள முடியவில்லை, கல்யாணத்தால். திருமணச் செய்தி எப்படித் தெரிந்தது? அது கிடக்கட்டும். உதவி மானேஜர், மானேஜர் என்று...

''சார், மானேஜர் கூப்பிடுகிறார்!...''

''உனக்கு அதிருஷ்டம் வருந்திருக்கிறதடா கல்யாணம்!...'' என்று சலுகையோடு 'டா' வினார், மானேஜர்.

''ஹி...ஹி...''

''உனக்கு எக்கச்சக்கமாய்ப் பிரமோஷன் காத்துக் கொண்டிருக்கிறது.!...''

''...ஹி...ஹி...''

''இந்துமதி தேவி ஒற்றைக் காலில் நிற்கிறாளாம்....''

''ஹி...ஹி...''

''—உன்னைத்தான் மணந்து கொள்ள வேண்டுமென்று!...''

''ஹ...ஹ?...''


''ஆமாம். சொந்த முறையில் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் ஷாம்லால் பிரஸாத். கடிதத்தைப் படித்ததும் எனக்குச் சந்தோஷம் தாங்கவில்லை — எல்லோரிடமும் சொல்லி விட்டேன்!...''

அந்த 'வெறும் அப்பாவிக் கொழுந்து' பொட்டென்று கிழே விழுந்தான்.

''என்ன இருந்தாலும் இவ்வளவு மகத்தான செய்தியை, பளிச்சென்று அவனிடம் சொல்லியிருக்கக் கூடாது, சார், நீங்கள்?.... பாருங்கள், அவ்வளவு மகிழ்ச்சியை அவனால் தாங்க முடியவில்லை....?''

ஆனால், ஐயகோ, கல்யாணத்தின் மயக்கத்துக்குக் காரணம், அவர்கள் எண்ணத்துக்கு நேர் எதிர்மாறானது என்பதை அவன் கண் விழித்தல்லவோ சொல்ல வேண்டும்!

......அமைதி கண்ட அதிபரும்



அடிதடி சண்டையை நிறுத்தி அமைதி காண விரும்பிய உணவு விடுதியின் அதிபர் ஜப்பானிய தேசிய கீதம் இசைத்தட்டை வைத்தார். தேசிய கீதம் ஒலிக்கக் கேட்டார்களோ இல்லையோ அடுத்த விநாடி அந்தக் குண்டர்கள் சண்டை பிடிப்பதை நிறுத்திவிட்டு அமைதியாக நின்றார்கள். தேசிய கீதம் முடிந்த பிறகு அவர்கள் மீண்டும் சண்டையைத் தொடரவில்லை. அந்த இரண்டு நிமிஷ நேரத்தில் அவர்களுடைய வெறி அடங்கிக் கோபம் தணிந்துவிட்டது!

உண்மை நிகழ்ச்சியை எழுதியவர்
வி. எஸ். ஸங்கரன்கர்

வட்ட மேஜை

- என்றைக்கும் பொருந்தும் யோசனை
- கை வைக்காதீர்!
- ......பிற்பகல் நிகழ்ந்தது!
- இந்தக் காலத்துக் குழந்தைகளுக்கு
- அந்தக் காலத்து நினைவு

பேராசிரியர் கல்கி அவர்கள் 1952ஆம் வருடத்திலே சினிமாவைப் பற்றி எழுதிய கட்டுரையை அண்மையில் படித்தேன். என்னமாகத்தான் சாடியுள்ளார்! அடடா! இன்றைய கட்டிப் புரளும் சினிமாக்களும் எலந்தைப் பழப் பாடல்களும் தான் தாளாவதற்குக் கல்கி பிறக்க மாட்டாரோ என்ற ஏக்கம்தான் எழுகிறது. சம்சாரம் படமும், பாதாளபைரவி படமுமே அவர் பேனாமுனையில் அத்தனை பாடுபட்டால் தற்போது வெளிவரும் படங்கள் என்ன பாடுபடும்! 1952ம் வருட நிலை 1968ம் வருடமாகியும் இன்னும் மாறவில்லை என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணருவார்களா? கட்டுரையின் முடிவில், ''பணம் சம்பாதிப்பதற்காகப் படங்கள் எடுக்கட்டும். 'பாமர' மக்களுக்குக் களிப்பூட்டுவதற்காக ஆடல் பாடல்கள் நிறைந்த படங்கள் எடுக்கட்டும். ஆனால் பத்துப் படங்களுக்கு ஒரு படம் வீதமாவது நம் நாட்டையும், நாட்டு மக்களையும் உயர்த்தக் கூடிய முறையில் படம் எடுக்கக் கூடாதோ? வெளிநாடுகளில் புகழ் பெறக்கூடிய படமாக எடுக்கக் கூடாதோ?'' என்று எத்துணை பக்குவமாகக் கூறியுள்ளார் கல்கி?

நெமிலி
21–11–68 ஜி. கே. வி. நாகலட்சுமி

□ □

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் ராஜ ராஜன் பிறந்த நாளையொட்டி நடந்த பெருவிழா, பிரகதீசுவரப் பெருமானுக்கு மகிழ்ச்சியளித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தற்பொழுது மத்திய அரசாங்கப் புதைபொருள் ஆராய்ச்சிப் பிரிவின் கீழ் பாதுகாக்கப்பட்டு வரும் தஞ்சைக் கோயிலை சென்னை அரசாங்கப் புதைபொருள் ஆராய்ச்சிப் பிரிவு தன் கீழ் கொண்டு வர முயற்சி செய்வதாகத் தெரிகின்றது. அத்துடன், மதுரைக் கோயிலைப் போல் புதுப்பிக்க வேண்டும் என்ற எண்ணமும் நிலவி வருகின்றது. தஞ்சைக் கோயிலை எப்படி ராஜ ராஜன் அமைத்தானோ அவ்வாறே இருக்குமாறு பாதுகாத்து வருதல்தான், நாம் ராஜ ராஜனுக்குச் செய்யும் மரியாதை. இக்கோயில் மத்திய அரசாங்கப் புதைபொருள் ஆராய்ச்சிப் பிரிவின் கீழேயே இருக்கட்டும். இப்பொழுது இருக்கும் கோயிலை நன்கு தூய்மைப்படுத்தி, தினவழிபாடுகள் செம்மையாக நடைபெறச் செய்வோம். கோயிலின் பழமையை எப்பாடுபட்டாயினும் காத்து வருவோம். அதுவே பெருவுடையாருக்கு மகிழ்ச்சியளிக்கும். ராஜ ராஜனும் மகிழ்வான்.

அம்பட்டூர்
20–11–68 பாலகோபால்

கல்கியில் வெளியான 'முற்பகல் செய்யின்' என்ற சிறப்புச் சிறுகதையில் ஆசிரியர் 'ரோஹிணி' மாணவர்களின் இன்றைய நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். மனோகரனுக்கு ஏற்பட்ட அனுபவத்தை ஒவ்வொரு மாணவனும் சிறிது நேரம் சிந்தித்துச் செயல்பட்டால் மாணவர் சமுதாயம் நிச்சயம் பிழைத்துவிடும்.

திருச்சி–1
12–12–68 வி. எஸ். சுதர்சனம்

□ □

''ராஜாஜி மல''ரில் நூறு ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் என்ற கட்டுரை மிகவும் நன்றாக இருந்தது. இந்தக் காலத்துக் குழந்தைகளுக்கு மிகவும் முக்கியமானது. அதைப் படித்து முடித்த என் மனது அடைந்த திருப்தியைச் சொல்லில் விளங்க வைக்க முடியாது.

பம்பாய்-79
9–12–68 கே. பத்மா

□ □

பொன்னியின் செல்வனில் வரும் நந்திபுர விண்ணகரம் என்னும் திருப்பதியின் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றுபவன், பாக்கியம் படைத்தவன். இந்த ஸ்தலம் தற்போது நாதன் கோயில் என்று அழைக்கப்படுகிறது. 108 திருப்பதிகளில் ஒன்று. இவ்விண்ணகரம் குடந்தைக்கு மிக அருகில் உள்ளது. பழையாறையிலிருந்து அரை மைல். திருமங்கை ஆழ்வாரால் பாடல் பெற்றது. விண்ணகரப் பெருமாளின் அழகான திருமேனி இரண்டாவது நந்திவர்ம பல்லவனாலும் விஜயரங்க சொக்கப்ப நாயக்க மன்னராலும் திருப்பணி செய்யப்பட்டதாகும் எனச் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் முடிவு.

நந்திபுர விண்ணகரத்தில் ஸ்ரீ ஜயந்தி உற்சவம் அழகாக நடைபெறும் காட்சியையும், ராணிகளின் வருகையையும் கோபாலர்களின் குடக் கூத்தையும் பொன்னியின் செல்வனில் அழகாக வர்ணித்து எங்களை அந்தக் காலத்துக்கே இட்டுச் சென்று விட்டார் அமரர் கல்கி.

இன்றும் மேற்படி கோயிலின் காலங்கள், நிர்வாகங்கள் செவ்வனே நடைபெற்று வந்தாலும் விமானம், ராஜகோபுரம், பிராகாரங்கள் ஆகியவை சீர்செய்ய வேண்டிய நிலையில் உள்ளன. தமிழக அரசும் ஆஸ்திக மக்களும் சரித்திர ஆராய்ச்சியாளரும் பங்கு கொண்டு புதுப்பிக்க வேண்டுகிறேன்.

நாதன்கோயில்
19–12–68 எஸ். சேஷாத்திரி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

பிரின்ஸ்
பிளேடு
-இறகின்
மென்மைபோல்
முகச்சவரம்
செய்யும்
பிளேடு!



ஃப்ளூரோ கார்பன் முனை கொண்ட

பிரின்ஸ்

ப்ளூ பிளேடுகளை உபயோகியுங்கள்

DMA-P-TAM-1007-A

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

புதுமை!

அஸ்ட்ரா... எத்தகைய பேராற்றலோடு நீங்கள் எழமுடியும் என்பதை உணர்த்தும்

திணறடிக்கிறதோ இன்றைய வாழ்வின் அசுரவேகம்... சலித்துப் பின்தங்குகிறதோ உங்கள் தென்பு? துள்ளியெழுந்து சுறுசுறுப்பான ஒரு புத்தேடு புரட்டுவீர்! அழுந்திக் கிடக்கும் உங்கள் தென்பை வெளிக்கொணருவீர்! அதற்கென்றே பிறந்துவரும் ஒரு புதிய பாலமுத பானம் அஸ்ட்ரா. இந்தியாவில் உணவியல் ஆராய்ச்சியிலே முன்னிற்கும் ஒரு நிலையத்தின் சிபாரிசுபெற்ற 4 டானிக் சத்துக்கள் இணைந்த அஸ்ட்ரா ஒரு சக்திக் களஞ்சியம். ஓடியாட உறுதுணையான உரமூட்டும் உன்னத பானம்.

துடித்தெழுந்து காலைத் துவக்க ஓர் இனிய தூண்டுகோல் அஸ்ட்ரா. உற்சாகப் பூரிப்பையே பருகுவீர்! ஊக்கத்தின் உச்சியிலே விளங்குவீர்!



தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் மட்டுமே கிடைக்கின்றன.

இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தரமான தயாரிப்பு. (ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்) லின்டாஸ்-AST.J-48 TM